Volume : 7 Issue - 12

# வைகறை வெளிச்சம்

டிசம்பர் : 2014
விலை: ரூ.20
ஆசிரியர் மு.குலாம் முஹம்மது
சபர் : 1436

## தனி நாடாகிறது பாலஸ்தீனம்




## பாபரீ மஸ்ஜித்



வழக்கின் தற்போதைய நிலை



2 அப்பாவி முஸ்லிம்கள் 8 ஆண்டுகளுக்குப் பின் விடுதலை

## மோடியின் அமைச்சரவை பற்றி நியூயார்க் டைம்ஸ்

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# அன்பகம்

நெ.17, 3-வது குருக்கு தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம்,
தஞ்சை மாவட்டம் - 612 001.

குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஓர் கல்வியகம் வேண்டும் என்ற குரல் இஸ்லாத்தை ஏற்றிடும் மக்களிடமிருந்து வந்தது.இந்த ஏக்கம் போக்கிடவே அன்பகம் எனும் கல்வி சாலை. இதற்கு முன் ஆண்களுக்கென ஒரு கல்வியகத்தையும், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் மற்றும் பெண்கள் காப்பகத்தையும் உருவாக்கி நடத்தியவரை தலைவராகக் கொண்டு இயங்குகிறது இந்த அன்பகம்.

12-09-2007 முதல் கும்பகோணத்தில் ஓர் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.
(அல்ஹம்துலில்லாஹ்)
குடும்பத்திலுள்ள ஒரு நபருக்கு ஆகும் செலவு ரூபாய் 3000/-.
மருத்துவ வசதிகள் உட்பட அனைத்தும் இலவசம்.

அன்பிற்கினிய சமுதாய பெருமக்களே!

இந்த பணிகளில் உங்களுடைய ஆலோசனைகளையும் உதவிகளையும்
தாராளமாக வழங்குங்கள்.
இவை நமது பணி. நாம் அனைவரும் இணைந்து இந்த பணிகளை விரிவாக்குவோம், நிலைநிறுத்துவோம்

## செக் / டி.டி. அனுப்புபவர்கள்

## DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயருக்கு எடுத்து , பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.
52/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

Please draw your cheqes/DD in favour of DARUL ISLAM FOUNDATION TRUST
canara bank A/C 1287101017301 Branch : St.Mary's Road, Royapettah, Chennai.
And send to : 52/1, Mannady St, 4rth Floor. Room No.7, Mannady,Cehnnai 600 001.

E-Mail : darultrust@yahoo.com, Website : www.darultrust.in



இறைவனின் அழகியத் திருப்பெயரால்

# இதழுக்குள்ளே........
















8 ஆண்டுகளுக்குப் பின் இரண்டு அப்பாவி முஸ்லிம்கள் ? - 11

எது முதலில்? - 16

மோடியின் ஆஸ்திரேலிய பயணமும் கொல்லைப்போகும் இந்தியர்களின் பணமும் - 18

ஆர்.எஸ்.எஸ். இற்கும் தீவிரவாதத்திற்கும் உண்டான தொடர்பு. - 25

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன? - 27

காவல்துறை உங்கள் நண்பனா? - 30

பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி. - 32

மோடியின் அமைச்சரவை குற்றவாளிகளின் கூடாராம்! - 34

இந்திய இராணுவத்தின் பணி என்ன? - 36

வாராணாசி பா.ஜ.க வேட்பாளரின் வெற்றி இரகசியம். - 46

**இன்னும் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் அவனுக்காக போராட வேண்டிய முறைப்படி போராடுங்கள்; அவன் உங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்; இந்த தீனில் (மார்க்கத்தில்) அவன் உங்களுக்கு எந்த சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை; இது தான் உங்கள் பிதாவாகிய இப்ராஹீமுடைய மார்க்கமாகும்; அவன்தாம் இதற்கு முன்னர் உங்களுக்கு முஸ்லிம்கள் எனப் பெயரிட்டான். இ(வ்வேதத்)திலும் (அவ்வாறே கூறப் பெற்றுள்ளது); இதற்கு நம்முடைய இத்தூதர் உங்களுக்குச் சாட்சியாக இருக்கிறார்; இன்னும் நீங்கள் மற்ற மனிதர்களின் மீது சாட்சியாக இருக்கிறீர்கள் எனவே நீங்கள் தொழுகையை நிலை நிறுத்துங்கள் இன்னும் ஜகாத்தைக் கொடுத்து வாருங்கள், அல்லாஹ்வைப் பற்றிக் கொள்ளுங்கள், அவன்தான் உங்கள் பாதுகாவலன்; இன்னும் அவனே மிகச் சிறந்த பாதுகாவலன்; இன்னும் அவனே மிகச் சிறந்த பாதுகாவலன், இன்னும் மிகச் சிறந்த உதவியாளன்.**

**அல்குர்ஆன் : 22;78**

ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ.240/-
வெளி நாடு : ரூ.1500/-

# வைகறை வெளிச்சம்

**டிசம்பர் - 2014** **ச:.பர் - 1436**

தனி இதழ் : ரூ.20/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம். இன்ஷா அல்லாஹ்.

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது.
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்
கே.எம். இலியாஸ் ரியாஜி.M.A

52/1, Mannady St, 4th Floor,
Room No.7, Mannady,
Chennai 600 001.
Tel : 044 25224887
Mob: 81481 29887
E-Mail : darultrust@yahoo.com
Web : www.darultrust.in

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdicaion of Chennai courts. Privet circulation to promote the original issue.

http:/www.facebook.com/vaigaraivelicham

# அமெரிக்காவில் தொடரும் இனவெறி!



## தலையங்கம்

நீக்ரோக்கள் தாழ்ந்தவர்கள், அவர்களின் இரத்தம் வெள்ளை நிறத்தவர்களின் இரத்தத்தை போன்றதல்ல; உயர்வானதல்ல என்று வாதாடியவர்கள் அக்கிரமக்காரர்களும் அடாவடிப் பேர்வழிகளும் அல்ல. கற்றவர்கர்ளே! அமெரிக்காவில் இன்றளவும் நீக்ரோ இரத்தம் வேறு, வெள்ளையன் இரத்தம் வேறு. இந்த இரண்டும் கலந்துவிடக்கூடாது என்ற முரட்டுத்தனத்தையும் குருட்டுப்போக்கையும் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள். அமெரிக்காவில் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் என்ற நிலையிலும்ன் பாதிரிமார் என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருக்கும் நிலையிலும் இருந்தனர். ஒரு சொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தால் போதும் நீக்ரோ ஆகிவிட வேண்டியதாகும். ஒரு சொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தால் போதும் தலைமுடி சுருண்டுவிடும். உதடு பெருத்துவிடும். முகம் தட்டையாகிவிடும். அறிவு ஒளி அணைந்து மிருக இயல்பு மிகுந்துவிடும். நீக்ரோத் தன்மை தன்னாலே வந்துவிடும். 1905 - இல் இப்படிக் கூறினார் தாமாய் டிக்சன் என்பவர். கர்த்தருக்கு பூஜை நடத்தும் புனிதப் பணியிலே ஈடுப்பட்டிருந்தார் அவர். இந்த போக்கினராக இருந்த பல்லாயிரவரில் இந்த டிக்சனும் ஒருவர். [வேர்கள் வெளியீட்டகத்தின் மால்கம் x - பக்கம்.19]

1905ல் வெளிப்பட்ட இந்த வார்த்தைகளை அமெரிக்காவின் வெள்ளையர்கள் பலரும் வேத வாக்காக நடைமுறைப்படுத்துகின்றனர். இந்த இனவெறி நிலைபிறழாமல் நீதி வழ்ங்கும் நீதிபதிகளையும் ஆட்கொண்டுள்ளது. இது மனிதத்தை கொன்று புதைப்பதற்கு சமமே!

அமெரிக்காவின் மிசௌரி மாநிலத்திற்குட்பட்ட செயிண்ட் லூயிஸ் பகுதியில் அமைந்திருக்கும் பெர்குசன் நகரம் போராட்டத் தீயினால் பற்றி எரிகிறது. கருப்பின கிறிஸ்த்துவ இளைஞர் மைக்கேல் பிரௌனை கடந்த ஆகஸ்ட்டில் அநியாயமாக சுட்டுக் கொன்ற வெள்ளை கிறிஸ்த்தவ காவலர் டெரன் வில்சன் விசாரணையின் போது பிரௌனைப் பார்ப்பதற்கு பேய் போன்று இருந்ததினால் தாம் சுட்டதாக நீதிமன்றத்தில் கூறினார்.

இதனால் அவர் மீது குற்ற பதிவு செய்ய அவசியமில்லை என்றும், அவர் தற்காப்புக்காகவே சுட்டுக் கொன்றார் என்றும் பெருநகர நீதிமன்ற த்தின் நடுவர்கள் அளித்த தீர்ப்பே இதற்கு காரணம். கருப்பின மக்கள் மட்டுமின்றி சமூக ஆர்வலர்களும் பெர்குசன் தவிர கலிபோர்னியா, சிகாகோ, வாஷிங்டன் என தங்களது போராட்டத்தை நீட்டித்து மேலும் தீவிரப்படுத்தி உள்ளனர்.

தீர்ப்பு வெளியான நவம்பர் 23 முதல் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடந்துள்ளது. ஏறக்குறைய 34 மாநிலங்களில் ஆர்ப்பாட்டம், பேரணிகளை மக்கள் தொடர்ந்து நடத்தி வருக்கின்றனர். வாஷிங்டனில் உள்ள காவல்துறை தலைமையகத்தின் முன்புறம் தரையில் படுத்தும், நியூயார்க் டைம்ஸ் சதுக்கத்தில் ஆயிரம் முறை சுற்றி வந்தும் போராட்டம் அமைதி வழியிலும் நடைபெற்று வருகிறது.

தீர்ப்பு வெளியானவுடன் பெர்குசன் நகர காவல்நிலையத்தை முற்றுகையிட்ட கருப்பின மக்கள் போலீசார் மீது கல்வீசித் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு வகையில் தமது எதிர்ப்பை தெரிவித்தனர். இதுவரை 400 பேரை போலீசார் கலவரத்தில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டி கைது செய்துள்ளனர்.

மக்களை வேவு பார்க்க ஆளில்லா உளவு விமானங்களை அரசு பயன்படுத்தி பாதுகாப்பையும் பலப்படுத்தி வருகின்றனர். ஆனாலும் போராடும் மக்களை கண்ணீர் புகை குண்டுகளால் தடுத்து நிறுத்த முடியாத போலீசார், எதிர்தரப்பில் இருந்து உண்மையான குண்டுகள் தங்களை தாக்குவதாக புரளியையும் கிளப்பி வருகின்றனர்.

மக்களை அமைதி காக்குமாறு அதிபர் ஒபாமாவும் நீதிபதிகளின் தீர்ப்பினால் தாங்கள் ஏமாற்றமடைந்தாலும் போராடும் மக்கள் அமைதி காக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மைக்கேல் பிரவுணின் குடும்பத்தினரும் நிர்பந்தத்தின் பேரில் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால் அவரது மரணத்தின் போது நடந்த போராட்டத்திற்கு போலீசின் எதிர்வினை ஊடகங்களை கிழித்து தொங்க விட்டதை ஏற்கனவே அறிந்து வைத்திருந்த மக்கள் இப்போது தங்களது நீண்ட நாள் கோபத்தை ஓரளவு தீர்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பது தான் உண்மை.

ஏழை குடும்பத்தில் பிறந்த மைக்கேல் பிரவுண் பதின்ம வயதின் இறுதியில் இருப்பவர். பள்ளியிறுதி முடித்த அவன் ஒரு ஏசி மெக்கானிக்காக பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார். சம்பவம் நடந்த ஆகஸ்டு 9 அன்று தன் பாட்டி வீட்டுக்கு நண்பன் டோரியன் ஜான்சனுடன் நடந்து சென்று கொண்டு இருந்தார். நடந்து போய்க் கொண்டிருந்த அவர்களை வேகமாக போகுமாறு வழிமறித்த காவலர் டேரன் வில்சன் எச்சரித்துள்ளர். தாங்கள் போகுமிடம் அருகில் இருப்பதால் விரைவில் சென்று விடுவோம் என்று ப்ரவுண் கூரியுள்ளார்.

தனக்கு பதில் அளித்த ஒரு எளிய கருப்பின இளைஞனுக்கு 'கொஞ்சம் திமிர்' இருப்பதாக கருதும் வில்சன் காரின் முன் ஜன்னல் வழியாக பிடித்திழுக்க முயல்கிறார். அவரிடமிருந்து தப்ப முயன்ற பிரவுணை பத்தடி தூரத்திற்குள் ஆறு ரவுண்டுகள் துப்பக்கியாள் சுட்டுக் கொல்கிறார். தன்னிடம் ஆயுதம் ஏதுமில்லை என கைகளை உயர்த்திக் காட்டிய பிறகும் சுட்ட நான்கு ரவுண்டுகள் இதில் அடக்கம்.

கருப்பின மக்கள் ஓரளவு அடர்த்தியாக வசிக்கும் கெட்டோ எங்கின்ற சேரிப்பகுதியில் வசிக்கும் பெரும்பான்மை ஏழைகளுக்கு கல்வி, வேலை வாய்ப்பு போன்றவை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகிறது. கலிபோர்னியா பகுதியே 1862 உள்நாட்டுப் போரில் அடிமை முறைக்கு ஆதரவாக இருந்த வெள்ளை நிறத்தவர்களின் பூமிதான். கணிசமாக இங்கு வசிக்கும் வெள்ளையர்கள் பழைய ரோமன் கத்தோலிக்க பிரிவினை சேர்ந்தவர்கள் அதனால் தான் இங்கே ஜார்ஜ் புஷ் போன்ற பாசிச வெரியர்களுக்கு கணிசமான ஆதரவு இருந்து வந்தது. இந்த அதிர்ச்சியும், ஆத்திரமும் அப்பகுதி மக்களின் சமூக கோபங்களை உடனடியாக கிளறி விட போதுமானதாக இருந்தது. இப்போது வந்துள்ள தீர்ப்போ முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் முயற்சி என்பதால் மக்களின் கோபம் வீதிக்கு வந்திருக்கிறது. கூடவே சமூக அதரவாளர்களும் வந்திருப்பதால் அமெரிக்க ஆளும் வர்க்கம் செய்வதறியாமல் திகைக்கிறது.

இத்துனைக்கும் இது நாள் வரை குத்துச்சண்டை வீரர் முகமது அலி உட்பட எத்தனையோ அமெரிக்க பிரபலங்களும் இன்னும் கருப்பர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தும் அவர்களின் நிலை மாறவில்லை. அலெக்ஸ் ஹேலி என்கின்ற மாலிக் அல் ஷாபாஸ் போன்ற இனவெறிக்கெதிரான கருப்பின போராளிகள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர் அவ்வளவு ஏன் கருப்பினத்தவர்களுக்கு சாதகமாக நடந்ததால் அமெரிக்க அதிபர்களே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இப்படியாக வெள்ளையர்கள் இந்த உலகை நரகமாக்கி வருகின்றனர் இந்த நரகத்திலிருந்து கருப்பர்கள் வெளியேறியாக வேண்டும்; அதற்காக தொடர்ந்து போராடியாக வேண்டும். அந்தப் போரில், அவர்கள் எந்நிலையிலும் பின்வாங்கக் கூடாது. இந்தப் போரில் அவர்கள் ஓர் உண்மையை ஒத்துக்கொள்ளவேண்டும். அது வெள்ளையர்கள் பேய்களாகப் பாய்ந்து கருப்பர்களை வழிமறிப்பார்கள்; வழிமறிப்போரை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு இலட்சிய பயணத்தை தொடர்ந்திட வேண்டும். அந்த பயணத்தின் அடித்தளம் இஸ்லாமாக இருத்தல் வேண்டும்.

“ மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தேப் படைத்தோம்; பின்னர், நீங்கள் ஒருவரையொருவர் அறிந்துக் கொள்ளும்பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; உங்களில் எவர் (அல்லாஹுவை) மிகவும் அஞ்சுபவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக்க கண்ணியமானவர்; நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்”. அல்குர்ஆன் : (49;13)

இந்த இறைக்கட்டளையை ஏட்டோடு நிறுத்திக் கொள்ளாமல் உலகின் நிலப்பரப்பில் சரிபாதியை இஸ்லாம் ஆட்சி செய்யும்போது ஆளும் அதிகாரப் பொருப்புகளில் கருப்பின மக்களும் இருந்துள்ளனர். இன்னும் அன்று நபி(ஸல்) அவர்களுடைய சமூகத்தில் உன்னதமானவராகவும் உயர்வானவராகவும் திகழ்ந்த பிலால்(ரழி) ஒரு கருப்பினத்தவரே! இன்று அந்த கருப்பின பிலால் அவர்களின் பெயரை இலட்சோப இலட்ச வெள்ளை நிற முஸ்லிம்கள் தனது குழந்தைகளுக்கு சூட்டி மகிழ்கின்றனர், இவையெல்லாம் இஸ்லாத்தில் இனவெறிக்கு கிஞ்சிற்றும் இடமில்லை என்பதனையே நமக்கு காட்டுகின்றது, அதனால் தான் நாம் சொல்கின்றோம் இனவெறி ஒழிய இஸ்லாமே நன்மருந்து.

கவர் ஸ்டோரி



மௌலவி அபுல் ஹஸன் ஃபாசி.M.A

# தனிநாடாகிறது பாலஸ்தீனம்

அதன் ஒருபகுதியாகவே கடந்த 02.06.14 காசாவை ஆட்சி செய்து வந்த ஹமாசும் - மேற்கு கரையை ஆட்சி செய்து ஃபதஹ் இயக்கமும் இணைந்து ஒன்றுபட்ட பாலஸ்தீன நிர்வாகத்தை அமைத்தன. ஒன்றுபட்ட பாலஸ்தீன அதிபராக மஹ்மூது அப்பாசும், பாலஸ்தீன நிர்வாக தலைவராக அல்ஹம்துலில்லாஹ்வும் செயல்பட்டு வருகின்றனர்.

**துருக்கியின் அரசியல் அழுத்தம்**

பாலஸ்தீனத்தை தனிநாடாக்கும் முயற்சியில் ஐ.நா. சபைக்கும், ஐரோப்பிய யூனியனுக்கும் கடும் அரசியல் அழுத்தங்களை தந்து வந்தார் இஸ்லாமிய உலகின் சிறந்த தலைவர் துருக்கி அதிபர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகான்.ஒருபக்கம் எர்துகானின் அழுத்தம். இன்னொரு பக்கம் ஐரோப்பாவில் பெருகி வரும் முஸ்லிம்களின் அழுத்தம். அத்துடன் ஐரோப்பிய அரசியலில் பங்கேற்றுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் முஸ்லிம் எம்.பிக்களின் அழுத்தம் ஆகியவற்றினால் ஐரோப்பிய நாடுகளில் பாலஸ்தீனம் தனிநாடாகுவதற்கு ஆதரவு பெருகி வந்தது.

**தனிநாடாகுவதை ஆதரிக்கும் ஐரோப்பிய நாடுகள்**

ஹங்கேரி, போலந்து, ஸ்லோவேகியா உட்பட சுமார் 130 நாடுகள் பாலஸ்தீனம் தனிநாடாகுவதை ஆதரித்துள்ள நிலையில், ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் சுவீடன் கடந்த அக்டோபர் மாதம் பாலஸ்தீனம் தனிநாடாகுவதை பாராளுமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றியது.சுவீடனின் இடதுசாரி பிரதமர் ஸ்டீபன் லாஃப்வன் **(Stefan Lofven)** தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இவ்வாறு பேசினார்." இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையிலான மோதலை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வர வேண்டுமெனில், பாலஸ்தீனம் தனிநாடாக வேண்டும் என்றார்.

முன்னதாக இத்தீர்மானம் சுவீடன் பாராளுமன்றத்தில் நிறைவேறுவதற்கு துருக்கியை பூர்வீகமாகக் கொண்ட சுவீடன் நகர்ப்புறம் மற்றும் வீட்டு வசதித்துறை அமைச்சர் முஹம்மது கப்லன் கடுமையாக பணியாற்றினார்.

இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு துருக்கியில் இருந்து காசாவுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்று இஸ்ரேலினால் வழிமறிக்கப்பட்டு துருக்கியைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ஒன்பது பேரை இஸ்ரேல் சுட்டுக் கொன்ற மாவி மர்மரா கப்பலில் பயணித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. சுவீடனைத் தொடர்ந்து கடந்த நவம்பர் 18 ஆம் தேதி (18.11.14) ஸ்பெயின் பாராளுமன்றத்தில் பாலஸ்தீனம் தனிநாடாகுவதற்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, மசோதா வெற்றியடைந்து தீர்மான மும் நிறைவேற்றப்பட்டது.

நவம்பர் 28 ஆம் தேதி பிரான்ஸ் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் அல்ஆலி இதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறார். கடந்த பிரான்ஸ் சென்றிருந்த துருக்கி அதிபர் எர்துகான் இது விஷயமாக பிரான்ஸ் அதிபர் ஹாலந்தினை

சம்மதிக்க வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்சினைத் தொடர்ந்து பிரிட்டனிலும் தீர்மானம் வாக்கெடுப்புக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கடைசியில் ஐரோப்பிய யூனியனிலும், ஐ.நா. சபையிலும் தீர்மானம் கொண்டு வர திட்டமிட்டுள்ளார் எர்துகான்.

**அல்அக்ஸா மோதலின் பின்னணி**

பாலஸ்தீனம் தனிநாடாகுவதை தடுப்பதற்காக என்னவெல்லாம் செய்ய முடியுமோ! அவை அனைத்தையும் செய்து தடுத்து வருகிறது இஸ்ரேல்.இதன் ஒரு பகுதி தான் கடந்த ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட காசாவுக்கெதிரான தாக்குதலும், இப்போது அக்டோபர் மாதம் நடந்த அல்அக்ஸா எல்லை மீறலும் ஆகும்.

1967 ஆம் ஆண்டு எது பாலஸ்தீனமாக இருந்ததோ அப்பகுதிகள் அனைத்தையும் உள்ளடக்கிய கிழக்கு ஜெருசேலத்தை தலைநகராகக் கொண்ட பாலஸ்தீனம் என்றே சுவீடன் மற்றும் ஸ்பெயின் தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதுவே இஸ்ரேலுக்கு பிடிக்காமல் போனதற்கான காரணம். ஏனெனில், இத்தீர்மானத்தின்படி இப்போது இஸ்ரேலின் ஆதிக்கத்திற்குட்ட அரபுகள் வெளியேற்றப்பட்டு முழுக்க முழுக்க யூதர்கள் வசிக்கும் பல பகுதிகளை இஸ்ரேல் இழக்க வேண்டியது வரும்.

ஆதலால் பாலஸ்தீனம் தனிநாடாகுவதை இஸ்ரேல் விரும்பவில்லை. அமெரிக்கா விரும்பவில்லை மட்டுமல்ல.. இஸ்ரேலின் கள்ள உறவு கொண்டுள்ள சில அரபுகளும் விரும்பவில்?லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனை அல்ஜஸீரா அம்பலப்படுத்தியிருந்தது (அந்நாடுகள் எவை? என்பது வைகறையை தொடர்ந்து படித்து வருபவர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல..)

இதன் ஒரு பகுதியாகத் தான் ஜெருசேலம் நகரின் மீதான தனது மேலாண்மையை உறுதிபடுத்திடவும், பாலஸ்தீனம் தனிநாடானால் அல்அக்ஸா பள்ளிவாசலை இரண்டாக்க உரிமை கோரவும் முடிவு செய்து அல்அக்ஸா வன்முறையை ஏற்பாடு செய்தது இஸ்ரேல்.

**அல்அக்ஸாவும் இஸ்லாமும்**

அல்அக்ஸா பள்ளிவாசல் இஸ்லாமிய புனிதத்தலம் என்பது உலகெங்கும் வாழும் இஸ்லாமியர்கள் ஒன்றுபட்டுள்ள விஷயமாகும். மத்ஹபுகளை ஏற்றவர்கள் - ஏற்காதவர்ககள், ஷியா - அஹ்லுஸ் சுன்னா என பல்வேறு குழுக்கள் , சித்தாந்தப் பிரிவுகள் என மேற்கில் இருந்து கிழக்கு வரை இஸ்லாமிய உலகின் அனைத்துப் பிரிவினரும் இதில் ஒன்றுபட்டே உள்ளனர்.

அல்அக்ஸா தாக்கப்பட்டால் அமெரிக்காவில் வாழும் முஸ்லிம்களும் - ஆஸ்திரேலியாவில் வாழும் முஸ்லிம்களும் ஒரே உணர்வுடன் தான் அப்பிரச்சினையை பார்ப்பார்கள். இதற்கு முன்னர் ஹிஜ்ரி 492 ஆம் ஆண்டு முதல் ஹி.583 ஆம் ஆண்டு வரை கிறிஸ்தவர்களிடம் சிறைப்பட்டிருந்த அல்அக்ஸாவை மீட்பதற்கு மாவீரன் சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபி தலைமையில் குர்துகள் போராடிய சமயத்தில் முஸ்லிம் உலகின் அனைத்துப் பிரிவினரும் சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபியின் பின்னால் தான் நின்றனர்.

இஸ்ரேலை ஏற்கலாமா? வேண்டாமா? என்பதில் இஸ்லாமிய உலகில் கருத்து வேறுபாடு இருக்கின்றது. ஆனால், அல்அக்ஸாவும் - ஜெருசேலம் நகரும் இஸ்லாமிய புனிதத்தலங்கள் என்பதில் முஸ்லிம் உலகில் கருத்து வேறுபாடு இல்லை.

**முஸ்லிம்களின் முதல் கிப்லா**

அல்அக்ஸா பள்ளிவாசலுக்கு பல்வேறு சிறப்புகள் இஸ்லாத்தில் உண்டு. அவற்றில் ஒன்று அல்அக்ஸா பள்ளிவாசல் தான் முஸ்லிம்களின் முதல் கிப்லாவாகும். ஃபர்ளு தொழுகைகளையும், ஜும்ஆத் தொழுகையையும் மதீனாவுக்கு வந்த பின்பே பாங்கு சொல்லி ஜமாஅத்தாக முஸ்லிம்கள் நிறைவேற்றினார்கள். இவ்வாறு மதீனாவில் ஆரம்பத்தில் சுமார் 16 மாதங்கள் நபி (ஸல்) அவர்களின் தலைமையில் நடத்தப்பட்ட ஜமாஅத் தொழுகைகள் அல்அக்ஸா பள்ளிவாசலை நோக்கி நடத்தப்பட்டன. திருக்குர்ஆனின் இரண்டாவது அத்தியாயமான பகரா அத்தியாத்தின் 150 ஆம் வசனம் இறங்கும் வரை இதுவே நீடித்தது. இன்று மதீனா மாநகரில் இரட்டைக் கிப்லா பள்ளிவாசல் என்ற பெயரில் பள்ளிவாசல் உள்ளது.

தொழுகையிலேயே அல்அக்ஸா திசையில் இருந்து



இடமும், மிஃராஜ் பயணம் தொடங்கிய இடமும் அல்அக்ஸா பள்ளிவாசல் தான். இந்த அடிப்படையில் மதீனாவில் உள்ள மஸ்ஜிதுன் நபவீ க்கு வருவதற்கு முன்பே நபி (ஸல்) அவர்கள் சென்ற பள்ளிவாசலும் அல்அக்ஸா பள்ளிவாசல் தான்.மிஃராஜ் பயணத்திற்கு அல்லாஹ் மஸ்ஜிதுல் ஹராமில் இருந்து நேரடியாக வானத்திற்கு அழைத்துச் சென்றிருக்கலாம்.

ஆனால் பாலஸ்தீனத்தில் உள்ள அல்அக்ஸா பள்ளிவாசலுக்கு நபி (ஸல்) ஐ அழைத்துச் சென்று, பின்பு அங்கேயே வானில் இருந்து வந்திறங்க வைத்து கூட்டி வந்தது இவை அனைத்துமே மஸ்ஜிதுல் ஹராமைப் போன்றே அல்அக்ஸா பள்ளிவாசலும் இஸ்லாத்தில் புனிதத்தலம் தான் என்பதை உணர்த்துவதே வல்லோன் அல்லாஹ்வின் நோக்கமாகும்.

மக்காவில் புனித மஸ்ஜிதுல் ஹராம் திசையை நோக்கி முஸ்லிம்கள் திரும்பியதால் அதற்கு அப்பெயர் வந்தது.மேலும் நபி (ஸல்) அவர்கள் 16 மாதங்களுக்கு பின்னர் மக்காவில் உள்ள புனித மஸ்ஜிதுல் ஹராம் நோக்கி தொழ ஆரம்பித்ததை யூதர்கள் குறை கூறினர். அதற்கு மறுப்பாக அதே பகறா அத்தியாத்தின் 142, 143 ஆகிய இரண்டு வசனங்கள் இறக்கியருளப்பட்டன.ஆக கிப்லா விஷயத்தில் அல்அக்ஸா தொடர்பாக மூன்று வசனங்கள் இறக்கியருளப்பட்டுள்ளன.

**உலகின் இரண்டாவது பள்ளிவாசல்**

உலகில் அல்லாஹ்வை வணங்குதற்காக கட்டப்பட்ட இரண்டாவது பள்ளிவாசல் அல்அக்ஸா பள்ளிவாசல் ஆகும். முதலில் மஸ்ஜிதுல் ஹராம் கட்டப்பட்டது. இரண்டாவது அல்அக்ஸா கட்டப்பட்டது. இரண்டுக்கும் இடைப்பட்ட காலம் நாற்பதாண்டுகள் என்றார்கள் அண்ணல் நபி (ஸல்).புகாரி, முஸ்லிம் உட்பட பல்வேறு நபிமொழி நூல்கள் இது குறித்த தகவல்கள் நிரம்பக் கிடைக்கின்றன.

**மிஃராஜ் பயணம் தொடங்கிய இடம்**

நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் மிக முக்கியமான நிகழ்வு ஏழு வானங்களுக்கு அப்பால் அல்லாஹ்வை அவனின் அரியணையில் போய் சந்தித்த மிஃராஜ் பயண நிகழ்வாகும்.புனித மக்கா நகரில் உள்ள மஸ்ஜிதுல் ஹராமில் இருந்து புராக் எனும் வாகனத்தில் இரவில் பாலஸ்தீனத்தில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா சென்ற நிகழ்வுவை இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்ரா பயணம் என்கின்றனர்.

நபி (ஸல்) அவர்களின் இஸ்ரா பயணம் முடிந்த

**நன்மையை நாடிச் செல்லும் பள்ளிவாசல்**

"நன்மையை நாடி மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறு பள்ளிவாசல்களுக்கு பயணம் மேற்கொள்ளப்படாது என்றார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்அவை, புனித மஸ்ஜிதுல் ஹராம் (மக்கா), புனித மஸ்ஜிதுன் நபவீ (மதீனா), புனித மஸ்ஜிதுல் அக்ஸா (ஜெருசேலம்)" (நூல் : புகாரி, முஸ்லிம்) இன்னொரு சந்தர்ப்பத்தில் இப்படிச் சொன்னார்கள் நபி (ஸல்) அவர்கள். மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுதால் 50 ஆயிரம் மடங்கு நன்மை அதிகமாக கிடைக்கும். (நூல்: இப்னு மாஜா)

**பாவங்கள் மன்னிக்கப்படும் பள்ளிவாசல்**

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "யார் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இருந்து மஸ்ஜிதுல் ஹராமுக்கு ஹஜ் - உம்ராவை நாடி வருகின்றாரோ அவரின் முன் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்". (நூல் :அபூதாவூது)இவ்வாறு அல்அக்ஸா இஸ்லாமிய புனிதத்தலங்களில் ஒன்று திருக்குர்ஆன், நபிகளாரின் சுன்னா நிரம்ப ஆதாரங்கள் கிடைக்கிறது.

**எது அல்அக்ஸா பள்ளிவாசல்?**

இப்போது அல்அக்ஸா பள்ளிவாசல் என்றால் பள்ளிவாசல் மட்டும் என்று இஸ்ரேல் அரசினால்

கூறப்படுகின்றது. ஆனால் அல்அக்ஸா என்றால் அதன் வளாகத்தில் உள்ள அனைத்தும் அல்அக்ஸா தான்.அல்அக்ஸா வளாகத்தில் உள்ள 'குப்பதுஸ் சுக்ரா' (ராக்கெட் டூம்) என்றழைக்கப்படும் மஸ்ஜித் உமர், அல்அக்ஸா வளாகத்தில் உள்ள மையவாடி உட்பட அனைத்தும் அல்அக்ஸா தான்.அஜ்னாதைன் யுத்த வெற்றிக்கு கிறிஸ்தவ கர்தினால்களின் அழைப்பின் பேரில் புகழ்பெற்ற ஜெருசேலம் ஒப்பந்தத்திற்காக பாலஸ்தீனம் வந்த கலீஃபா உமர் (ரழி) அவர்கள் ஒப்பந்தம் நிறைவுற்ற பின்பு அல்அக்ஸா பள்ளிவாசல் பள்ளிவாசல் வந்தார்கள். அங்குள்ள நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்தில் புராக் வாகனத்தை கட்டிப் போட்ட பாறையை விசாரித்தார்கள். அது குப்பை கொட்டும் இடமாக காட்சியளித்தது.




கிஜீஸ்தவர்கள் அதனை குப்பை கொட்டும் இடமாக பயன்படுத்தி வந்தனர். கலீஃபா உமர் (ரழி) அவர்கள் உடனே விளக்குமாறு கொண்டு வருமாறு சொல்லி, தமது திருக்கரங்களினால் அவ்விடத்தை சுத்தம் செய்தார்கள். கலீஃபா சுத்தம் செய்வதைக் கண்ட சங்கைக்குரிய சஹாபாக்களில் வீரத்தளபதிகளான அபூ உபைதா (ரழி), அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி), முஹம்மது இப்னு மஸ்லமா (ரழி), காலித் இப்னு வலீத் (ரழி), அம்ரு இப்னு ஆஸ் (ரழி), முஆது இப்னு ஜபல் (ரழி), முஆவியா (ரழி) ஆகியோரும், முஸ்லிம் வீரர்களும் சுத்தம் செய்தனர். பாரசீகப் பேரரசையும், ரோமப் பேரரசையும் வென்ற அகன்ற இஸ்லாமியப் பேரரசின் கலீஃபா விளக்குமாறு வைத்து சுத்தம் செய்வதைக் கண்ணுற்ற கிறிஸ்தவர்கள் திகைத்துப் போனார்கள். தங்களின் செயலை எண்ணி வெட்கித் தலைகுனிந்தார்கள்.

அல்அக்ஸாவுக்கு இனி இப்படியொரு நிலை ஏற்படக்கூடாது என்றெண்ணிய கலீஃபா உமர் (ரழி), அந்த இடத்தில் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அதுவே அல்வளாகத்தில் இப்படி தங்கக் கலரில் ஜொலிக்கும் மஸ்ஜிது உமர் (ராக்கெட் டூம்) பள்ளிவாசலாகும். அத்துடன் அல்அக்ஸா சுற்றிலும் வேலியிட்டார்கள். பின்பு ஹிஜ்ரி 72 ஆம் ஆண்டு கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வான் ஆட்சிக் காலத்தில் அல்அக்ஸா விரிவுபடுத்தப்பட்டது. மஸ்ஜிது உமர் பள்ளிவாசலில் குப்பா அமைக்கப்பட்டது.ஆக அல்அக்ஸா பள்ளிவாசல் மட்டுமல்ல.. அல்அக்ஸா வளாகத்தில் உள்ள அனைத்தும் அல்அக்ஸா என்பதே இஸ்லாமிய அறிஞர்களின் நிலைப்பாடாகும்.

**புனித ஜெருசேலம் நகரம்**

இஸ்லாத்தில் மக்கா , மதீனா நகரங்கள் எவ்வாறு புனித நகரங்களாக விளங்குகின்றனவோ அவ்வாறே ஜெருசேலம் நகரமும் புனித நகரம் தான். மக்கா நகரை புனித கஅபாவின் மூலம் கண்ணியப்படுத்தியதைப் போன்று, மதீனா நகரை புனித மஸ்ஜிதுன் நபவீயினால் கண்ணியப் படுத்தியதைப் போன்று ஜெருசேலம் நகரை அல்அக்ஸா பள்ளிவாசலினால் கண்ணியப் படுத்தியுள்ளான் வல்லோன் அல்லாஹ்.

ஜெருசேலம் என்பதற்கு அரபியில் அல்குத்ஸ் என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு புனிதமானது என்றே பொருள். ஜெருசேலம் நகரம் குறித்து திருக்குர்ஆனில் ஐந்து இடங்களில் 'அந்நகரம் இறைவனின் அருளைப் பெற்ற நகரம்' என்று கூறப்பட்டுள்ளது. அவ்வசனங்கள் பின்வருமாறு,

*1. "அல்லாஹ் பரிசுத்தமானவன். அவன் (முஹம்மது (ஸல்) எனும்) தன் அடியாரை(க் கஅபாவாகிய ) சிறப்புக்குரிய பள்ளிவாசலில் இருந்து எதனைச் சுற்றியுள்ள பகுதிகளை நாம் பாக்கியமான பகுதிகளாக ஆக்கினோமோ அத்தகைய (அல்குத்ஸ் நகரில் உள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ஒரே இரவில் அழைத்துச் சென்றான்." (அல்குர்ஆன் 17:1)*

2.“ (இப்ராஹீம் நபியாகிய) அவரையும், அவரின் சகோதரர் மகன்) லூத்தையும் பாதுகாத்துக் கொண்டு அகிலத்தார்களுக்கு நாம் பாக்கியமான பூமியாக்கித் தந்த (அல்குத்ஸ் எனும்) ஊரில் கொண்டு போய் சேர்த்தோம்.” (அல்குர்ஆன் 21:71)

3. “எவர்களை பலவீனமானவர்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்களோ அந்த மக்களுக்கு மிக்க பாக்கியமுள்ள பூமியின் கிழக்குப் பாகம், மேற்குப் பாகம் ஆகிய அனைத்தையும் சொந்தமாக்கிக் கொடுத்தோம். ஆகவே, இஸ்ராயீலின் சந்ததிகள் (ஃபிர்அவ்னால்) ஏற்பட்ட கஷ்டங்களை) பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (அவர்களுக்கு) உங்கள் இறைவன் கொடுத்த வாக்குறுதி மிக நல்லவிதமாக நிறைவேறியது.” (அல்குர்ஆன் 7:137)

4. “சுலைமானுக்கு வேகமான காற்றையும் நாம் வசப்படுத்திக் கொடுத்திருந்தோம். அது அவருடைய உத்தரவின்படி மிக்க பாக்கியம் பெற்ற ஊருக்கு (அவரை எடுத்து)ச் செல்லும்.” (அல்குர்ஆன் 21:81)

5. (சபாவாசிகளாகிய) அவர்களின் ஊருக்கும் நாம் அருள்புரிந்த ஊர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாகப் பல கிராமங்களை ஏற்படுத்தி அவற்றில் பாதைகளை அமைத்து இரவு பகலில் எந்நேரத்திலும் அச்சமற்றவர்களாக அதில் பயணம் செய்யுங்கள் (என்று கூறியிருந்தோம்.)” (அல்குர்ஆன் 34:18)

இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள 'நாம் அருள் புரிந்த ஊர்கள்' என்பதற்கு நபித்தோழர் இப்னு அப்பாஸ் (ரழி) அல்அக்ஸா பள்ளிவாசல் அமைந்துள்ள ஊர் என்றே விளக்கமளித்துள்ளார்கள். அல்அக்ஸா பள்ளிவாசலும், ஜெருசேலம் நகரும் முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் வருவதற்கே முன்பே நன்மையை நாடி முஸ்லிம்கள் பயணம் செய்யும் மூன்று பள்ளிவாசல்களில் ஒன்று என்று அதனை அடையாளப்படுத்தினார்கள் அண்ணல் நபி (ஸல்). மக்கா, மதீனா நகரங்களைப் போன்று ஜெருசேலம் நகருக்கு அல்அக்ஸா பள்ளிவாசலில் தொழுவதற்காக முஸ்லிம்கள் பயணம் செய்வார்கள் என்பதையும், அல்அக்ஸா முஸ்லிம்களின் பள்ளிவாசலாகவே கியாமத் நாள் நீடித்திருக்கும் என்பதையும் அது உணர்த்தவே செய்யும்.

**அல்அக்ஸாவில் எல்லை மீறிய யூத ராணுவம்**

இஸ்லாமிய மார்க்கத்தில் மூன்றாவது புனிதத்தலமாக விளங்கும் அல்அக்ஸா பள்ளிவாசலில் கடந்த அக்டோபர் மாதம் யூத ராணுவமும், வலதுசாரி யூத தீவிரவாதிகளும் வன்முறையில் ஈடுபட்டார்கள். அல்அக்ஸாவுக்கு செல்பவர்கள் அதன் சுவற்றில் துப்பாக்கித் தோட்டாக்களின் சுவடுகள் பதிந்திருப்பதைக் காணலாம். கடந்த அக்டோபர் மாதம் பள்ளி வாசலினுள் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப் பட்டன. உள்பள்ளியினுள் தொழுகை யாளிகளின் முன்பு யூத ராணுவத்தினர் பூட்ஸ் கால்களுடன் நின்ற அவலங்களும் நடந்தன. ஒருநாள் முழுவதும் அல்அக்ஸாவை பூட்டிப் போட்டு இமாம் உட்பட யாரையும் உள்ளே விடாமல் தடுத்து நிறுத்திய அவலமும் கடந்த மாதம் நடந்தது. இது 1917 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருந்த காலம் உட்பட கடந்த 100 ஆண்டுகளில் நடக்காத நிகழ்வாகும்.

**அல்அக்ஸா வன்முறை - எர்துகான் கடும் கண்டனம்**

அல்அக்ஸா வன்முறைக்கு இக்வான்களும், உலகெங்கும் வாழும் இஸ்லாமிய இலட்சிய வாதிகளும், துருக்கி அதிபர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகானும் கடும் கண்டனம் தெரிவித்தனர். தமது கண்டனத்தை எர்துகான் இவ்வாறு பதிவு செய்திருந்தார்.“ பாலஸ்தீனத்தின் மீதான தாக்குதல் குறித்து நாங்கள் பேசக்கூடாது என்று சொல்வதற்கு யாருக்கும் எந்த உரிமையும் இல்லை. இஸ்ரேலிய பாதுகாப்பு படைகள் பூட்ஸ் கால்களுடன்



அல்அக்ஸா பள்ளியினுள் நுழைந்து தொழுது கொண்டிருந்தவர்களை சுட்டுள்ளனர். இதனை ஏற்க இயலாது. அல்அக்ஸாவின் மீதான தாக்குதலை எங்கள் நாட்டின் மீதான தாக்குதலாக நாங்கள் கருதுகிறோம். அல்அக்ஸா பாலஸ்தீன மக்களின் பள்ளிவாசல் மட்டுமல்ல. அது எங்களுக்கும் - உலக முஸ்லிம்களுக்கும் சொந்தமான பள்ளிவாசலாகும். அது எங்களின் புனிதத்தலங்களில் ஒன்று." (டெய்லி சபாஹ் 20.11.14) மறுநாள் 21.11.14 துருக்கி வந்திருந்த அல்ஜீரியா பிரதமர் உடனான சந்திப்புக்கு பின்பு எர்துகான் இவ்வாறு பேசினார்.

"அல்அக்ஸா பள்ளிவாசல் உலக முஸ்லிம்களின் புனிதத்தலங்களில் ஒன்று. அது முஸ்லிம்களின் முதல் கிப்லா. அல்அக்ஸாவின் மீதான தாக்குதல் துருக்கியின் மீதான தாக்குதலாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

உலக முஸ்லிம்கள் பாலஸ்தீன விவகாரத்தையும், அல்அக்ஸா எல்லை மீறலையும் கவனித்துக் கொண்டு தான் உள்ளனர். முஸ்லிம்கள் ஒன்றும் பார்வையற்றவர்களாக இல்லை. இஸ்லாமிய புனிதத்தலமான அல்அக்ஸாவினுள் நவம்பர் 5 ஆம் தேதி இஸ்ரேலிய ராணுவத்தினர் ரெய்டு நடத்தியதையும், பூட்ஸ் கால்களுடன் நுழைந்ததையும் எளிதாக எடுத்துக் கொள்ள இயலாது. எக்காரணம் சொன்னாலும் அதனை ஏற்க இயலாது.

இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பையும், தாக்குதலையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனம் நாகரிக சமுதாயத்தில் சகிக்க இயலாததாகும்." (டெய்லிசபாஹ், அல்குத்ஸ் யு.கே.)

**மூன்றாவது இன்திஃபாளா**

இன்திஃபளா என்றால் எழுச்சி என்பது பொருள். இஸ்ரேலின் பயங்கரவாத அடாவடிகளுக்கும், காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கும் எதிராக இதுவரை பாலஸ்தீன மக்கள் இரண்டு இன்திஃபாளாக்களை நடத்தியுள்ளனர்.

முதல் இன்திஃபாளா 1987 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை நடந்தது. முதல் இன்திஃபாளாவில் ஆயிரக்கணக்கான பாலஸ் தீனர்களும், நூற்றுக்கணக்கான இஸ்ரேல் வீரர்களும் கொல்லப்பட்டனர்.

இரண்டாம் இன்திஃபாளா 2000 ஆம் ஆண்டு ஷாப்ரா - ஷாத்திலா அகதிகள் முகாம் படுகொலை அரசியல்வாதி ஏரியல் ஷரோன் அல்அக்ஸா பள்ளிவாசலுக்கு வந்து அத்துமீறிய போது ஏற்பட்டது. இஸ்ரேலின் பல்வேறு பகுதிகளுக்குள் நுழைந்து பாலஸ்தீனர்கள் தாக்குதல் நடத்தினார்கள். கடந்த அக்டோபர் மாதம் இஸ்ரேலிய ராணுவம் அல்அக்ஸாவில் எல்லை மீறிய போது ஹமாஸ் இவ்வாறு எச்சரித்தது. " இஸ்ரேல் அல்அக்ஸாவில் அடாவடி செய்தால் மூன்றாவது இன்திஃபாளா ஏற்படுவதற்கு அது காரணமாகி விடும் என்றது. ஆனால், யூதப் பண்டிகையான 'சுகூத்' பண்டிகையை காரணம் காட்டி பல நூற்றுக்கணக்கான வலதுசாரி யூதர்களை அல்அக்ஸாவுக்குள் அனுமதித்து கலவரங்கள் செய்தது இஸ்ரேல்.

தொடர்ந்து அல்அக்ஸாவில் நுழைந்த இஸ்ரேல் ராணுவத்தினர் பள்ளிவாசலின் முதல் வரிசையில் தொழுகையாளிகளின் முன்பு பூட்ஸ் கால்களுடன் நின்றனர். இது பாலஸ்தீன மக்களுக்கு மத்தியிலும், உலகெங்கும் வாழும் முஸ்லிம்களுக்கு மத்தியிலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. விளைவு காசா மற்றும் மேற்கு கரையில் செயல்படும் பாலஸ்தீன விடுதலை முன்னணி எனும் அமைப்பு மூன்றாவது இன்திஃபாளாவை அறிவித்தது. தொடர்ந்து கடந்த 18.11.14 அன்று மேற்கு ஜெருசேலத்தில் உள்ள யூத தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலுக்கு பொறுப்பேற்ற பாலஸ்தீன விடுதலை முன்னணி அல்அக்ஸா வன்முறைக்கு பதிலடியாக தமது இயக்கத்தின் இரண்டு வீரர்கள் அதில் ஈடுபட்டதாக அறிவித்தது. தாக்குதலில் எட்டு இஸ்ரேலியர்கள் காயமடைந்தனர்.

ஏற்கனவே இரண்டு இன்திஃபாளாக்களை இஸ்ரேல் சந்தித்துள்ளது. ஆதலால் இன்திஃபாளாவின் விளைவுகள் அதற்கு நன்கு தெரிய செய்யும்.



ஆதலால் அந்நாடு அலறித் துடித்தது.

**ஜோர்டான் -இஸ்ரேல் பேச்சுவார்த்தை**

இஸ்ரேல் தாக்கப்பட்டால் இஸ்ரேலை விட கடுமையாக அலறும் நாடு அமெரிக்கா. இஸ்ரேல் தாக்கப்பட்டவுடன் பாய்ந்து வந்தார் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் கெர்ரி.1967 ஆம் ஆண்டு அரபு - இஸ்ரேல் போரில் மேற்கு கரையில் உள்ள ஜெருசேலம் நகரை ஜோர்டானிடமிருந்தே இஸ்ரேல் கைப்பற்றியது. ஆதலால், இம்முறை கெய்ரோ செல்லாமல் ஜோர்டான் தலைநகர் அம்மான் வந்தார் கெர்ரி. கெர்ரியின் மத்தியஸ்தில் ஜோர்டான் மன்னர் அப்துல்லாஹ் - நெதன்யாகு இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அல்அக்ஸாவுக்குள் தொழுகை நடைபெற ஒத்துழைப்பதற்கு நெதன்யாகு ஒத்துக் கொண்டார்.

**ஜோர்டான் அரசுக்கு இக்வான்களின் அழுத்தம்**

அல்அக்ஸா பள்ளிவாசலின் வக்ஃபு நிர்வாகம் இப்போதும் ஜோர்டான் அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. ஆதலால் அல்அக்ஸாவின் மீதான வன்முறைக்கு ஜோர்டானில் கடும் கண்டனம் எழுந்தது. ஜோர்டான் இக்வான்கள் துணைத் தலைவர் பனீ இர்ஷீது மிகப் பெரிய எழுச்சியை தலைமை தாங்கி நடத்தினார். இக்வான்களின் அரசியல் கட்சி இஸ்லாமிய செயல் முன்னணி **(Islamic Action Front)** கட்சியும் அரசுக்கு எதிராக போராட்டங்களை நடத்தியது. இஸ்ரேலுக்கு எதிராக ஜோர்டானில் மக்கள் எழுச்சி உருவாகுவதை கண்டு அச்சப்பட்ட ஜோர்டான் மன்னர் அப்துல்லாஹ் இஸ்ரேலுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்தார். இதற்கிடையே கெர்ரி மத்தியஸ்தில் நெதன்யாகுவுடன் சமாதானம் செய்து கொண்டு அப்துல்லாஹ் மோதலை முடிவுக்கு கொண்டு வந்தார்.



**இக்வான்கள் தலைவர் கைது**

நெதன்யாகு தாக்குதலை அறிவித்த பின்பு இஸ்ரேல் ராணுவம் அல்அக்ஸாவில் அடாவடிகளில் ஈடுபடுவதைக் கைவிடவில்லை. இதனால் கொதிப்படைந்தார்கள் ஜோர்டான் பாராளுமன்ற உறுப்பினர்கள். விளைவு பாராளுமன்ற அவையில் மேற்கு ஜெருசேலம் யூத தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தி இறந்த பாலஸ்தீன விடுதலை முன்னணியின் இரண்டு வீரர்களின் பெயரில் சூரா ஃபாத்திஹா ஓதி ஈஸால் சவாப் செய்தார்கள். *(அல்குத்ஸ் 19.11.14)*

பாராளுமன்றத்தில் நடந்த ஈஸால் சவாப் நிகழ்ச்சிக்கு ஜோர்டானுக்கான இஸ்ரேல் தூதர் டேனியன் நெவோ **(daniel nevo)** கடும் கண்டனம் தெரிவித்தார். (அல்குத்ஸ் யு.கே.25.11.14)மீண்டும் இஸ்ரேல் - ஜோர்டான் அரசியல் உறவில் உரசல்கள் தொடங்கின. இதற்கிடையே பிரச்சினைக்கு முடிவுக்கு கொண்டு இக்வான்களை பலிகொடுக்க முடிவு செய்தது ஜோர்டான் அரசு.விளைவு ஜோர்டான் இக்வான்கள் இயக்கத்தின் துணைத் தலைவர் பனீ இர்ஷீது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

**இஸ்ரேலின் புதிய மசோதா**

பாலஸ்தீனம் தனிநாடாகுவதை தடுப்பதற்கு அல்அக்ஸா பள்ளிவாசலின் மீது தாக்குதல் நடத்தி பாலஸ்தீன மக்களை அடிபணிய வைத்திட இஸ்ரேல் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடியவே இன்னொரு வழியில் நரித்தனம் செய்தது இஸ்ரேல். இஸ்ரேலினுள் பாலஸ்தீனர்கள் சுமார் ஒரு மில்லியன் பாலஸ்தீனர்கள் வசித்து வருகிறார்கள். இவர்களின் குடியுரிமை ரத்து செய்யும் விதமாக 'யூதர்களுக்கு மட்டுமே தேசிய உரிமை எனும்' புதிய மசோதாவை இஸ்ரேல் பாராளுமன்றத்தில் கடந்த *23.11.14* தாக்கல் செய்தார் நெதன்யாகு. பாராளுமன்றத்தில் *26* ஆம் தேதி அம்மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இம்மசோதா இஸ்ரேல் -பாலஸ்தீன அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இடையூறாக ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொடர்புக்கு : abulhasanf@gmail.com**

# 8 அண்டுகளுக்குப் பின் மேலும்

# இரண்டு அப்பாவி முஸ்லிம்கள்?

சுதந்திரதின விழாவைக் குடியரசு தின விழாவென்று டெல்லியைத் தகர்க்கத் திட்டம். வங்காள தேசத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் இரண்டு பேர் கைது. டெல்லி சிறப்புக் காவலர்கள் அதிரடி சாதனை நாட்டுக்கு வந்த ஆபத்து நீங்கியது காவல்துறை பெருமிதம் விரிவான செய்திகள் இடைவேலைக்குப்பின்..........

இப்படி ஒரு அதிர்ச்சியை நமக்குள் ஏற்படுத்தி நம்மைத் தொலைகாட்சியோடு பிணைத்து இடைவேளை என நமக்கு விளம்பரங்கள் பலவற்றைக் காட்டினார்கள். எப்போது இந்த விளம்பரங்கள் தொலையும் இந்த செய்தி மீண்டும் வரும் என்று அலுத்துக் கொண்ட நமக்கு செய்திகள் தொடரும் எனச் சொல்லி - இரண்டு முஸ்லிம்களைக் காட்டினார்கள்.

அவர்கள் இருவரும் பங்களாதேஷிலிருந்து இந்தியாவுக்குள் புகுந்த அபார தீவிரவாதிகள். பங்களாதேஷிலிருக்கும் **(HUJI)** ஹீஜு என்ற அதிபயங்கர அமைப்பைச் சார்ந்தவர்கள் எனத்தொடங்கி, ஜனவரி *26* ஆம் நாளில், நம் நாட்டில் நடக்கவிருக்கும் குடியரசு தினவிழாவில் பயங்கர தாக்குதலை நடத்த (610 கிராம்) ஒரு கிலோ வெடிபொருட்களுடன் **(PETN** வகை) அலைந்து கொண்டிருந்தனர். என்று விரித்தார்கள்.

நம் நாட்டு செய்தி நிறுவணங்களுள் ஒன்றான "பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா" **(PTI : Press Trust Of India)** இந்த செய்திக்கு இன்னொரு முகத்தைத் தந்தது. அது கைதுசெய்யப்பட்ட முஹம்மத் அமீன் வானியும் லுத்தூஃப் ரஹ்மானும் பாகிஸ்த்தானிலுள்ள "ஜம்மியத்துல் தஅவா" என்ற அதிசய அமைப்பின் தலைவர் ஹபீஸ் செய்யித் என்பவரிடம் பயிற்சி பெற்றவர்கள். இதையும் நமது தொலைகாட்சிகள் நமக்கு விரிவாக விளக்கிக் காட்டின. ஹபீஸ் ரஹ்மான் தரும் பயிற்சி உலகில் யாரும் விஞ்சிட இயலாத பயிற்சி என்பதை சொல்லாமல் சொன்னார்கள்.

சாதனை படைத்த பெருமையோடு நமது டெல்லி சிற்ப்புக் காவலர்களும் சாய்ந்து தொங்கி முகத்தோடு குற்றம் சுமத்தப்பட்டவர்களும் நமக்கு தொலைகாட்சியில் மீண்டும் மீண்டும் காட்டப் பட்டார்கள். அடுத்த நாள் பத்திரிக்கைகளும் டெல்லியை தாக்கிட வந்த முஹம்மத் அமீன்வானி அவர்களையும் லுத்துஃப் ரஹ்மானையும் படம்போட்டுக்காட்டி இவர்களிடமிருந்து டெல்லியை காப்பாற்றிய நமது சிறப்புக் காவல்படையினரை வானாளப் புகழ்ந்திருந்தனர். இதுவெல்லாம் ஜனவரி திங்கள் 4 ஆம் நாள் 2007 ஆம் ஆண்டு நாட்டை உலுக்கிய செய்திகள்.

செய்திகளைப் படிப்பவர்கள் இவர்கள் மீதும் இவர்களின் மூலம் இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை அதிகமாக்கிக் கொள்ள வேண்டும். என்பதற்காக, கதையை இன்னும் கொஞ்சம் அதிகமாக தீர்த்துக் கட்டினர். அது முஹம்மத் அமீன் வானி என்பவரிடம் [ரூபாய் *4,50,000*] அதாவது நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் ரொக்கமாக இருந்தது என்பதே அந்த திகில். இது டெல்லியிலுள்ள சாந்திஸி சவுக் என்னுமிடத்திலுள்ள ஓர் கவ்வாலா - பணமாற்று வியாபாரியிடமிருந்து பெற்றது. இந்த பணம் இந்தியாவின் மீது போர் தொடுப்பதற்காக ஹூஜீ எனும் அமைப்பு கொடுத்தனுப்பியது என்றும் அனல் பறக்கும் செய்திகள்.

அவர்கள் செய்தியில் காட்டிய பரபரப்பு நமக்கு இது உண்மையாகத்தான் இருகும் என்பதைத் தெளிவாகக் காட்டிற்று. எனினும் உண்மைகள் கையில் கிடைக்கும்வரை பொருத்திருப்பதே சிறந்தது எனப்பட்டது. ஆனால் காத்திருப்பது என முடிவு செய்தோம். இப்போது எட்டு ஆண்டுகளுக்குப்பின் அந்த உண்மைகள் கைவரப்பெற்றோம். அதனை இங்கே அப்படியே தருகின்றோம்.

**ஹூஜீ என்ற அமைப்பு**

ஹூஜீ என்ற அமைப்பின் முழுப்பெயர் ஹரகத்துல் ஜிஹாத் அல் இஸ்லாமி **(Harakath Ul Jihad al Islami)** என்றொரு அமைப்பு நமது அண்டை நாடான வங்காள தேசத்தில் இருப்பதாக நமது ஊடகங்கள் நமக்கு சொல்லிக்கொண்டிருக்கின்றன. ஊடகங்கள் சொல்லும் செய்திக்கு ஆதாரமாக நமது உளவுத்துறையைத்தான் ஆதாரமாகக் காட்டுகின்றன. ஆனால் அப்படியொரு அமைப்பு வங்காள தேசத்தில் இல்லையென வங்காள தேச அரசு தொடர்ந்து கூறிவருகிறது. அதுவும் ஆதாரப் பூர்வமான அறிவுப்புகள். **[Source : Radiance.viw**

**weekly 26th Oct - 2014]** ஆனால் உளவுத்துறையினர் தொடர்ந்து ஹூஜீ என்றொரு அமைப்பை கற்பனையில் உருவாக்கி ஊடகங்கள் வழி ஊரெல்லாம் விளம்பி வருகின்றது.

**அப்படியானால் உண்மைதான் என்ன?**

டெல்லிய தகர்த்திட வந்த மிகப்பெரிய தீவிரவாதிகளாகக் காட்டப்படுபவர்கள், அப்பாவிகள். அவர்கள் காஷ்மீரை சார்ந்த சாதரண மக்கள். ஆனால் முஸ்லிம்கள். முஸ்லிம் இளைஞர்களே இல்லாத ஒரு காஷ்மீரை உருவாக்கிட வேண்டும். காலப்போக்கில் முஸ்லிம்களே இல்லாத ஒரு காஷ்மீரை உருவாக்கிட வேண்டும் என்பது நமது மத்திய அரசின் திட்டம். இதில் காங்கிரஸ் அரசுக்கும் இப்போது மத்தியில் வீற்றிருக்கும் பாசிச பரிவார, பாரதீய அரசுக்கும் இடையில் எந்த வேற்றுமையுமில்லை. இந்த பொது திட்டத்தின் கீழ் அங்குள்ள முஸ்லிம்களை பல்வேறு சாக்குப்போக்குகளின் கீழ் படுகொலை செய்துவருகின்றார்கள் நமது இராணுவத்தினர். அல்லது காணமலாக்கி வருகின்றார்கள்.

இப்படி படுகொலை செய்யப்பட்டு ஆதரவற்று நிற்கும், குடும்பங்களுக்கு சிலபல உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்கள் முஹம்மது அமீன் வானியும், லத்தூஃப் ரஹ்மானும். இதனை பொருத்துக்கொள்ள இயலவில்லை நமது இராணுவத்தினரால். இந்த இரண்டு பேர் மீதும் தீவிரவாதிகளுக்குத் துணை போகின்றார்கள் என்ற பொய்க்குற்றச் சாட்டின் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள். சில நாட்கள் கஷ்மீர் சிறை, பின்னர் திகார் சிறை, என அலைக்கழித்தப்பின், அவர்களுக்குப் பிணை கிடைத்தது. 2003 ஆம் ஆண்டு அவர்கள் பிணையில் வந்தார்கள் ஆனால் வழக்கு கஷ்மீரிலுள்ள **"Kathaa"** கத்தா என்னுமிடத்திலுள்ள தலைமை மாவட்ட நீதிபதியின் நீதிமன்றத்திற்கு வந்தார்கள்.

நீதிமன்றத்திற்கு வந்தவர்களை உளவுத்துறையைச் சார்ந்த இரண்டு பேர் பின்தொடர்ந்து வந்தார்கள். அவர்கள் உங்களை விசாரிக்க வேண்டும். நாங்கள் பத்திரிக்கையாளர்கள் என பம்மாத்துக்காட்டிய அவர்கள் இறுதியில் தாங்கள் பத்திரிக்கையாளர்கள் அல்ல. உளவுத்துறையைச் சார்ந்தவர்கள் என்றும் மறுத்தால் கொலை செய்துவிடுவோம் என்றும் மிரட்டினார்கள்.

மிரட்டலுக்கு அஞ்சாத அமீன்வானி ஓடிச்சென்று அந்த நீதிமன்றவளாகத்தில் நின்றிருந்த தன் வழக்கறிஞரிடம் நடந்ததை சொன்னார். வழக்கறிஞர் உடனேயே நீதிமன்ற பார்வைக்கு




அதனைக் கொண்டு சென்றார். முஹம்மத் அமீன்வானிக்கு பாதுகாப்பு வழங்கிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதற்கான மனுவும் உடனேயே தராததால் பாதுகாப்பு வழங்கிடும் உத்தரவு தான் பிறப்பிக்க இயலாது. ஆனால் அமீன்வானியின் உயிருக்கு ஆபத்திருக்கின்றது என்பதை நான் பதிவு செய்து கொள்கிறேன். இஃது உங்களுக்குப் பின்னால் உதவி செய்யும் என்றார் - நீதிபதி.

ஆனாலும் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே அமீன் வானியும், அவருடைய நண்பர் லுத்துஃபுற் றஹ்மானும் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கக் இருவரையும் டெல்லியில் வைத்து வெடி பொருள்களுடன் கைது செய்ததாக தொலைக்காட்சிகளில் காட்டினார்கள். அமீன்வானியை டெல்லியுள்ள சாந்தினி சவுக்கில் வைத்து கைது செய்ததாகவும் அதுவும் காலை 9.30 மணிக்குக் கைது செய்ததாகவும், அவன் கொடுத்த தகவலின் அடிப்படையில் லுத்துஃப் ரஹ்மானை மாலை 6.30 மணிக்குக் கைது செய்ததாகவும், குடியரசு தினநாளை அதாவது ஜனவரி 26 ஆம் நாளில் டெல்லி தகர்க்கப்படவிருந்ததாகவும், அதை காப்பாற்றி விட்டதாகவும் கதை கட்டினார்கள். அந்தக் கதையைத்தான் அத்தனை அலங்காரத் தோடும் தொலைக்காட்சிகள் நமக்கு விற்பனை செய்து கொண்டிருந்தன.

குடியரசு தினத்தன்று ஏதேனும் ஒரு விருதும், பணமும், பதவி உயர்வும் கிடைக்கும் என்றுதான் இத்தனை ஏற்பாடுகளையும் செய்தார்கள். ஆனால் முஹம்மத் அமீன் வானியின் வழக்கறிஞர் மாவட்ட தலைமை நீதிமன்றத்தில், பாதுகாப்பு கோரி தாக்கல் செய்த மனு அத்தனையையும் ஒன்றுமில்லாமலாக் கிவிட்டது. டெல்லி சிறப்புக் காவல்துறை அதிகாரிகளும் நமது மத்திய உளவுத்துறையைச் சார்ந்தவர்களும் டெல்லியுள்ள சிறப்பு நீதிமன்றத்தைத் தங்கள் சட்டைப்பைக்குள் வைத்திருக்கின்றார்கள்.




அதனால் அந்த நீதிமன்றம் முஹம்மத் அமீன் வானி மீதும் லுத்துஃப் ரஹ்மான் மீதும் புணயப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் வரிவிடாமல், நிரூபிக்கப்பட்டன எனக்கூறி இரண்டு பேருக்கும் ஆயுள் தண்டனை வழங்கினார்கள். ஆனால் உயர் நீதிமன்றத்தில் அமீன்வானி, லுத்துஃப் ரஹ்மான் ஆகியோர் சார்பில் தனித்தனியாக வழக்கறிஞரிகள் வைக்கப்பட்டார்கள். அவர்கள் வழக்கை திறம்பட நடத்தினார்கள். அதனால் வானியும், லுத்துஃப் ரஹ்மானும் வழக்கிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டார்கள்.

**வழக்கறிஞரின் விவாதங்கள்**

குற்றம் சுமத்தப்பட்ட முஹம்மத் அமீன் வானிக்காக டெல்லி உயர் நீதிமன்றத்தில் அசோக் அகர்வால் என்ற வழக்கறிஞர் வாதாடினார். லுத்துஃப் ரஹ்மானுக்காக சித்தார்த் லுதரா என்ற வழக்கறிஞர் வாதாடினார். வழக்கில் அப்பாவி முஸ்லிம்கள் இருவர் புனையப்பட்டிருக்கின்றார்கள் என்பதை உணர்ந்த வழக்கறிஞர்கள் உணர்வும், ஆர்வமும் பொங்கிட அந்த அப்பாவி முஸ்லிம்களுக்காக தங்கள் வாதங்களை வைத்தார்கள்.

**வெடி பொருளின் நிறம்**

முஹம்மத் அமீன் வானியிடமிருந்து *1.610* கிலோ எடையுள்ள பி.எ.டி.என் **[PETN]** என்ற வகை வெடிபொருள்களைக் கைப்பற்றியதாக கதை. அந்த வெடிபொருட்கள் பிரவுன் **[Brown]** நிறம் என்று அடித்துக் கூறினார்கள் டெல்லி சிறப்பு காவல்துறையைச் சார்ந்தவர்கள். அதில் துணை கமிஷனர் சஞ்சீவ் குமார் யாதவ் தான் இதை அறுதியிட்டு உறுதியாக கூறினார். இதை கூறும்போது நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையல்லாமல் வேறெதுவுமில்லை. என்று தன்னுடைய வேத புத்தகத்தின் மேல் கைவைத்துக் கூறினார்.

ஆனால் அவரே தயாரித்த சாட்சிகளில் ஒருவர் வெடிபொருள்கள் கருஞ்சிவப்பாக இருந்தது என்று கூறினார். அவரும் நான் சொல்வதெல்லாம் உண்மை உண்மையில்லாமல் வேறோன்றுமில்லை என அடித்துக் கூறினார். இருதியில் வெடிபொருள்களைச் சோதிக்கும் நிபுணர்கள், தங்கள் விஞ்ஞான சோதனையின் முடிவை நீதிமன்றத்தில் சொன்னார்கள். அதில் அவர்கள் வெடிபொருள் வெள்ளை நிறத்தில் இருந்தது என்றார்கள். வெடிக்கும் தன்மையுள்ள சில் பொருட்களும் உடனிருந்தது என்றார்கள். அதாவது வெள்ளை நிறத்தில் இருந்ததெல்லாம் வெடிபொருள் அல்ல. வெடிக்கும் தின்மையுள்ள பொருள்களையும், கலந்த கலவை அவ்வளவுதான்.

இதேபோல் கலவைகளை உருவாக்கி அப்பாவி முஸ்லிம்களின் ஆயுளை பறிப்பதில் நமது உளவுத்துறை மற்றும் டெல்லி சிறப்புக் காவலர்களுக்கு இணையாக யாருமில்லை. இப்போது முஹம்மத் அமீன் வானி, லுத்துஃப் ரஹ்மான் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெடிபொருள்களின் நிரம் என்பதற்கு மூன்று வகையான வருணங்கள் வரவே நீதிபதி தானே அந்த வெடிபொருளை ஒருமுறை பார்த்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்தார். ஆகவே வெடிபொருளைக் கொண்டுவந்து என்னிடம் காட்டுங்கள் எனக் கேட்டார்கள். அதற்கு சற்றும் தாமதிக்காமல் அந்த வெடிபொருள்கள் காவல்துறையின் கட்டுப்பாட்டில் இருந்தபோது தீப்பிடித்து விட்டது எனக்கூறினார்கள்.

கூண்டேறி சாட்சியம் சொன்ன டெல்லி சிறப்புக்காவல்துறை ஆணையரும், அவருக்காக வாதாடிய அரசு வழக்கறிஞரும். அப்படியானால் சாம்பலைக் கொண்டு வாருங்கள் என்றார் நீதிபதி அவர்கள். நீதிபதி அவர்கள் உண்மையைக் கண்டுப்பிடிப்பதில் இவ்வளவு கூர்மையாக இருப்பார் என எவரும் நினைக்கவில்லை. திக்குமுக்காடி போனார்கள் டெல்லி சிறப்புக் காவல்துறையைச் சார்ந்தவர்கள். அதுபோலவே சிலையாக நின்றார் அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர். அவர் பெற்ற பணம் அத்தனையும் கஜனாவிற்கு பாழ்.

வேர்த்து வெளுத்து போய் நின்ற அரசு தரப்பு "ஆசாமி"களிடம், நீதிபதி அவர்கள் இன்னொரு கேள்வியையும் கேட்டார். நீதிபதியின் பெயரால் கேட்கின்றேன் பதில் கூறுங்கள். வெடிபொருள்கள் எறியும்போது வெடிக்காதா? - சோற்றால் அடித்த பிண்டங்களாக நின்று கொண்டிருந்தார்கள், பொய்களை வழக்காக ஜோடித்து முஸ்லிம் இளைஞர் வாழ்க்கையை பாழாக்கிடுவதையே தொழிலாகக் கொண்ட மாதோன் மந்தர்கள்.

**ஹவால பணம்**

முஹம்மத் அமீன் வானியைக் கைது செய்திடும்போது, ரூபாய் 4,50,000 - ஐ கையோடு கைப்பற்றியதாக, நமது டெல்லிக் காவல்துறையினர் கதைவிட்டார்கள். இதை ஹவ்வால பணத்தை காலையில் அதாவது முஹம்மத் அமீன் கைது செய்யப்பட்ட 9.30 மணிக்கு முன் டெல்லியுள்ள சாந்தினி சவுக் என்ற இடத்தில் ஒரு ஹவ்வாலா வியாபாரிடம் வாங்கியது சத்தியம் செய்து கூறினார்கள் டெல்லி சிறப்புக் காவலர்கள்.

ஆனால் டெல்லி சிறப்புக் காவலர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த காவலர்கள் சாட்சியங்கள் ஹவ்வாலா பணத்தை டெல்லியிலுள்ள ஆதார்ஸ் நகரில் வைத்து முஹம்மத் அமீன் வாங்கியதாகக் குறிப்பிட்டார்கள். தாங்கள் சொன்ன பொய் அம்பலமாகப் போனபோது டெல்லி சிறப்புக் காவலர்கள் அந்தர் பல்டி அடித்தார்கள். பணம் ஆதார்ஸ் நகரில் வைத்து வாங்கப்பட்டதுதான் என்றார்கள். அப்படியானால் நீங்கள் தாக்கல் செய்த குற்றப் பத்திரிக்கையில், சாந்தினி சவுக் எனக் குறிப்பிட்டிருக்கின்றீர்களே வழக்கறிஞர்கள் கேட்டபோது அது டைப்பிங் "மிஸ்டேக்" தட்டெழுத்துப் பிழை எனக் கூறி சமாளித்தார்கள் உங்களுடைய வாதங்கள் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. என்றார் நீதிபதி அவர்கள்.

அத்தோடு இந்தக் குழப்பத்தைத் தீர்த்திட நீங்கள் அந்த ஹவ்வாலா வியாபரியை நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்த முடியுமா? என்றார்கள் நீதிபதி! முடியாது என்றார்கள் டெல்லி சிறப்புக் காவலர்கள். இதனை கேட்ட நீதிபதி நீங்கள் அவரைக் கைது செய்யவில்லையா? எனக் கேட்டார்கள். இல்லை என்றார்கள் வழக்கை முஸ்லிம்கள் மீது ஜோடித்த காவலர்கள். இப்போது அவர்களும் அரசு வழக்கறிஞரும் தோட்டத்துத் தொழும்பர்களாக நின்று கொண்டிருந்தார்கள்.

**- M.G.M**

**சாலைகளையும், பொதுச் சொத்துக்களையும் ஆக்கிரமித்துக் கட்டப்படும் கோயில்களை**

**இந்து தர்மமும், கோயில்களின் ஆகம விதிகளும் அங்கீகரிக்குமா??**

தமிழகத்தின் பல இடங்களிலும் சாலைகளையும், பொதுச் சொத்துக்களையும் ஆக்கிரமித்துப் பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.அதிலும் குறிப்பாக, சென்னையில் பல இடங்களில் சாலைகளின் நடுவே அல்லது சாலைகளை மறைத்தவாறு பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இப்படி ஆக்கிரமித்துக் கட்டப்படும் கோயில்களை எல்லாம் மக்கள் புறக்கணிக்காமல், அங்கு செல்வதனால், ஆக்கிரமிப்பாளர்கள் மேலும் ஊக்கம் பெறுகின்றனர். அது அவர்களை மேலும் ஆக்கிரமிக்கத் தூண்டுகிறது.

நிலைமை இப்படியிருக்க, கடந்த சில மாதங்களுக்கு முன் சில சமூக விரோதிகள் புதுப்பேட்டை வீரபத்திரன் தெருவில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்துக் கோயில் கட்டியுள்ளனர். அந்தக் கட்டுமானப் பணியை தடுத்து நிறுத்த சில சமூக நல விரும்பிகள் மாநகராட்சிக்குப் புகாரளித்தும், அதிகாரிகள் தங்கள் கடமையை செய்யாமல் கடமை தவறிய காரணத்தினால், அந்தப் புகார்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக ஆகிப்போனது.

அந்நிலையில் தான் இப்பொழுதும் அதே புதுப்பேட்டையில் நாகப்பா (மு) தெருவில் கொய்யாத்தோப்பு அரசு உயர்நிலைப் பள்ளியை ஒட்டினாற் போல், 15 அடி சாலையில் சுமார் நான்கடி வரை ஆக்கிரமித்து கோயில் கட்டும் பணி நடக்கிறது. இது தொடர்பாக "தி இந்து" நாளிதழின் உங்கள் குரல் பகுதியிலும் செய்தி வந்தது. அந்த ஆக்கிரமிப்பிற்கு காவல் துறையின் முழு ஆசியும், பாதுகாப்புமுண்டு.

இப்படி நடக்கும் ஆக்கிரமிப்புகளெல்லாம், காவல் துறையின் உயரதிகாரிகளுக்கோ அல்லது மாநகராட்சிக்கோ தெரியாமல் நடக்கிறது என்பதை நம்மால் நம்ப முடியவில்லை..சென்னை மாநகரில் பல கோயில்கள் பக்தர்களின் வருகையில்லாமல் வெறிச்சோடிக் கிடக்கும் போது, ஆக்கிரமித்துக் கோயில் கட்டுவது பக்தியின் வெளிப்பாடா? அல்லது எதனுடைய வெளிப்பாடென்பதை, ஆக்கிரமிப்பாளர்கள் அறிவிப்பார்களா??

# பாபரி மஸ்ஜித் வழக்கின்

## வழக்கறிஞருடன் வைகறையின் பேட்டி

பாபரி மஸ்ஜித் வழக்கின் வழக்கறிஞரும், இவ்வழக்கை நீண்ட நாட்களாக நடத்தி வருபவருமான ஜஃபர் பாய் ஜீலானி அவர்கள் தொலைபேசியில் வைகறைக்கு அளித்த பேட்டி

**கேள்வி** : *நீண்ட நாட்களாக நடைபெறும் பாபரி மஸ்ஜித் வழக்கின் தற்போதைய நிலை என்ன?*

**பதில்** : வழக்கு தொடர்பான எல்லா ஆவணங்களையும் நம்மால் உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது. ஆனால் உச்சநீதிமன்றம் ஆவணங்களை ஹிந்தியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க கேட்டு கொண்டுள்ளது. இதற்கான மொழிபெயர்ப்பு இன்னும் தொடங்கவில்லை. மொழிபெயர்ப்பு தொடங்காததால் வழக்கு விசாரணை தொடங்கும் தேதி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

**கேள்வி** : *பாபரி மஸ்ஜித் இடத்தில் கோவிலைக் கட்டும் அளவிற்கு சட்டங்களில் மாற்றம் கொண்டுவந்து கோவிலைக் கட்டுவோம் என பாரதீய ஜனதா தனது தேர்தலின் அறிக்கையில் கூறியுள்ளதே அப்படி கூறுவது சட்டப்படி சரிதானா?*

**பதில்** : பாரதீய ஜனதா வால் வெளியிடப்பட்ட இந்த தேர்தல் வாக்குறுதி சட்டப்படி சரியானதல்ல,

**கேள்வி** : *பாரதீய ஜனதா தனது தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் பாபரி மஸ்ஜித் விடயத்தில் இதுவரை என்ன செய்துள்ளனர்?*

**பதில்** : அவர்கள் இதுவரை எதுவும் செய்யவில்லை. பாரதீய ஜனதா வாக்குகளுக்காகவே அப்படி ஒரு வாக்குறுதியை அள்ளி வீசியுள்ளது.

**கேள்வி** : *வழக்கினை துரிதபடுத்த உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?*

**பதில்** : நாமும் நமது பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்து உச்சநீதிமன்றத்திடம் வழக்கு விசாரணைக்கான தேதியை அறிவிக்கும்படி கோரிக்கையை வைக்கச் சொல்ல வேண்டும் அப்படி இவ்வழக்கு விசாரணைக்கு வந்தால் வழக்கை நாம் வெல்வதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன.




**குறிப்பு** : உச்சநீதிமன்றம் பாபரி மஸ்ஜித் வழக்கு சம்பந்தமாக எல்லா ஆவணங்களையும் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்க்க வேண்டும் என்று சொல்லியுள்ளது நம்மில் பல ஐயங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆவணங்களை மொழிப்பெயர்த்து முடிப்பதற்கு பல ஆண்டுகள் ஆகலாம். இதற்குள் உத்திரபிரதேச அரசை தங்களுடைய கரங்களுக்குக் கொண்டுவந்து பாரதீய ஜனதா கோவிலைக் கட்டலாம். அப்படி கட்டினால் உச்சநீதிம்ன்றம் கட்டும்வரை வேடிக்கை பார்த்துவிட்டு எந்த நிலையில் இருக்கிறதோ அதை அப்படியே பாதுகாக்க வேண்டும் என்கின்ற தீர்ப்பை சொல்லி கட்டப்பட்ட கோவிலை பாதுகாப் பதற்கான தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பல உச்சநீதிமன்ற நீதிபதிகளும், உயர்நீதிமன்ற நீதிபதிகளும், மனித உரிமை ஆர்வலர்களும் பாபரி மஸ்ஜித் வழக்கை இத்தனை ஆண்டு காலம் திட்டமிட்டு இழுத்தடிப்பது உச்சநீதிமன்றம்தான் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

இப்போதும் இந்த வழக்கை உச்சநீதிமன்றம் இழுத்தடிக்கவே முயற்சி செய்கின்றது.

பாபரி மஸ்ஜித் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு மு. குலாம் முஹம்மது அவர்கள் எழுதிய வேர்கள் வெளியீட்டகத்தின் வெளியீடான " பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள் " எனும் நூலை வாங்கிப்படிக்கவும்.

**- M.G.M**

**வைகறை வெளிச்சம்**
**சந்தா குறித்த புகார்களுக்கு**

**Mob : 9841675657**

# எது முதலில்?

## எது சிறந்த பணி என்று எப்படி முடிவெடுக்கிறார்கள்?

சமுதாயம் எதிர்கொள்ளும் நிகழ்கால சூழல்களுக்கு ஏற்றவாறு எது சிறந்த பணி என்பதை அறிஞர்கள் தீர்மானிக்கிறார்கள் என்பதை முன்னர் பார்த்தோம்.

இதே போல்தான் ஒவ்வொரு தனி நபரையும் பொருத்து அவருக்கு எது சிறந்த பணி(அமல்) என்பது தீர்மானிக்கப்படுகிறது.

மார்க்க அறிஞர்கள் மத்தியில் இது குறித்து பெரும் கருத்து வேறுபாடு கள் நிலவுகிறது. பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

என்னைப் பொருத்தவரை அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் கூறுவது போல " எது சிறந்த பணி என்ப தெல்லாம் ஒவ்வொரு தனி நபரைப் பொருத்தும் அவர் வாழும் காலம், சூழ்நிலை, இடம் இவற்றைப் பொருத்தும் மாறுபடும்." என்பதே சரியாகத் தோன்றுகிறது.

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள் தனது ' மதாரிஜுஸ் ஸாலிகீன் ' எனும் நூலில் கூறுகிறார் :

" இய்யாக்க நவுபுது = இறைவா உன்னையே நாங்கள் வணங்குகிறோம் " என்று கூறி யார் அதை செயல்படுத்துகின்றார்களோ அவர்கள் தங்களைப் பொருத்தவரை எந்த பணி(அமல்) சிறந்தது, ஏற்றமானது, பயன்மிக்கது, முதலில் செய்யப்படவேண்டியது என்பதை தீர்மானிப்பதில் நான்கு வகையினராக செயல்படுகின்றார்கள்.

**முதல் வகை**

இவர்கள் சிரமமான பணிகளே சிறந்த பணி என்று கூறுகின்றனர். அதாவது எந்தப் பணிகளைச் செய்வதற்கு மனிதன் சிரமப்படுகிறானோ, எது கடினமான பணியோ அதுவே சிறந்தது. பயன்மிக்கது என்று கூ றுகின்றனர். இதற்கு அவர்கள் இரண்டு காரணங்களைக் கூருகின்றனர்.

ஒன்று: கடினமான பணிகளை (அமல்களைச்) செய்வதையே மனித மனம் பாரதூரமாகக் கருதும். பாரதூரமானதை செய்வதுதான் உண்மையான வணக்கம் (இபாதத்) எனவே கடினமானவையே சிறந்த பணி(அமல்).



**இமாம் யூசஃப் அல் கர்ளாவீ**

மற்றொரு காரணம் : சிரமத்துக்கு ஏற்ப கூலியும் கிடைக்குமே. என்கின்றனர் அவர்கள். இதற்கு ஒரு நபி மொழியையும் சான்றாக காட்டுகின்றனர். " செயல்களில் சிறந்தது அவற்றில் சிரமமானவையே " (நபி மொழி) உண்மையில் இது ஒரு நபி மொழியே அல்ல. அதாவது இட்டுக்கட்டப்பட்டது.

மேலும் அவர்கள் தமக்கு இன்னொரு கருத்தையும் சான்றாகக் காட்டுகிறார்கள்.

சோம்பேறித்தனம், பொடுபோக்கு, உலக வாழ்வே நிரந்தரம் என்ற எண்ணம் இவையெல்லாம் மனித ஆத்மாவின் சுபாவத்தில் கலந்திருக்கின்றது. இதை சீராக்க வேண்டுமானாலும் கடினமான, தாங்கவியலாத சிரமங்களை ஆத்மாவின் மீது சுமத்த வேண்டும்.எனவே சிரமமான பணிகளே (அமல்களே) சிறந்தவை என்கின்றனர் இவர்கள்.

**இரண்டாம் வகை**

உலக வாழ்வின் மீது மோகமில்லாமல் பற்றில்லாமல் முடிந்தவரை குறைந்த பொருட்களுடன் வாழ்வதே சிறந்தது என்கின்றனர். இந்த த் துறவிகள் இருவகைப்படுவர் :

பொதுஜனங்கள், பிரத்யேகமானவர்கள்.

உலகப்பற்றின்மையே மனித வாழ்வின் இறுதி இலட்சியம். அதை நோக்கியே செல்ல வேண்டும்.அதற்காகவே பாடுபடவேண்டும். அதையே பிரச்சாரமும் செய்திட வேண்டும். என்று அதற்காகவே வாழ்பவர்கள். கல்வி கற்பதை விட இறைவணக்கத்தை விட உலகப்பற்றின்மையே சிறந்தது என்பார்கள் இவர்கள். வணக்க வழிபாடுகள் அனைத்தின் இலட்சியமும் இதுதான், வழிபாட்டில் சிறந்ததும் இதுதான் என்பர். இவர்கள் பொது ஜனத்துறவிகள்.

பிரத்யேகத்துறவிகள் யாரென்றால் உலகப் பற்றின்மையின் நோக்கம் உலகத்தைத் துறப்பதல்ல. மாறாக, முழு நேரமும் அல்லாஹ்வை இதயத்தில் ஏந்திக் கொள்வதும் அதற்காக முயற்சிகளை யெல்லாம் செலவிடுவதும் இறையன்பைத் தவிர வேறெதுவும் உள்ளத்தில் இல்லாதிருப்பதும் இறைவனின் திருப்திக்காகவே உழைப்பதும் இறைவனையே சார்ந்திருப்பதையும் அல்லாஹ்வை நோக்கியே திரும்புவதுமே உலகப் பற்றின்மையாகும் என்பார்கள்.

எனவே சதாசர்வ காலமும்ப் நாவாலும் இதயத்தாலும் அல்லாஹ்வைத் துதிப்பதும் அல்லாஹ்விடமே அனைத்தையும் ஒப்படைத்து விடுவதுமே சிறந்த (அமல்) பணி. இதிலிருந்து உள்ளத்தை திசை திருப்பி விடுகின்ற எதையும் விட்டுவிடவேண்டும் என்கின்றனர் இவர்கள்.

இப்படிப்பட்ட பிரத்யேகத்துறவிகளிலும் இரண்டு வகை உண்டு.

ஒரு வகை : நன்மையை ஏவுவதையும் தீமையைத் தடுப்பதையும் தம் துறவுக் கோட்பாட்டுக்கு எதிரானதாகவோ இறை தியானத்திலிருந்து தம்மை திசை திருப்புவதாகவோ கருதாதவர்கள். இவர்கள் துறவு என்றால் என்ன? இறைவணக்கம் என்றால் என்ன? என்பதை புரிந்துக் கொண்டவர்கள். பின்பற்றத்தக்கவர்கள்.

மற்றொரு வகை : துறவைத் திரித்தவர்கள். அதாவது துறவுக் கோட்பாட்டைத் தவறாகப் புரிந்துக் கொண்டவர்கள்.எல்லா வணக்க வழிபாடுகளின் நோக்கமும் அல்லாஹ்விடம் நம்மை நாம் முழுமையாக ஒப்படைத்து விடுவதுதான்.எனவே நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் உள்ளிட்ட சமூகப்பணிகளெல்லாம் அல்லாஹ்விடமிருந்து நம்மை திசை திருப்பக் கூடியவை.எனவே அவற்றை திரும்பிக் கூடப் பார்க்கக் கூடாது. என்று இவர்கள் சொல்கிறார்கள்.

எல்லா நேரமும் அல்லாஹ்வைத் தம் இதயத்தில் வைத்திருப்பவரை அன்றாட வணக்கங்களில் (இபாதத்களில்) ஈடுபடும்படி எப்படி கூறமுடியும்? அல்லாஹ்வை நினைக்காதவனுக்குத்தான் வணக்கங்கள் என்று கூட கூறிவிடுகின்றனர்.

இப்படி துறவைத் திரித்தவர்களிலும் இருவகை உண்டு. ஃபர்ளுகள் வாஜிபுகள் ( கட்டாயக்கடமைகள், மற்றன் கடமைகள்) இவற்றைக் கூட விட்டு விடுபவர்கள் ஒரு வகை.

மற்றொரு வகை : சுன்னத்களை(நபிவழி) நஃபில் (உபரி வழிபாடு) களை, பயன்மிக்க கல்விகள் கற்பதை விட்டுவிடுவார்கள். இவையெல்லாம் அல்லாஹ்விடம் நம்மை நாம் முழுமையாக ஒப்படைப்பதற்கு தடையாக இருப்பவை என்பார்கள்.

இப்படி துறவைத் திரித்தவர்களில் ஒருவர் துறவு என்றால் என்ன? என்று நன்கறிந்த ஒருவரிடம் இப்படி கேட்டாராம். " நான் அல்லாஹ்விடம் என்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டு தியானத்திலிருக்கும் போது தொழுகைக்கு அழைக்கும் பாங்கின் ஒலி கேட்கிறது.நான் எழுந்து தொழுகைக்கு சென்றுவிட்டால் இறைத் தொடர்பிலிருந்து என் உள்ளம் பிரிந்துவிடும். தொழுகைக்கு செல்லாமல் அப்படியே இருந்தால் என் உள்ளம் இறைத் தொடர்பிலேயே திளைத்திருக்கும். இப்படிப்பட்ட சூழலில் என்னைப் பொருத்தவரை எனக்கு எது சிறந்தது? இறைத் தொடர்பில் திளைப்பதா? தொழுகைக்குச் செல்வதா? "

இந்த கேள்விக்கு " பாங்கு சொல்லப்படும் போது நீ அல்லாஹ்வுடைய (அர்ஷ்) சிம்மாசனத்தின் கீழே இருந்தாலும் சரிதான். எழுந்து தொழுதிட வேண்டும். தொழுது முடித்த பின் உன்னுடைய இடத்தில் வந்து கொள் " என்று பதிலளித்தாராம் அவர்.

இதுவே சரி. ஏனெனில் இறைத் தொடர்பில் திளைத்திருப்பதாகச் சொல்பவன் தன் மன திருப்திக்காகவும் ஆத்ம சந்தோஷத்திற்காகவுமே திளைத்திருக்கிறான். பாங்கின் அழைப்பிற்கு பதிலளிக்கும் வகையில் தொழுகையை நிறைவேற்றுவது இறைவனுக்காக செய்யவேண்டிய கடமை. யார் இறைவனுக்குறிய கடமைகளை விட தன் மன திருபதிக்கு முன்னுரிமை தருகிறாரோ அவர் " உன்னையே வணங்குகிறொம் இறைவா " என்று கூறுவோரின் அணியில் சேர்ந்தவராகக் கருதப்படமாட்டார்.

தொடரும்..........

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி.M.A**

# மோடியின் ஆஸ்திரேலிய பயணமும்!
## கொள்ளை போகும் இந்தியர்களின் பணமும்!!



பதவி ஏற்ற காலம் தொட்டு வெளிநாட்டு வாழ் இந்தியரை ப் போல் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டு வரும் மோடி அவர்களுக்கு வரவேற்புகளை விட எதிர்ப்புகள்தான் அதிகம் கிடைக்கின்றது. மோடியின் அதிமுக்கியம் வாய்ந்த பயணமாக கருதப்பட்ட அமெரிக்க பயணத்தில் அவரை அமெரிக்க மக்களும், மனித உரிமை ஆர்வலர்களும், அமெரிக்க வாழ் இந்திய மக்களும் **"Modi you are India`s prime murderer"** என வரவேற்று அவருக்கெதிராக மக்கள் நீதிமன்றத்தை நடத்தி தங்களது எதிர்ப்பினை ஆக்ரோஷத்துடன் பதிவு செய்ததை இந்திய மீ(மோ)டியாக்கள் மறைத்த நிலையில் வைகறை வெளிச்சம் மக்கள் மன்றத்தில் தோலுரித்து க் காட்டியது.(பார்க்க வைகறை வெளிச்சம் நவம்பர் 2014)

தற்போது நி20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆஸ்திரேலியா சென்ற மோடியை **"Modi you have Blood on your hands"** (மோடியே உனது கரங்களில் இரத்தம் உள்ளது) என குஜராத் மனித படுகொலையை நினைவுப்படுத்தி மோடி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு வரும்போது பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்களின் எதிர்ப்புகளை பதிவு செய்துள்ளனர்.

அதோடு அல்லாமல் 2002 குஜராத் படுகொலைக்கும் 1984 சீக்கிய கலவரத்திற்கும் நீதியை கேட்டு முழக்கமிட்டுள்ளனர். ஒரு இந்திய பிரதமருக்கு வெளிநாடுகளில் இத்துணை எதிர்ப்புகள் காட்டப்படுவதும் செல்லும் இடங்களெல்லாம் மக்கள் ஆர்ப்பாட்டமும், போராட்டமும் நடத்துவது இதுவே முதன்முறையாகும்.

மோடியின் பயணங்களை புகழ்ந்தும், எழும் எதிர்ப்புகளை மறைத்தும், முதல் பக்கம் தொடங்கி பக்கம் பக்கமாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டாலும் அதனை வெளிநாட்டு ஊடகங்கள் பொருட்படுத்தவில்லை. **G**20 மாநாட்டிற்கு வரும் பல நாட்டு தலைவர்களின் படங்களையும் தனது முதற்பக்கத்தில் போட்டு அலங்கரித்த ஆஸ்திரேலிய பத்திரிக்கைகள் மோடியை கண்டுகொள்ளவேயில்லை. கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல இந்திய ஊடகங்கள் எல்லாவற்றையும் மறைத்து மோடிக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என எழுதி வருகின்றனர். மக்கள் மன்றத்தில் மறைக்கப்படும் உண்மைகளை நாம் நமது வைகறை வெளிச்சத்தில் நெஞ்சுறத்தோடு தொடர்ந்து எழுதி வருகின்றோம்.

மோடியின் ஆஸ்திரேலிய பயணத்தின் போது இந்திய வர்த்தகக்குழு ஒன்றும் ஆஸ்திரேலியா சென்று வந்துள்ளது. அந்த குழுவில் குஜராத்தில் பல






முதலீடுகளை செய்துள்ள அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானியும் இடம்பெற்று ஆஸ்திரேலியா சென்று வந்தார். (இந்த அதானி மோடிக்கு மிக நெருக்கமாக இருப்பதும், அதானி தேர்தலுக்காக மோடிக்கு பல்கோடிகளையும், தன் விமானத்தையும் தாரைவார்த்து ஊர் அறிந்த விடயம்)

ஆஸ்திரேலியாவில் கார்மிக்கேல் (குயின்ஸ்லேண்ட்) என்கின்ற இடத்தில் சுரங்கக் கம்பெனி ஒன்றை துவங்க அதானி குழுமத்திற்கு ஆஸ்த்திரேலிய அரசு அனுமதி கொடுத்திருக்கின்றது. இந்த திட்டத்திற்காக அதானி குழுமத்திற்கு சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்களை (இந்திய மதிப்பு சுமார் 61,532,000,000 ரூபாய்) கடனாக கொடுக்க இந்தியாவின் முன்னணி வங்கியான ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா முன்வந்துள்ளது.

ஆஸ்திரேலிய நாட்டில் ஏற்கனவே உள்ள நிலக்கரி சுரங்கங்கள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. இதனால் அந்நாட்டில் சுமார் 400 சுரங்கத் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். 2017 ஆம் ஆண்டின் இருதியிலிருந்து சுரங்கம் செயல்படும் என அதானி குழுமம் உத்தரவாதம் அளித்துள்ளது. தோண்டப்படும் நிலக்கரியை ஏற்றுமதி செய்வதற்காக நிலக்கரி தோண்டப்படும் இடத்திலிருந்து 400கி.மீ. தொலைவில் துறைமுகத்தையும், சுரங்கத்திலிருந்து துறைமுகம் வரையிலான 400கி.மீ. தூரத்திற்கு இரயில் பாதையையும் அதானி குழுமமே அமைத்து கொள்ள வேண்டும் என்கின்ற விதியுடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. **"Make in india"** என்று முழங்கி வரும் பா.ஜ.க அரசு இத்துனை கோடி முதலீட்டை ஆஸ்திரேலியாவிற்கு தாரை வார்ப்பது எந்த வகையில் நியாயம்? என்பதே இந்தியர்களின் மில்லியன் டாலர் கேள்வி.

மேலும் அந்நாட்டின் முதன்மை நிலக்கரிச் சுரங்க நிறுவணமான **Glencore** இந்நிறுவனத்திற்கு மொத்தம் 13 சுரங்கங்கள் உள்ளன) நஷ்டத்தில் இயங்கி வருவதால் அந்நிறுவனத்தின் 8000 ஊழியர்களுக்கு கட்டாய விடுப்பு கொடுக்கப் பட்டுள்ளது குறித்து அத்துறை சார்ந்த நிபுணர்கள் சொல்கின்றனர்.

தாழ்த்தப்பட்ட சிறுபாண்மை சமூகங்களின் மாணவர்களுக்கு கல்விக்கடன் கொடுப்பதற்கே இழுத்தடிக்கும் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா ஆஸ்திரேலியாவில் நிலக்கரித்துறை தற்போது நஷ்டத்தில் இயங்கி வரும் நிலையில் இத்துனை கோடி ரூபாய் ஒரு தனி நபருக்கு கடனாக எவ்வாறு கொடுக்கின்றது.

ஏற்கனவே விஜய் மல்லையா வின் கிங்பிஷர் நிறுவணத்திற்கு பொதுத்துறை வங்கிகள் பலகோடி ரூபாய் கடனாக கொடுத்து அவன் கைவிரித்து அது விலையேற்றமாக யார் தலையில் சுமத்தப்பட்டது. அதே போல் நாளை அதானியும் கைவிரித்தால் யார் ஈடுகட்டுவது இத்துனை கோடி ரூபாய் இழப்பை?

நம் நாட்டின் பணத்தை அதிலும் பலர் சிறுக சிறுக சேமித்த பணத்தை ஆஸ்திரேலியாவில் முதலீடு செய்ய போகிறதே பா.ஜ.க அரசு நாளை ஆஸ்திரேலிய அரசு சட்ட விதிமுறைகளை ம ாற்றி




ஒப்பந்தம் செல்லாது என்று அறிவித்தால் அதானியால் கட்டப்படும் துறைமுகமும் 400கி.மீ இரயில் பாதையும் யாருக்கு சொந்தம்? இதற்கு வெளிநாட்டு வாழ் இந்தியராக மாறியுள்ள மோடியின் பதில் என்ன?

ஆக தனக்காக பல வகையிலும் உதவிய அதானியின் செஞ்சோற்று கடன் தீர்க்கவே மோடியின் இந்த ஆஸ்திரேலிய பயணமும், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவின் கடனுதவியும்.◆

**- ஹாரிஸ் முஹம்மது**


வைகறை வெளிச்சம்

இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்

வைகறை வெளிச்சம் சந்தாக்களை புதுப்பித்து பயனடையுங்கள்

வேர்கள் பதிப்பகம்

ஆசிரியர்

பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு

விலை ரூ.110

தாலிபான் பிடியில்

விலை ரூ.90

# திராவிட கட்சியின் எச்சரிக்கை

தந்தை பெரியார், திராவிடர் இயக்கம் இவற்றால் பக்குவப்படுத்தப்பட்ட திராவிட இயக்க மண்ணில் ஆரிய பி.ஜெ.பி. தன் கால் பதிக்க பல்வேறு சூழ்ச்சிகளை அரங்கேற்றி வருகிறது என்று " டைம்ஸ் ஆஃப் இந்தியா " ஆங்கில நாளேடு (18.11.2014) அம்பலப்படுத்தியுள்ளது.

பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டு ஆங்கிலேயர்கள் நாடு முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இப்பிரிவினைக் கோட்பாட்டின் மூலம் தற்போதைய பா.ஜ.க அரசு மத ரீதியாக மக்களை பிரித்து ஒற்றுமையை சிதைத்து மத்தியில் ஆட்சியைப் பிடித்தது. தற்போது சமூக நீதிக் களமான தமிழகத்தில் கால் பதிக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.

தந்தை பெரியாரின் திராவிட இயக்கத்தின் வலிமையால் சுதந்திரத்திற்குப் பிறகு மதவாத சக்திகளை வேரோடு பிடுங்கி எரிந்ததுமில்லாமல் திராவிட கட்சிகளின் தாக்கம் இன்னும் நூற்றாண்டு வரை இருக்கும்படி செய்துவிட்டது.

ஆனால் மத்தியில் பிரித்தாளும் கொள்கையுடன் ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க தற்போது தமிழகத்திலும் தனது பிரித்தாளும் கொள்கையை களமிறக்கத் தொடங்கியுள்ளது.

### ஆரியர்களின் வருகை

ஆரியர்கள் வந்த பிறகு வட இந்தியாவில் பெரும் கலாச்சார சீரழிவை ஏற்படுத்தினார்கள். தென் இந்தியாவிலும் பெரும் கலாச்சார சீரழிவை ஏற்படுத்தினார்கள். தென் இந்தியாவிலும் தங்கள் பலத்தை காண்பித்து வருணக் கோட்பாட்டை நிலை நிறுத்தினார்கள். இதற்கான எதிர்ப்பு வடக்கில் தொடங்கினாலும், அம்பேத்கர் போன்ற பெரும் தலைவர்களின் மறைவிற்குப் பிறகு ஆரிய எதிர்ப்பு வலுவிழந்துவிட்டது அல்லது அந்த எதிர்ப்பு சக்திகள் ஆரியர்களின் சூழ்ச்சிக்கு அடிபணிந்து விட்டன. ஆனால் தமிழகத்தில் அப்படியல்ல! பெரியாரின் திராவிடர் கழகத்தின் தாக்கம் தொடர்ந்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து இருந்த தி.மு.க. மற்றும் ஆ.தி.மு.க. ஆட்சியின் காரணமாக நீடித்து வருகிறது.

முக்கியமாமாக திராவிட கருத்தாழமிக்க தமிழகத்தை மத்தியில் பலம் வாய்ந்த ஆரியக்கூட்டம் ஒரு வகை பகைமைப் பார்வையே பார்த்து வந்தது. இதன் காரணமாகத்தான் அறிஞர் அண்ணா " வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது! " என்றார்.

இதற்கு காரணம் உண்டு ஆரியர்களின் விரோத மனப்பான்மை எந்த அளவிற்கு ஊறிவிட்டது என்றால், தமிழ் மொழியை ஒழிக்கக் கங்கணம் கட்டி, இந்தியை முழுமையாகத் திணிக்கும் சூழ்ச்சியைத் தொடர்ந்து செய்து வந்தார்கள். பா.ஜ.க வின் ஆட்சியில் இந்தி மொழித் திணிப்பு மேலும் தீவிரமாகியுள்ளது.

### இடையில் புகுந்தது ஆரிய இனம்!

இந்துத்துவ சக்திகளின் கூறான வேதங்கள் எல்லாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதப் பட்டவை என்ற கட்டுக்கதைகள் செல்லுப்படியாகவில்லை. சமீபத்திய மனித இன இடப்பெயர்வு குறித்த ஆய்வு ஒன்றில் இந்திய தீபகற்பத்தில் 2000 ஆண்டுகளுக்கு இடையே பெரிய அளவில் அந்நிய இனம் புகுந்தது. இதற்கு முன்பே பன்னெடுங்காலமாக இந்திய தீபகற்பத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு ஓர் இனம் வாழ்ந்து வந்தது என்ற உண்மை ஆரியர்கள் சமீபத்தில் இந்தியாவிற்குள் புகுந்த வந்தேறிகள்தான் என்பதை உறுதி செய்துள்ளது. இதிலிருந்தே வேதங்கள் எனும் கட்டுக் கதைகள் மூலம் தன்னை இந்த மண்ணிற்கு சொந்தக்காரர்கள் என்று போலியான ஒரு தோற்றத்தை ஆரியக் கூட்டம் உருவாக்கிய சூழ்ச்சி தெரிய வரும். அதே நேரத்தில் இப்பொய்யை தற்போதைய அரசு வரலாற்றுப் பாடங்களில் மாற்றங்களைச் செய்து உண்மையாக்க முயல்கிறது.

வட மற்றும் தென் மாநிலங்களில் பாஜகவிற்கு மிகவும் வித்தியாசமான ஒரு நடைமுறை அனுபவம் கிடைத்தது. அதாவது வட மாநிலங்களில் எளிதில் மத ரீதியாக மக்களை ஏய்த்து ஆட்சிக்கட்டிலைப் பிடித்தவர்களுக்குத் தமிழகத்தில் பிரித்தாளும் சூழ்ச்சி என்பது செல்லுபடி ஆகாது. ஆகவேதான் மோடி ஊழல் அற்ற என்ற ஒரு பிரம்மையை தமிழகத்தை மனதில் கொண்டு பிரச்சாரம் செய்து வருகிறார்.

### திராவிட கட்சிகள் மீது அவதூறு பரப்புதல்

தமிழகத்தில் திராவிடக் கட்சிகளின் ஆட்சியைக் குறித்து முதலில் மக்கள் மனதில் வெறுப்பை உண்டாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன்

தமிழக பாஜகவினருக்கு கடுமையான சில உத்தரவுகளைப் போட்டிருக்கின்றனர் மோடியும் அமித்ஷாவும்.

முக்கியமாக தற்போது முதல் குறி திராவிட சிந்தனையை உடைப்பதுதான் அவர்களின் பணி. இதற்காகவே முதலில் ஆரிய - திராவிட எனும் கோட்பாட்டை உடைத்து திராவிட சிந்தனை மீது பழித்தூற்றும் வகையில் பல்வேறுக் கட்டுக்கதைகளை தயார் செய்து மக்களிடையே பரப்புவது, அதாவது பாரம்பரிய இந்திய மரபை ஆங்கிலேயர்கள் சிதைத்தனர். அதைத் திராவிட சிந்தனைக் கொண்ட கட்சிகள் இன்றும் காப்பாற்றி வருகின்றனர் என்ற பொய்யான பிரச்சாரம் உள்ளூர மேற்கொள்ளப்படுகிறது.

## ரஜினியை இழுக்க முயற்சி

அதற்கேற்றாற்போல் பிரபல திரைப்பட நடிகர்களைத் தங்களின் பக்கம் இழுக்க முயற்சி செய்து வருகின்றது. இதன் முதல் படியாக ரஜினிகாந்தை தங்கள் வலையில் சிக்க வைக்க முழு முயற்சி எடுத்து வருகிறார்கள்.

பாஜக தனித்து நின்று தமிழக அரசியலில் சாதிக்க முடியாது. இதன் காரணமாக 2014 இல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து பார்த்தது. இருப்பினும் அதன் வாக்கு வங்கி எதிர்பார்த்த அளவிற்குக் கூடவில்லை.

தற்போது முக்கியப் பிரச்சனையான மீனவர் சிக்கலை பா.ஜ.க கையில் எடுத்துள்ளது. ஒருபுறம் இராஜபக்சேவிற்கு மத்திய அரசு முழுமையாக ஆதரவு தரும் நிலையில் தமிழக மீனவர்களின் பிரச்சனைகளை எப்படி தீர்க்கப் போகிறார்கள் என்பது தமிழக மக்களின் மத்தியில் மிகப்பெரும் கேள்வியாக எழுகிறது. அதே நேரத்தில் இராஜபக்சேவுடன் சுமூகமாகப் பேசி மீனவர் பிரச்சனையைத் தீர்ப்பது போன்ற ஒரு மாயையும் தமிழக பாஜக கிளப்பி வருகிறது.

அதே நேரத்தில் தமிழகத்தில் திராவிட சிந்தனையை ஒழிக்க பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரைக் கொண்டே எதிர்ப்பு அலையை உருவாக்கி வருகிறது. இதன் முன்னேற்பாடாகத்தான் நாடார் சமூகத்தை சார்ந்தவர்களை முக்கிய பதவியில் அமர வைத்து சமூகநீதிக்கு ஆதரவான அதே நேரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான எதிரிகள் நாங்கள் (பாஜக) அல்ல என்று காட்டுவது போன்ற ஒரு மாயையை உருவாக்கிவிட்டது.

## மாயையை உருவாக்குகிறார்கள்

மேலும் பாஜக வின் இந்துத்துவா சக்திகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக இருப்பது போன்ற ஒரு மாயையை உருவாக்க தமிழகத்தை சேர்ந்த மத்திய இணையமைச்சர் காஞ்சி சங்கராச்சியாருடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டது போன்ற ஒரு போலியான மாயையை உருவாக்குவது மற்றும் ஆர்.எஸ்.எஸ் கூடாரத்தில் அதிகப்படியான பிற்படுத்தப்பட்ட மக்களை இணைக்க செய்வது போன்ற சூழ்ச்சிகள் அரங்கேறி வருகின்றன என்று " டைம்ஸ் ஆஃப் இந்தியா " (18.11.2014 செய்தி வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் இரகசியமாகத் தமிழகம் வந்த பாஜக தலைவர் அமித்ஷா தியாகராயர் நகரில் மதம் தொடர்பான மடம் ஒன்றிற்கு சென்று வந்தார். அங்கு ஆர்.எஸ்.எஸ் தமிழகப் பிரமுகர்கள் பலர் அவரை சந்தித்ததாக தெரிகிறது. அமித்ஷா வந்து சென்ற பிறகு நடந்த சம்பவங்கள் பாஜகவின் சூழ்ச்சியை விரைவில் வெளியே கொண்டு வந்துவிட்டன.

அமித்ஷா சென்னை வந்து சென்ற சில நாட்களில் ஆர்.எஸ்.எஸ். தமிழகம் முழுவதும் ஊர்வலம், போராட்டம், பொதுக்கூட்டம்,என ஆரம்பித்து விட்டார்கள். இதுவரை தமிழகத்தில் மறைமுகமாக இயங்கிக்கொண்டிருந்த ஒரு சக்தி இப்போது வெளிப்படையாக களமிறங்கியுள்ளது.

தமிழகத்தில் திராவிட சிந்தனையை வேரில் இருந்து அழித்தொழிக்கும் வகையில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு பதவிகளைக் கொடுத்து அவர்களை பகடை காய்களாகப் பயன்படுத்தி களமிறங்கும் பாஜகவின் சூழ்ச்சி எந்த அளவிற்கு பலன் தரும் என்பது வரும் காலங்களில் தெரிந்துவிடும்.


எது முதலில்?

ஆசிரியர்

இமாம். யூசுஃப் அல் கர்லாவி.

தமிழில்

K.M.இலியாஸ் ரியாஜி. M.A

விலை : 40/-

98416 75657

# மறைக்கவே நினைக்கிறோம்

## அடுத்த தலைமுறைக்கு!



சுமார் ஒரு வருட காலம் நடைபெற்றது. தெருக்கள் வீதிகள் தோறும் ஓலங்கள் ஒளித்துக்கொண்டே இருந்தன. எந்த கிணற்றைப் பார்த்தாலும் தெரு ஓடைகளைப் பார்த்தாலும் பிணங்கள் தான். அது ஒரு பாஸிசத்தின் நீண்ட நெடிய திட்டம். தம் முந்தைய தலைமுறையின் வீரத்தையும், தீரத்தையும் மறந்தோம். அதனால் தான் இன்னும் வீழ்ந்துக் கொண்டே இருக்கிறோம். ஆம் நாம் கோழைகளாக மாறிவிட்டோம் போலும்! அதனால் தான் அடுத்த தலைமுறைக்கு நாம் நம் வரலாற்றை மறைக்கவே நினைக்கின்றோம்.

மிர்பஹி என்பவரால் கட்டப்பட்ட பாபரி மஸ்ஜித் ஷஹீதாக்கப்பட்டு சுமார் 22 ஆண்டுகள் கடந் து விட்டது. நம் நினைவாற்றலில் இருந்தும் அது செயல் இழந்துக் கொண்டிருக்கிறது. டிசம்பர் - 6 என்று வந்தாலே நம் சிந்தனையில் உதித்து வீடுகளிலிருந்து வெளியே குதித்து நம் எதிர்ப்புகளை வெளியே காட்டிய மறக்க முடியாத தினங்களெல்லாம் சுருங்கி இன்று விட்டுக் கொடுக்க தயாராகி வருகிறது.

இந்துத்துவாவின் நீண்ட நெடிய திட்டங்களில் ஒன்று நம் வரலாற்றை மறைப்பதும், புதைப்பதும் தான். அந்த திட்டத்தில் நாம் கொஞ்சம் ஒட்டிக்கொண்டு அடுத்த தலைமுறைக்கு இப்படி ஒரு பாபரி பள்ளிவாசலை விட்டுக்கொடுக்க கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். என்பது நமது இயலாமையை காட்டுவது போன்று உள்ளது.

முதல் உலக போரை முஹம்மது நபி(ஸல்) அவர்களால் விரித்துக் காட்டிய கிலாஃபத்தை 1924 - ல் தகர்த்து எறியவே பிரட்டானிய வெள்ளையர்கள் திட்டம் தீட்டினார்கள். அதை செய்தார்கள். நாம் தலைமையை இழந்தோம். பிறகு இந்தியாவின் படையெடுப்பிற்கு முஸ்லிம்களின் உயிர்தியாகமே 1947 இந்திய சுதந்திரம். அந்த சுதனதிரத்திற்கு முன்பும் கூட எந்த முஸ்லிம்களும் பாபரி பள்ளிவாசல் வழக்குகளை விட்டுவிடுவுமில்லை. விட்டுத்தருவதுமில்லை.

கயவர்கள் வெள்ளையர்கள் இந்து - முஸ்லிம்களின் ஒற்றுமையை சீர்குலைக்கவே பார்பானிய இந்துத்துவாவுக்கு இணங்க பாபரி பள்ளி வழக்கை நிலுவையில் விட்டுவிட்டே சென்றார்கள். 460 ஆண்டுகால வரலாறு கொண்ட பாபரி பள்ளிவாசலை மீட்டெடுக்க போராடிக் கொண்டிருந்த முஸ்லிம் சமுதாயம் இன்று விட்டுக்கொடுக்க முனைப்பெடுக்கிறது.

இப்படி ஒரு செயலை நாம் நபி(ஸல்) அவர்களிடமோ, சஹாபாக்கள் காலங்களிலோ மற்றும் தாபியீன்கள், இமாம்கள் காலங்களிலோ எங்காவது கண்டதுண்டா? உமர்(ரழி) அவர்களின் ஆட்சி காலத்தில் ரோமானிய பாரசீக வெற்றிக்கு பிறகு வெள்ளை கிறிஸ்த்தவர்கள் சிலுவைப் போர்களை நடத்தினார்கள்.

முதல் சிலுவை யுத்தத்தில் நாம் நம் முதல் கிப்லாவான ஃபைத்துல் முகத்தஸை (மஸ்ஜிதுல் அக்ஸா) இழந்தோம். பின்பு இரண்டாம் சிலுவை யுத்தத்தில் இழந்த ஃபைத்துல் முகத்தஸை மீட்டோம்! வென்றோம்!!

ஏன் இன்றளவும் ஆக்கிரமிப்பு இஸ்ரேலின் தாக்குதலில் அல்லாஹ்வின் பள்ளிவாசல் அல்-அக்ஸாவை தங்கள் உயிரை கேடயமாக கொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அங்குள்ள சகோதரிகளே தங்கள் அடுத்த தலைமுறைகளை அல்-அக்ஸாவை காத்துக்கொள்ள விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்ஷா அல்லாஹ் நாம் அதில் வீழ்வதுமில்லை! தோர்க்கப் போவதுமில்லை.

இல்லாத இராமனுக்கு அயோத்தி, இன்னும் காசி, மதுரா என்று இந்துத்துவவாதிகளின் கொக்கரிப்புகள் நீண்டுக்கொண்டே இருக்கிறது. உலக் முஸ்லிம்களை அழித்து ஒழிப்பதற்காக நவீன சிலுவை யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் அமெரிக்காவில் வாழ்கின்ற முஸ்லிம்களை பாருங்கள்.

அமெரிக்க இரட்டை கோபுரத்தை அமெரிக்க இஸ்ரேலிய யூதர்களே இடித்துவிட்டு பழியை முஸ்லிம்களின் மேல் போட்டார்கள். இடிக்கப்பட்ட இடத்திற்கு **Ground Zero** என்று பெயரும் வைத்தார்கள். உண்மை வெளியே வந்தது. அமெரிக்க




வாழ் முஸ்லிம்கள் போராடினார்கள். வழக்குகளை சந்தித்தார்கள். முஸ்லிம்களின் மேல் வீசப்பட்ட கறையினை போக்க வெகுண்டெழுந்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு உதவினான்.முஸ்லிம்கள் மீது பழிசுமத்தப்பட்டு நினைவாலயம் அமைத்த இடத்தில் அல்லாஹ்வின் பள்ளிவாசலை கட்டினார்கள். ஆம் **Ground Zero Mosque** என்கின்ற இறைவனை தொழும் இடமாக இன்று அது எழுந்து நிற்கின்றது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்க ள் எ வர் ஒருவர் அல்லாஹ்விற்காக ஒரு பள்ளிவாசலை எழுப்புகிறாரோ அவருக்காக அல்லாஹ் சுவனத்தில் ஒரு வீட்டை எழுப்புகிறான்."(அல்லாஹ் அவர்களுக்கு ஆமீனாக்குவானக!)

சற்றே ஒப்பிட்டுப் பார்ப்போம்! அமெரிக்க வாழ் முஸ்லிம்களையும் நம்மையும் அங்கே முஸ்லிம்களின் மீது விழுந்த பழியை நீக்க 14 ஆண்டுகளில் இதற்கு காரணம் முஸ்லிம்கள் அல்ல என்று நிரூபித்து அங்கே **Ground Zero** பள்ளிவாசலை கட்டி எழுப்பினார்கள்.

460 ஆண்டுகால அல்லாஹ்வின் பாபரி பள்ளிவாசலை இடித்தும் நாம் படிப்பினை பெறாதவர்களாக இருந்துக் கொண்டிருக்கிறோம். நம் அடுத்த தலைமுறையையும் பிடித்து நிறுத்திக் கொண்டிருக்கிறோம்.

நபி(ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள், எவன் ஒருவன் தன் வரலாற்றை நினைவு கூறவில்லையோ அவன் அழிந்து போவான் என்று நம் படிப்பினைக்காக அல்லாஹ் எத்தனையோ சமுதாயத்தை படைத்தும் காட்டியிருக்கின் றான். அழித்தும் காட்டியிருக் கின்றான்.

முந்தைய வல்லரசான பாரசீக மன்னனின் முன் நின்று அநியாயமான ஆட்சி செய்துக் கொண்டிருக்கிறாய். எப்படி நீ பொண்ணையும், பொருளையும் விரும்புகிறாயோ அதுபோல மரணத்தை விரும்பும் கூட்டம் என்னிடமுள்ளது என்று கூறிய காலித் பின் வாலித் (ரழி) அவர்கள் நமக்கோர் சகாப்தம். முதல் சிலுவை யுத்தத்தில் இழந்த மஸ்ஜிதுல் அக்ஸாவை இரண்டாம் சிலுவை யுத்தத்தில் மீட்டெடுத்த இமாம் சலாவுதீன் அய்யூபி(ரஹ்) அவர்கள் நமக் கு இன்னோர் சகாப்தம்.

இவர்களின் சகாப்தங்கள்! இன்றைய தலைமுறைகள் அங்கே தொடர்ந்துக் கொண்டிருக்கின்றது. வரலாற்றை மறைப்பதும் வரலாற்றை மறப்பதும் நமது அடுத்த தலைமுறைக்கு திரையாகவே நின்று விடும். இந்தியாவிற்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த முஸ்லிம்களின் நிலையை உணர்ந்து பார்ப்பானிய இந்துத்துவா கொள்கையை பின்பற்றும் நரமாமிச மோடியும் இந்திய முஸ்லிம்கள் இந்தியர்களாக எதையும் தியாகம் செய்ய தயாராக இருக்கிறார்கள் என்று கூறினார்.

460 ஆண்டுகால பாபரி மஸ்ஜித்தை மீட்டெடுக்க நாமும் ஒரு சகாப்தம் படைக்கவேண்டும். வெறும் டிசம்பர் - 6 ஐ துக்கத்தின் தினமாகவோ, கருப்பு தினமாகவோ மட்டும் கருதி வெளியே அறைகூவல் விட்டால் போதாது. நாமும் சரி நம் அடுத்த தலைமுறையும் சரி டிசம்பர் ஆறாம் நாளை மட்டும் கருதாமல் டிசம்பர் ஏழு முதல் அடுத்த டிசம்பர் ஐந்து வரை பாபரி மஸ்ஜித்திற்காக உழைத்தால் இன்ஷா அல்லாஹ் அடுத்த தலைமுறையிலாவது நாம் மீட்டெடுத்து விடலாம்.

முடிவாக பாபரி பள்ளிவாசலை மீண்டும் கட்டி எழுப்புவதே ஒரே தீர்வு. அல்லாஹ் உதவி செய்வானக!.

**- அப்துல் பாசித்**


**விரைவில் வேர்கள் வெளியீட்டகத்தின் அடுத்த வெளியீடு**

**“இஸ்லாமும் இதரப் பொருளாதாரக் கொள்கைகளும்”.**

# ஆர்.எஸ்.எஸ் - ஸிற்கும் தீவிரவாதத்திற்கும் உண்டான தொடர்பு.

# அன்றும்! இன்றும்!!



ஆர்.எஸ்.எஸ் தனது பொருப்புதாரிகளும், உறுப்பினர்களும் தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதில்லை என வெளிப்படையாக தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை தொடர்ந்து நிராகரித்து வருகின்றது. ஜனவரி 10, 2011 ஆம் ஆண்டு குஜராத்தின் சூரத் நகரில் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்களுக்காக நடந்த கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ் இன் தலைவர் மோகன் பகவத் பேசும்போது தீவிரவாதிகளுக்கு ஆர்.எஸ்.எஸ் இல் இடமில்லை என்றார். மேலும் அவர் கூறியதாவது :

நாட்டில் நடைபெற்ற பல்வேறு குண்டுவெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் பெரும்பான்மையினருக்கு ஆர்.எஸ்.எஸ் உடன் தொடர்பிருப்பதாக குற்றப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற குற்றச் செயலில் ஈடுபடுபவர்களில் சிலர் தானாக ஆர்.எஸ்.எஸ் இலிருந்து வெளியேறியவர்கள் என்றும் மற்றும் சிலரை தீவிரவாத எண்ணம் கொண்டவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ் இல் இடமில்லை என்று ஆர்.எஸ்.எஸ் வெளியேற்றியதாக கூறினார்.

*(தி இந்தியன் எக்ஸ்பிரஸ் 11 ஜனவரி 2011 பக்கம் : 3)*

ஆர்.எஸ்.எஸ் தன் மேல் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை மறுக்கும் விதமாக ஆர்.எஸ்.எஸ் இல் தீவிரவாதம் எண்ணம் கொண்டவர்களுக்கு இடமில்லை என்று பூசி மொழுகினாலும் குற்றம் சாட்டப்படும் தீவிரவாதிகள் ஆர்.எஸ்.எஸ் இன்



உறுப்பினர்களே. ஆர்.எஸ்.எஸ் தலைவரின் சூரத் பேச்சு இயல்பான சில கேள்விகளை மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளது.

அவை :

1. முதலாவதாக ஆர்.எஸ்.எஸ் இலிருந்து தானாக வெளியேறிய தீவிரவாதிகளின் பெயர்களை வெளியிடவேண்டும்.

2. இரண்டாவதாக தீவிரவாத எண்ணம் கொண்டவர்கள் என ஆர்.எஸ்.எஸ் வெளியேற்றியவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும்.

இந்த கேள்விகளுக்கு பதிலைக் கொடுத்து ஆர்.எஸ்.எஸ் நாட்டு மக்களை தெளிவுபடுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக இந்த இரண்டு கேள்விகளுக்கான விடையை இந்தியாவின் காவல்துறை மற்றும் பாதுகாப்பு துறையிடம் பகிர்ந்து கொண்டால் விசாரணைகளுக்கு அது ஏதுவாக அமையும்.

இன்னும் குறிப்பாக மோகன் பகவத்தை விசாரணைக்கு உட்படுத்தினால் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளின் முழு விவரங்களும், குற்றம் சுமத்தப்பட்டதற்காக தலைமறைவாக இருக்கும் சில தீவிரவாதிகலின் விவரங்களையும் பெறலாம். மேலும் திரைப் மறைவில் தீவிரவாத செயலில் ஈடுபடுகின்ற சில தீவிரவாதிகள் குறித்த விவரங்களையும் அவரை விசாரிப்பதின் மூலம் வெளிப்படலாம்.

இதுவரை நாட்டில் நடைபெற்ற அனைத்து குற்ற நிகழ்வுகளும் மக்களை வெளிப்படையான ஒரு கேள்வியை கேட்க நிர்பந்திக்கின்றன. ஏனென்றால் நாட்டில் எப்போது தீவிரவாத செயல்கள் நடந்தாலும் குற்றம் சாட்டப்படும் நபர் தனது உறுப்பினர் அல்ல, என்பதை காந்தியார் படுகொலை

முதல் இன்று வரை ஆர்.எஸ்.எஸ் கூறிவருகின்றது.

நம்மால் எப்படி இதை உறுதி செய்ய முடியும்? இது நாள் வரை ஆர்.எஸ்.எஸ் தனது அதிகாரப்பூர்வமான உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட்டதில்லை. ஒரு வேலை வெளியிட்டிருந்தால் குற்றம் சுமத்தப்படும் குற்றவாளியின் பெயர் ஆர்.எஸ்.எஸ் உறுப்பினரா? என்பதை சரிப்பார்த்து உறுதி செய்ய டியும்.இப்படியாக ஆர்.எஸ்.எஸ் எதையும் வெளிப்படுத்தாததால் தீவிரவாத செயல்களில் ஈடுபடும் தனி நபர்களுக்கும், குழுக்களுக்கும், தீவிரவாத இயக்கங்களுக்கும், தொடர்பு கிடையாது என குற்றம் சுமத்தப்படும் போதெல்லாம் ஆர்.எஸ்.எஸ் தப்பித்து வருகின்றது.

சமீபத்தில் நடைபெற்ற தீவரவாத செயல்களில் ஈடுபட்ட தனி நபரோ அல்லது தீவிரவாத இயக்கமோ, இந்துத்துவ தீவிரவாத தத்துவத்துடனும் ஆர்.எஸ்.எஸ் உடனும் தொடர்புள்ளவர்கள் என்பதனை மக்கள் அறிந்தே வைத்துள்ளனர். சிறுபான்மை மக்களை அழித்தொழிப்பதும் மத சார்பற்ற ஜனநாயக நாடான இந்தியாவை ஒரு இந்து இராஷ்டிராவாக மாற்ற வேண்டும் என்கின்ற தீவிர வன்மத்துடனேயே தீவிர வலதுசாரி இந்துத்துவ குழுக்களும், இயக்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

தன்னை ஒரு கலாச்சார அமைப்பாக காட்டிக் கொண்டாலும் இது ஆர்.எஸ்.எஸ் இற்கும் பொருந்தும். ஆர்.எஸ்.எஸ் இன் ஆவணங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் தெளிவாக புலப்படக்கூடிய விடயம் என்ன்வென்றால் தீவிரவாத செயல்களில் ஈடுபடும் தனிநபரையோ அல்லது தீவிரவாத குழுக்களையோ உருவாக்கப்படுவதின் பின்புலத்திலும் அவர்களை மறைமுகமாக இயக்குவதும் ஆர்.எஸ்.எஸ் இன் பொருப்பு தாரிகள்தான் என்பதே.

இந்துத்துவ தேசியவாத சித்தாந்தத்தை உயர்த்திப் பிடிக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினர் ஹிட்லரைப் போன்று ஆரிய இனவாதத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். இனவாதமே நாஜிக்களுக்கும் இந்துத்துவத்திற்கும் பாலமாக உள்ளது. இந்துக்கள் ஆரியர்கள். அவர்களே தேசிய இனம். இஸ்லாம் மற்றும் கிருஸ்தவமும் ஆரியர் அல்லாத நிலப்பரப்பில் தோன்றியதால் அவை வெளி நாட்டு மதமே.

ஆர்.எஸ்.எஸ் இந்தியாவின் மதங்களை இரண்டாகப் பிரித்துள்ளது. அவை : இந்தியம் மற்றும் அந்நியம். இதில் இந்தியாவில் தோன்றிய புத்தம், ஜைனம், மற்றும் சீக்கிய மதங்களை இந்துமதத்தின் ஒரு பிரிவாக அங்கீகரித்ததே தவிர அதனை தனி மதமாக ஏற்றுக் கொள்வதில்லை.




மாதவ் சாதாசிவ கோல்வால்கர் (1906 - 1973) ஆர்.எஸ்.எஸ் இன் மிக முக்கிய மான சிந்தனை வாதியான இவர் ஆர்.எஸ்.எஸ் இன் முதல் தலைவரான கேசர் பாலிராம் ஹெட்கேவருக்கு அடுத்தப்படியாக ஆர்.எஸ்.எஸ் தலைவராக பொருப் பேற்று இயக்கத்தை வழி நடத்தியவர்.

இயற்கையிலேயே இவருக்கு இவருடைய முந்தைய பொருப்புதாரிகள் போல ஃபாசிஸம் மற்றும் நாஜியாகத்தில் கடுமையான பற்று இருந்தது. ஹிட்லரின் நாஜி கலாச்சார தேசியவாதத்தை போன்றே ஆரியம் அல்லாதவர்களை இன சுத்திகரிப்பு செய்து ஒரு இந்து இராஷ்டிரியத்தை உருவாக்க எண்ணம் கொண்டிருந்தார்.

இது அவருடைய வார்த்தைகளில் அவர் எழுதிய "வீ ஆர் அவர் நேஷன் ஹூட் டிஃபைண்ட்" என்ற தலைப்பில் 1939 - இல் வெளிவந்த தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த புத்தகமே இந்துத்துவத்தின் வேத நூலாக உள்ளது.

" இன்று உலகில் அத்துனை நாடுகளும் திரும்பி பார்க்கும் ஒரு தேசமாக ஜெர்மனி மாறியுள்ளது. அதற்கு ஜெர்மனியர்கள் தங்கள் தந்தை பூமியின் மீது கொண்ட பற்றும் பெருமையுமே காரணமாகும். அவர்கள் தங்களது இனத்தையும் மொழியையும் போற்றுகிறார்கள். அதனையே பின்புலமாக்கி வளர்ந்து நிற்கின்றார்கள். ஜெர்மனியின் இந்த வளர்ச்சியில் நமக்கு நிறைய படிப்பினையும் பாடமும் இருக்கின்றது. நாமும் இதனை கற்றுக் கொண்டு அதனை நடைமுறைபடுத்தி முன்னேற வேண்டும்.

**(கோல்வால்கர் எழுதிய "We or our Nationhood defined", Page - 34)**

தொடரும்....

**- ஹாரிஸ் முஹம்மது**

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?

# ஏன் எப்பொழுது வீழ்ந்தோம்?



அபுல் ஹசன் அலி நத்வீ

**மொழிபெயர்ப்பு ; அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

"ஒருவன் எப்பொழுது உரங்கத் தொடங்கினான்? ஒரு சமுதாயம் எப்பொழுது வீழ்ச்சியடையத் தொடங்கியது? ஆகிய இரண்டையும் யாராலும் துல்லியமாக சொல்லிட முடியாது. தனி மனிதனிடத்தில் தூக்குமும், ஒரு சமுதாயத்திடம் வீழ்ச்சியும் மிகைத்து ஆதிக்கம் செலுத்திய பிறகுதான் அவற்றை உணர முடியும்" என்கிறார் ஒரு இலக்கியவாதி.

இது உண்மைதான். பெரும்பாலான சமுதாயங்களின் நிலை இதுதான். எனினும் இதர சமுதாயங்களின் வாழ்வில் ஏற்பட்ட வீழ்ச்சி போன்றதல்ல இஸ்லாமிய சமுதாயத்தின் வாழ்வில் ஏற்பட்ட விழ்ச்சி! இது வீழ்ந்திட தொடங்கியபோதே தெளிவாகத் தெரிந்தது.

சரிவின் காலக்கட்டத்தின் மீது விரல் வைத்து காட்டவேண்டும் என்றாலும் நாம் காட்டிவிடலாம். ஆம்! நேர்வழி என்ற கிலாஃபத்தின் ஆட்சிக்கும் அரேபிய மன்னராட்சி (அல்லது முஸ்லிம்களின் மன்னராட்சிக்கும்) மத்தியில் வரலாற்றின் வரிகளில் நாம் விரல் வைத்து விட்டோமென்றால் வீழ்ச்சியின் தொடக்கத்தைக் கண்டுபிடித்துக் காட்டிவிட்டோம்.

### இஸ்லாமிய எழுச்சியின் காரணங்கள் ஒரு கண்ணோட்டம்

இஸ்லாமியத் தலைமையின் கடிவாளமும் அதனையொட்டி உலகத் தலைமையின் கடிவாளமும் சில உத்தமர்களின் கரங்களில் இருந்தன. அவர்கள் ஒவ்வொருவரும் பெருமானார்(ஸல்) அவர்களுக்குக் கிடைத்த பேரற்புதங்களாக இருந்தனர்.

ஈமான் எனும் இறைநம்பிக்கையில், கொள்கைப்பிடிப்பில், செயல்பாட்டில், நற்பண்பில், மனத்தூய்மையில், ஆன்மீகப் பயிற்சியில், ஒழுக்க மாண்புகளில், உயர்ந்த நடத்தைகளில், முழுமையான மனிதப் பண்புகளில் அந்த நபியின் தோழர்கள் பேரற்புதங்கள்தான். ஆம்! அவர்களை உருக்கியெடுத்து இஸ்லாம் என்ற அச்சில் ஊற்றி உருவாக்கினார்கள் பெருமானார்(ஸல்) அவர்கள்.

அவர்களின் உருவங்களும், உடல்களும் வேறுவேறாய் இருந்தன. இலட்சியத்திலோ, கற்பனைகளிலோ, விருப்பங்களிலோ அவர்களிடம் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை. அவர்களின் நடத்தைகளிலோ பண்புகளிலோ இஸ்லாத்தின் மெய்வடிவத்துக்கு முரணான அஞ்ஞான (ஜாஹிலிய்யா)ப் பண்பில் ஒரு துரும்பைக் கூட எந்த ஆய்வாளனும் கண்டுபிடித்து விடமுடியாது.

இஸ்லாத்தை ஒரு மனிதனின் உருவத்தில் கற்பனை செய்து பார்த்தால் அது அவர்களின் உருவமாகத்தான் இருக்கும். நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல அவர்கள் முழுமையானதோர் முன்மாதிரிகளாக விளங்கினார்கள்.

இஸ்லாமிய வாழ்வுக்கும் உலக நடைமுறைகளுக்கும் அவர்கள் முழுமையான அளவுகோல்களாகத் திகழ்ந்தனர். அவ்விரண்டையும் ஒன்றிணைத்து வாழ்வதற்கும் அவர்களே அளவுகோல். அவர்கள் மக்களுக்குத் தொழுகையும் நடத்தினார்கள். மக்கள் பிரச்சனைகளுக்கு தீர்ப்பும் வழங்கினார்கள். அவர்கள் தெளிந்த அறிவோடும், நீதியோடும் தீர்ப்பு வழ்ங்கினார்கள்.

முஸ்லிம்களின் செல்வங்களுக்கும் சொத்துக்களுக்கும் காவலர்களாகவும் நின்றார்கள்.போர் நிர்வாகத்தை நன்கறிந்து படைகளையும் வழி நடத்தினார்கள். நகர்புற நிர்வாகத்தை நேரடியாக நடத்தினார்கள். அரசுப் பணிகளைக் கவனித்துக் கொண்டே அல்லாஹ்வின் அடிமைகளாக இருந்து அவனுடைய தண்டனைகளை தயங்காயமல் நிலைநாட்டினார்கள். உலகத்தின் மீது பற்றில்லாத துறவியாக இறையச்சமிக்க சீலராக இருந்து கொண்ட போராடும் போர் வீரராகவும் இருந்தனர். அறிவுள்ள

நீதிமானாகவும் நிகழ்கால பிரச்சனைகளுக்கு இஸ்லாமிய அடிப்படையில் தீர்வு கூறும் சட்டமேதையாகவும் உறுதி வாய்ந்த தலைவராகவும் அனுபவம் மிக்க அரசியல்வாதிகளாகவும் இருந்து தமது பன்முகத்திறனை வெளிப்படுத்தினார்கள்.

மார்க்கமும் அரசியலும் ஒருவரிடம் ச ம அளவில் நிறைந்திருந்தது. அவர்தான் இஸ்லாமிய அரசின் தலைவர், கலீஃபா, இறைநம்பிக்கையாளர்களின் தலைவர். அவரை சுற்றி ஒரு கூட்டம் இருந்தது. இந்தக் கூட்டம் நபியின் பள்ளிக்கூடத்தில் அல்லது நபியின் பள்ளிவாசலில் பயின்று வெளிவந்தவர்கள். இவர்கள் அனைவரும் ஒரு வார்ப்பில் உருவாகி ஒரே ஜீவனைச் சுமந்து ஒரே மாதிரியான பயிர்சியைப் பெற்றவர்கள்.

அந்த கலீஃபா இவர்களிடம் தான் யோசனைகள் கேட்டு ஆட்சி நடத்தினார். அவருக்கு இவர்கள் ஆலோசனைகளைச் சொன்னார்கள். அவற்றை செயல்படுத்திட அவர் உதவி கேட்பார்.இவர்கள் செய்தார்கள்.இவர்களுக்கு தெரியாமல் கலீஃபா எந்த முக்கிய முடிவுகளும் எடுப்பதில்லை. எனவே மக்கள் வாழும் நகரங்களிலும் ஆட்சி அமைப்பிலும் சமுதாய வாழ்விலும் பண்பிலும் இந்த மாண்பாளர்களின் ஜீவன் ஊடுருவிப்பாய்ந்திருந்தது.

இந்த நற்குண சீலர்களின் விருப்பங்களாலும் ஆசைகளாலும் ஒரு நாகரிகம் உருவானது. இவர்களிடமுள்ள தனித்துவ நற்பண்புகள் அந்த நாகரிகத்தின் வழியாக வெளிப்பட்டது. இதனால்தான் இஸ்லாமிய நாகரிகத்தில் ஆன்மீகத்துக்கும் உலகாயத்துக்கும் இடையே பகை இருக்கவில்லை. மார்க்க நடைமுறைக்கும் அரசியலுக்கும் இடையே மோதல் இல்லை. தீனுக்கும் துன்யாவுக்கும் (உலக வாழ்வுக்கும், மார்க்க வாழ்வுக்கும்) இடையே வித்தியாசமில்லை.சமூக சீர்திருத்தங்கள் அடிப்படைகளுடன் முரண்படாமல் ஏற்பட்டன. உலக செல்வங்களின் வருகையால் நல்லொழுக்கங்கள் சிதையவில்லை. இன மோதல்கள் இல்லை. ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மோதிக்கொள்ளவில்லை.

## இஸ்லாமியத் தலைமையின் இன்றியமையாத் தகுதிகள்

இஸ்லாமிய அரசின் தலைமைப் பதவிக்கென தகுதிகள் பல உள்ளன. அவை நுண்ணியவை. ஏராளமானவை. இரண்டே வார்த்தைகளில் அவற்றை சுருங்கக் கூறிவிட முடியும் அவை " ஜிஹாத், இஜ்திஹாத் ". இவை இரண்டும் எளிதினும் எளிய சொற்கள் எனினும் ஆழமான, விரிவான, ஏராளமான பொருள்களைத் தருபவை.

## அல்ஜிஹாது என்றால் என்ன?

மாபெரும் இலட்சியம் ஒன்றை அடைவதற்காக முழு முயற்சியுடன் முழு சக்தியுடன் உழைப்பதே ஜிஹாத் ஆகும். ஒரு முஸ்லிமுடைய அதிமுக்கிய பணி என்ன? அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதும் அவனுடைய திருப்தியை நாடுவதும் அவனுடைய கட்டளைகளுக்கு பணிவதும் அவன் ஏவியதை ஏற்று நடப்பதும்தான்.

இதற்காக ஒரு முஸ்லிமுக்கு கடின, நெடிய முயற்சியும் உழைப்பும் தேவைப்படுகிறது. ஆம்! இறைச்சட்டங்களுக்கும் இறைவணக்கத்தும் போட்டியாக வருகின்ற போலி தெய்வங்கள் பூமியின் மேற்பரப்பில் எங்கிருந்தாலும் சரி அல்லது மனித மனங்களுக்குள் இருந்தாலும் சரி அவற்றையெல்லாம் எதிர்க்கவேண்டிய தேவை ஒரு முஸ்லிமுக்கு ஏற்பட்டுவிடுகின்றது.இஸ்லாத்துக்கு முரணான கோட்பாடுகள், மனப்பயிற்சிகள், குணங்கள், இலட்சியங்கள், மன விருப்பங்கள் அனைத்தையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதுபோன்ற சூழ்நிலைகளில் ஒரு முஸ்லிமுக்கு இயல்பாகவே ஒரு கடமை வந்துவிடுகின்றது. அது என்னவென்றால், தான் வாழும் உலகத்திலும் தன் இன மக்களிடத்திலும் அல்லாஹ்வின் சட்டங்களையும் கட்டளைகளையும் செயல்படச்செய்திட அந்த முஸ்லிம் உழைத்திட வேண்டும். இது அல்லாஹ் அந்த முஸ்லிம் மீது சுமத்திய கடமை மாத்திரமல்ல! அல்லாஹ்வின் படைப்புகள் மீது கொண்ட அன்பினாலும் இதை அவர்கள் செய்திட வேண்டும்.

ஏனென்றால் ஒவ்வொரு தனி மனிதனுடைய மனச்சூழலும் இறைவனுக்கு கட்டுப்படும் திறனும் அதற்கேற்ற சூழல் இல்லாத போது அதிலிருந்து விலகிட முடியும். மேலும் இறைவனுக்கு கட்டுப்படுவதை சிரமமாக கருதும். இதைத்தான் இறைமறையாம் திருக்குர்ஆன், ' ஃபித்னா ' (குழப்பம்) என்று கூறுகிறது. இந்த ' ஃபித்னா ' பூமியிலிருந்து முழுமையாக அகலும் வரை " ஜிஹாத் " இருக்கும்.

இந்த உலகமும் அதிலுள்ள பொருள்களும், தாவரங்களும், உயிரினங்களும், மனிதனும் அல்லாஹ் வின் நாட்டத்துக்கும் அவனுடைய உலகமைப்பு சட்டங்களுக்கும் இயற்கை விதிகளுக்கும் கட்டுப்பட்டவைத்தான் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

இதோ அல்லாஹ் கூறுகிறான் : வானங்களிலும் பூமியிலும் உள்ளவர்கள் விரும்பியும் நிர்பந்தமாகவும்

அவனுக்கு கட்டுப்படுகின்றனர். அவனிடமே அவர்கள் திரும்ப வருவார்கள்.(3:83)

மேலும் கூறுகிறான் : வானங்களில் உள்ளவர்களும் பூமியிலுள்ளவர்களும் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் மலைகளும் மரங்களும் மிருகங்களும், ஏராளமான மனிதர்களும் அல்லாஹ்வுக்கே சிரம் பணிகின்றனர் என்பதை (நபியே) நீர் அறியவில்லையா? ஏராளமானவர்கள் மீது தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது.(22:18)

இந்த வசனங்கள் மூலம் நமக்கு தெளிவானவை என்ன? இறைத்தூதர்கள் மனித சமுதாயத்துக்குத் தந்த இறைச்சட்டங்களை செயல்படுத்தவும், அல்லாஹ்வின் வார்த்தையை மேலோங்க வைத்திடவும், அவன் கட்டளைகளுக்கு செயல் வடிவம் தந்திடவுமே ஒரு முஸ்லிம் " ஜிஹாத் " செய்கிறான். அல்லாஹ்வின் கட்டளைதான் கட்டளை. உத்தரவு போடும் அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்குமில்லை.

இந்த ஜிஹாத் உலக முடிவு நாள் வரை நீடித்து இருக்கும். இதற்கு பல வடிவங்கள் உண்டு. பல வழிமுறைகள் உண்டு. அவற்றை வரையறுத்துக் கூறிட இயலாது. கிதால் எனும் நேரடி யுத்தமும் ' ஜிஹாத் ' இன் ஒரு பகுதியே. மட்டுமல்ல அதி முக்கிய சிறப்பான பகுதி இது. இதன் இலட்சியம் என்னவென்றால் மனித மனங்களையும் விருப்பங்களையும் வழிநடத்திட இறை மார்க்கமாம் இஸ்லாம் மட்டுமே உலகில் இருந்திட வேண்டும். இதற்கு சம வலிமையுள்ள போட்டிக் கொள்கையொன்று இருக்க கூடாது என்பதே.

இதோ அல்லாஹ் கூறுகிறான் : குழப்பம் முற்றிலும் ஒழிந்து மார்க்கம் அல்லாஹ்வுக்கே என்றாகும் வரை நீங்கள் யுத்தம் செய்யுங்கள்.(2:193)

இதற்கு அதிமுக்கிய தேவை என்னவென்றால் ஒரு போராளி எதை நிலை நாட்டப் போராடுகின்றாரோ அந்த இஸ்லாத்தையும் எதற்கு எதிராகப் போராடுகின்றாரோ அந்த அஞ்ஞானம், இறைமறுப்பு (ஜாஹிலிய்யா, குஃப்ர்) இவற்றையும் அறிந்திருக்கவேண்டும். இஸ்லாத்தை முறைப்படி சரியாக அறிந்திருக்க வேண்டும். ' ஜாஹிலிய் யாவையும் குஃப்ரையும் துல்லியமாகத் தெரிந்திருக்கு வேண்டும். வெளித்தோற்றங்களை கண்டு ஏமாந்து விடக்கூடாது. அழகான வர்னங்களைக் கண்டு மதிமயங்கி விடக்கூடாது.

இதனால்தான் இரண்டாம் கலிஃபா உமர் (ரழி) கூறினார்கள் :

" ஜாஹிலிய்யாவை " அறிந்திடாமல் இஸ்லாத்தின் படி வாழ்பவன் இஸ்லாத்தை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்து விடுவான். "

இப்படி நான் கூறுவதால் ஒவ்வொரு முஸ்லிமும் ஜாஹிலிய்யா குஃப்ர் இரண்டையும் அவற்றின் ஆழ அகலத்துடன் துல்லியமாகத் தெரிந்திருப்பது கடமை என்று நான் கூருவதாக கருத வேண்டாம். எல்லோருக்கு அது கடமை அல்ல. இஸ்லாமிய இராணுவத்தை வழி நடத்துகின்ற இஸ்லாத்தின் தலைமைப் பொருப்பை ஏற்பவர் ஜாஹிலிய்யா, குஃப்ர் இவற்றை துல்லியமாகவும் தெளிவாகவும் அறிந்திருக்க வேண்டும். பொது மக்களை விடவும், மேதைகளை விடவும் இதில் அவர் சிறந்து விளங்கிட வேண்டும்.

இது போலவே இஸ்லாமியப் படையின் வீரர்கள் அனைவரும் உடல் வலிமையிலும் ஆயுத பலத்திலும் முழுமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இரும்பை இரும்பால் அல்லாமல் அதைவிட வன்மைமிக்க ஆயுதத்தால் உடைக்க வேண்டும். காற்றாய் வீசும் எதிரிகளை சூராவளியாய் எதிர்கொள்ள வேண்டும்.

இறைமறுப்பையும் அதன் ஆதரவாளர்களையும் பலம் கொண்ட மட்டும் கரம் நீளும் மட்டும் எதிர்த்திட வேண்டும்.போர் ஏற்பாடுகள், தயாரிப்புகள், பேராயுதங்க ள் இவற்றில் நிகழ்கால உலகின் மனிதன் எட்டிவிட்ட பகுதிகளை எல்லாம் பயன்படுத்தி, கண்டுபிடித்த ஆயுதங்களையெல்லாம் திரட்டி முழு வீச்சில் போராட வேண்டும். இதில் தயக்கமோ பின்னடைவோ கூடாது.

அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள் :

(இறை நம்பிக்கையாளர்களே) உங்களுக்கு முடிந்தளவு பலத்தையும், குதிரைப்படையையும் அவர்களுக்காக தயா வி நிலையில் வைத்திருங்கள். இதன் மூலம் அல்லாஹ்வின் எதிரியையும் உங்களின் எதிரியையும் நீங்கள் அச்சமடைய வைத்திடலாம்.(8:60)

இதுவே ஜிஹாது ஆகும்.

தொடரும்..........

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி.M.A.**

# காவல் துறை உங்கள் (பொது மக்களின்) நண்பனா?



காவல் துறை உங்கள் நண்பன் என்று சொல்வதில் ஏதேனும் உண்மையுள்ளதா?

உண்மையில், நடைமுறையில் காவல் துறையினர், தங்களை சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவும், தங்களை யாரும் எந்தக் கேள்வியும் கேட்கக் கூடாது என்ற தொனியிலும் மற்றும் வெகு ஜன விரோதிகளாக காண்பிக்கும் வகையில் தான் செயல்படுகிறார்கள்.

அதற்கு உதாரணமாக கீழே சில சம்பவங்களைக் குறிப்பிடலாம் .

**சம்பவம் - 1**
கடந்த செப்டம்பர் மாதம் விருகம்பாக்கத்தில் ஆஷா என்பவருடைய விடுதியில் குடிபோதையில் நுழைந்த விருகம்பாக்க காவல் நிலைய இரு காவலர்கள், அங்குள்ள இரண்டு பெண்களை மானபங்கம் செய்ய முயன்றுள்ளனர். அதனைத் தொடர்ந்து அந்த இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**சம்பவம் - 2**
கடந்த ஜூன் மாதம் கரூரில் ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப்பட்டார். அதன் தொடர்பாக கொல்லப்பட்ட பெண்ணுடைய தோழிகள் பலரை விசாரணை என்ற பெயரில் தினமும் இரவு 11 மணி வரை போலீசார் தொந்தரவு செய்துள்ளனர். அது தொடர்பாக அந்தப் பெண்கள், மாவட்ட ஆட்சியரிடம் புகார்அ ளித்துள்ளார்கள்.

**சம்பவம் - 3**
கடந்த மாதம் ஓசூர் பேருந்து நிலையத்தில் பேருந்திற்காக காத்திருந்த வெளிமாநிலத்தைச் சேர்ந்த மூன்று பெண்களைப் பிடித்துச் சென்ற காவலர், காவல் கட்டுப்பாட்டு அறையில் வைத்து அந்தப் பெண்களில் ஒருவரிடம் பாலியல் சேட்டைகளில் ஈடுபட்டுள்ளார். அதன் தொடர்பாக அந்தக் காவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தை உயரதிகாரிகளுக்கு சொல்லாத காரணத்தால் காவல் உதவி ஆய்வாளரும் பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

**சம்பவம் - 4**
கடந்த அக்டோபர் மாதம் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 23 வயது தலித் வாலிபர் இறந்து போனார். அவர் பூச்சி மருந்து குடித்தார் என்று போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

**சம்பவம் - 5**
கடந்த அக்டோபர் மாதம் இராமநாதபுரம் மாவட்டம், S.P.பட்டினம் காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வாலிபர் போலீசாரால் சுட்டு / அடித்துக் கொல்லப்பட்டார்.

**சம்பவம் - 6**
கடந்த ஜூன் மாதம் நடந்த ஒரு சவ ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் அமைந்தகரையிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தை சேதப்படுத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து அங்கு வந்த காவல் உதவி ஆய்வாளர், அந்த சம்பவத்தில் பாதிப்பிற்குள்ளான அந்தக் கிறிஸ்தவ தேவாலய போதகரைத் திட்டி, தாக்கவும் முனைந்துள்ளார்

**சம்பவம் - 7**
கடந்த ஜனவரி மாதம் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சிறுவனை, நீலாங்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளர் தன்னுடைய கைத் துப்பாக்கியால் சுட்டுப் படுகாயமுண்டாக்கி, விசாரணையை முடித்து வைத்தார்.

**சம்பவம் - 8**
கடந்த ஜூன் மாதம் நடந்த ஒரு கொலை தொடர்பாக சம்பந்தமே இல்லாத நாகர்கோயிலைச் சேர்ந்த ஒருவரை சட்ட விரோதமாக கடத்திச் சென்று மூன்று நாட்கள் அடைத்து சித்திரவதை செய்த போலீசார், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் இதைக் கூறியுள்ளனர்.

**சம்பவம் - 9**
கேரள மாநிலத்தைச் சேர்ந்த தானேவில் பணிபுரிகிற ஒரு பெண்ணின் புகைப்படத்துடன் அவதூறு கூறி பரப்பப்பட்ட வாட்ஸ் அப் செய்தியில் சென்னையிலுள்ள மூன்று காவல் ஆய்வாளர்கள் இடம் பிடித்துள்ளனர்.

**சம்பவம் - 10**
கடந்த சில வருடங்களுக்கு முன் தன்னுடைய தம்பியை பொய்யாக கைது செய்ததை கேள்வி கேட்ட அண்ணனும் பொய்யாக கைது செய்யப்பாட்டார். தன்னை போலீசார் பொய்யாக கைது செய்ததையும், தன்னை போலீசார் அடித்துத் துன்புறுத்தியதையும் நீதிமன்ற நடுவரிடம் சொன்ன காரணத்திற்காக சிறைக்குக் கொண்டு செல்லும் முன் அவர் மீண்டும் போலீசாரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டார். போலீசாரின் இந்த அதிகார அத்துமீறல்களை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, 8 போலீசாரை குற்றவாளிகளாக்கி கடந்த செப்டம்பர் மாதம் ஆம்பூர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

**சம்பவம் - 11**
கடந்த சில மாதங்களுக்கு முன் நடந்த ஒரு கொலையில், சந்தேகிக்கப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஒரு பெண்மணி, காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளரால் பாலியல் அத்துமீறல்கள் மற்றும் கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டார். அந்தப் பெண்மணியின் உறவினர் தொடர்ந்த வழக்கில் இந்தக் கற்பழிப்பு மற்றும் சித்திரவதைகளை விசாரிக்க சிபிஐக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

**சம்பவம் - 12**
கடந்த ஆகஸ்ட் மாதம் காரில் வந்து கொண்டிருந்த தஞ்சாவூரைச் சேர்ந்த ஒரு குடும்பம், அங்கு பணியிலிருந்த போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளரிடம் கேள்வி கேட்டதால் அந்தப் பட்டுக்கோட்டை போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் அந்த நபரை காதில் ஓங்கி அடித்ததில், அந்த நபர் காது கேட்கும் திறன் இழந்து போயுள்ளார். அதன் தொடர்பாக அந்தக் காவல் உதவி ஆய்வாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

**சம்பவம் - 13**
கடந்த ஆகஸ்ட் மாதம் மதுரையில், நடக்காத ஒரு விபத்திற்காக பத்து போலீசார் கொண்ட கும்பல் பட்டப் பகலில் நடுச் சாலையில் ஒரு குடும்பத்தை அடித்துத், துவைத்து விட்டு சென்றுள்ளனர். இது தொடர்பாக அந்தக் குடும்பம் கொடுத்த புகாரை வாங்க மதுரைப் போலீசார் மறுத்து விட்டனர். நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகே வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சம்பவம் - 14**
இராமநாதபுரம் மாவட்ட போலீசாருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பிய மனுவிற்கு, பொய்யான தகவல்கள் கூறிய காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு சில சமூக நல ஆர்வலர்கள் புகார் அனுப்பியுள்ளனர்.

இன்னும் இது போல பல சம்பவங்களை நம்மால் உதாரணம் கண்பிக்க முடியும். இதோடல்லாமல் புகார் கொடுக்கச் செல்லும் பணமில்லாத மற்றும் பின்புலமில்லாதவர்களின் நிலையை நினைத்தால், அவர்கள் காவல் நிலையங்களில் நடத்தப்படும் விதத்தைக் கண்டால், காவல் துறை எங்கள் நண்பன் என்னும் வாசகத்தைப் பார்க்கவும், அந்த வாசகத்தைக் கேட்கவும் உள்ளம் பதைத்து விடும்.

மேற் சொன்ன சம்பவங்களில், லஞ்சத்திற்காக புகார் மாற்றப்பட்ட விசயங்கள், புகார்தாரர்களையே குற்றவாளிகளாக்கிய விசயங்கள், பணம் வாங்கிக் கொண்டு குற்றவாளிகளைத் தப்ப வைக்கின்ற விசயங்கள், காவல் நிலையத்தில் நடக்கும் கட்டப் பஞ்சாயத்துகள் போன்ற எந்த சம்பவத்தையும் நாம் சுட்டிக் காண்பிக்கவில்லை. நாம் அதைச் சொல்ல ஆரம்பித்தால், அதெல்லாம் நீண்ட நெடிய தொடராகி விடும்.

சுருங்கச் சொன்னால் காவல் துறை உங்கள் நண்பன் என்பது “”முடவனை கொம்புத் தேனுக்கு ஆசைப் படச்”” சொல்லும் ஒரு செயலே என்பது காவல் துறையினரின்
நடவடிக்கைகளிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

**நமது நிருபர் முகம்மது ரிஸ்வான்**


**புத்தம் புது பொலிவுடன் வைகறை பிளாக்.**

**இனைந்து பயன்பெறுமாறு**

**Link**

**http://vaigaraivelichem.blogspot.in/**

கரன் ஆம்ஸ்ட்ராங்க் தொடர் - 3

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

ஆண்டுகள் 1400 ஐ கடந்திருக்கின்றன. அழித்து விடுவோம் அனைத்து முஸ்லிம்களையும் என ஆயுதம் தாங்கி ஆயிரம் சதிகளை அறங்கேற்றி அணிவகுத்து வந்தவர்கள் ஆயிரமாயிரம். அன்றும் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கும் சோதனை இது.

அடிவாங்கியபோதும் அழிவுகளை எதிர் கொண்டபோதும் முஸ்லிம்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் வனப்பான பகுதிகளைப் புரட்டியே பாடங்களைக் கற்றிருக்கின்றார்கள். அப்போதெல்லாம் அவர்களுக்கு வழிகாட்டியிருக் கின்றது முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை. அவர்கள் தங்களை அழிக்க வந்த சக்திகளை வென்றிருக்கிறார்கள். தடைகளைத் தாண்டி தங்கள் பயணத்தைத் தொடர்ந்திருக்கிறார்கள். முஹம்மத் (ஸல்) அவர்களின் இந்த உண்மைக்கு நீண்ட வரலாறு சாட்சி.

இடியும் மின்னலும் கண்ணைப் பறிக்கும் காலச் சூழல் வழிமறித்திடும் போதெல்லாம் தங்கள் பழைய வரலாற்றை நோக்கிப் பாய்ந்து சென்றிருக் கின்றார்கள். நம்பிக்கையாளர்கள் அதிலிருந்து புதிய வழியோடும், தெளிவோடும், புரட்சிப் பாதையோடும் திரும்பி வந்து வென்றிருக்கின்றார்கள் பொல்லாப் பகைகளை.

ஒவ்வொரு முறையும் சோதனைகள் தங்களை நோக்கிப் பாய்ந்திடும் போதும் இஸ்லாத்தை இன்னும், இன்னும் மேலே எடுத்து சென்றிருக் கின்றார்கள். இன்னும் அதிகமான மக்களை இஸ்லாத்தின் பாதையில் பிணைத்திருக்கின்றார்கள், பயணிக்க செய்திருக்கின்றார்கள். அவர்களின் வாழ்க்கையையும் சீர் செய்திருக்கின்றார்கள்.




ஒவ்வொரு மதத்திற்கும் ஓர் உத்தம புருஷன் உண்டு. புத்தர்கள் புத்தரிடம் தங்கள் வழிகளைத் தேடுகின்றார்கள். அவர்கள் "நிர்வாணா" என்ற நிலையை அடைந்திட முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள்.

இயேசுவிடம் கிருஸ்துவர்கள், தெய்வீகத் தன்மைகளை தேடுகிறார்கள். நன்மைகள், அன்பு ஆகியவற்றை அங்கே தேடுகின்றார்கள். இந்த நடைமுறை விளக்கங்களிடம், மக்கள் தங்கள் பாவ உலகின் மீட்பைத் தேடுகின்றார்கள். அவர்கள் ஒரு மனிதன் எப்படி இருக்க முடியும் என்பதைக் காட்டுகின்றார்கள். முஸ்லிம்கள் இதை நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றார்கள்.

அவர்களின் வேதம் அருள்மறை குர்ஆன் அவர்களுக்கு ஒரு இலட்சியத்தைத் தந்திருக்கின்றது. அது அவர்களை ஒரு இலட்சிய சமுதாயமாக இயங்க வைக்கின்றது. அதில் அவர்கள் ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்றார்கள். அந்த சமுதாயத்தில் எல்லா உருப்பினர்களும் சமமாக மட்டுமல்ல, மரியாதையாக மட்டுமல்ல கண்ணியமாகவும் நடத்தப்படுகின்றார்கள்.



முஸ்லிம் சமுதாயத்தின் அரசியல், நல்வாழ்வு அன்றும், இன்றும் அந்த சமுதாயத்தின் முக்கிய கவனங்களுள் ஒன்று. எந்த இலட்சிய பயணத்திலும் வீழ்வதும், எழுவதும் தவிர்க்க இயலாதவை. முஸ்லிம்கள் வீழ்ந்த போதெல்லாம் எழுந்திருக்கின்றார்கள், தங்கள் பயணத்தைத் தொடர்ந்திருக்கின்றார்கள். அதற்கு முஹம்மத் (ஸல்) வழிகாட்டியிருக்கின்றார்கள்.

இடையே எத்தனையோ பிளவுகள், பிரிவுகள், கோட்பாடுகள், நலிவுகள், சிதைவுகள். அத்தனையையும் கடந்து அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்திருக்கின்றார்கள். எந்த நிலையிலும் விரக்தியடையவுமில்லை, துவண்டு போகவுமில்லை.

முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை எல்லாக் காலங்களுக்கும் வழிகாட்டும் என்பதை (முஸ்லிமல்லாத) பெரும்பாலோர் ஏற்றுக் கொள்வதில்லை. இந்த கருத்தை இதயத்தில் சுமப்பவர்கள் ஒரு வரலாற்று உண்மையை கவணிக்க வேண்டும்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்துக் கொண்டிருந்த போது, அவர்களின் இருதி நாள் வரை ஒரு சிறு சமுதாயந்தான் அவர்களின் முன் மாதிரியைப் பின்பற்றிற்று. ஆனால் அவர்கள் இறந்து, ஒரு நூற்றாண்டுக்குப் பின் முஸ்லிம்கள் ஒரு பெரும் நிலப்பரப்பை ஆட்சி செய்தார்கள். இந்த ஆட்சியின் எல்லை இமாலய மலையின் அடியில் தொடங்கி பைரினீஸ் (**Pyrenees**) வரை படர்ந்திருந்தது.

**Pyrenees** என்பது தென்மேற்கு ஐரோப்பாவின் உள்ள ஒரு பெரும் மலைத்தொடர். இது தான் ஸ்பெயின் நாட்டுக்கும் பிரான்ஸ் நாட்டுக்கும் இயற்கையான எல்லையாகப் பயன்படுகின்றது. இந்த மலைத் தொடர் *491* கிலோ மீட்டர் நீளம் உயரம் *11,168* அடி கொண்டது. இது (**Biscay**) பிஸ்கே பெருங்கடலிலிருந்து மத்திய தரைக்கடல் வரை தொடருகின்றது.

*" Is a range of mountains in SOUTHEAST EUROPE that for a natural border between France and Spain. If seperates the Iiberian peninsula from the rest of continently Europe. If expends for about 491 kms from the bay of bricay to the meditation sea. Elevation 11,168 if now a major part in a Spain. "*

இதன் மூலம் உலகில் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு பெரும் மலைகளுக்கிடைப்பட்ட பெரும் நிலப்பரப்பை முஸ்லிம்கள் ஆட்சி செய்தார்கள். இதில் எத்தனை உணவு, உடை, நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரியம், கொண்ட சமுதாயங்களை ஆட்சி செய்திருப்பார்கள். அத்தனை மக்களையும் எப்படி இவர்கள் அரவணைத்தார்கள். ஆட்சி செய்தார்கள்? அதுவும் இஸ்லாமிய சட்ட திட்டங்களைக் கொண்டு? அந்த மக்கள் இந்த ஆட்சியை வரவேற்றார்கள். எள்முனை அளவுகூட அதை எதிர்க்கவோ வெருக்கவோயில்லை. மாறாக நீதியையும் அதன் மூலம் அமைதியையும் பெற்றார்கள்.

அப்போதெல்லாம் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வனப்பாக அவர்களுக்கு வழிக்காட்டியிருக்கின்றது என்பதை நாம் புரிந்திட வேண்டும். உணர்ந்திட வேண்டும்.ஆகவே காலமெல்லாம் எல்லா சமுதாயம் படிப்பினைப் பெற்றிட வேண்டிய, ஒரு முன்மாதிரிதான் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

இப்படி அவர்களின் வாழ்க்கை நமக்கு பயன்படுவதற்கு அன்றைக்கு தொடக்க நாட்களில் அவர்களின் வாழ்க்கையைப் பதிவு செய்தவர்கள் - எதிர்வரும் தலைமுறையிடம் ஒப்படைத்தவர்கள் செய்த பெரும் பணியை குறிப்பிட்டாக வேண்டும். அதை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் பார்ப்போம்.

**- M.G.M**

# மோடியின் அமைச்சரவை குற்றவாளிகளின் கூடாரம்!

## நியூயார்க் டைம்ஸின் இகழாரம்!!



சர்வதேச அளவில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆங்கில நாளிதழ் மற்றும் அமெரிக்காவின் முக்கிய நாளிதழான நியூயார்க் டைம்ஸ் மோடியின் அமைச்சரவையை குற்றவாளிகளின் கூடாரம் என இகழ்ந்துள்ளது.

ஊழல் ஒழிப்பு, தூய்மையான அரசியல் என மக்கள் முன்னிலையில் தேர்தல் பரப்புரையை மேற்கொண்டு பெரும்பான்மை வெற்றியுடன் பிரதமராக முடிசூட்டிக் கொண்ட மோடி அவர்களுக்கு சமீபத்தில் தேர்தல்கள் நடந்த மஹாராஷ்டிரா மற்றும் ஹரியானாவிலும் வெற்றிதான் கிடைத்துள்ளது.

தற்போது மோடி 21 புதிய நபர்களை தனது அமைச்சரவையில் சேர்த்துள்ளார்.இதில் ஐந்து பேர் மீது கற்பழிப்பு மற்றும் கலவர குற்றச்சாட்டுகள் உள்ளது. ஏழு பேர் மீது நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ராம் சங்கர் சகாரியா என்பவர் இளநிலை கல்வி அமைச்சராக பொருப்பேற்றுள்ளார். இவர் மீது மத வன்முறையை தூண்டியது, கொலை முயற்சியில் ஈடுபட்டது என இருபதுக்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன.

மத்திய நிதியமைச்சரான அருண் ஜேட்லி குற்றவாளிகள் அமைச்சரவையில் உள்ளனர் என்கின்ற வாதத்தை நிராகரித்துள்ளார். இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது சம்பந்தபட்ட நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு வழக்குகள் நடைபெறுகிறதே தவிர அவர்கள் குற்றவாளிகள் அல்ல. என்று விளக்கமளித்துள்ளார்.

மோடியின் ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஒருவரை குற்றவாளி என்று நீதிமன்றம்தான் முடிவு செய்யவேண்டும். இதில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் பல அரசியல் நோக்கம் கொண்டதாகும் என கூறியுள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் சொல்வது சரிதான். ஒருவரை குற்றவாளி என்றோ அல்லது அவர் நிரபராதி என்றோ முடிவு செய்ய வேண்டியது நீதிமன்றம்தான். அதே சமயம் குற்றங்களில் பலவற்றையும் அரசியல் நோக்கம் கொண்டது என்று கூறுவது ஏற்புடைதல்ல. இதில் சட்டத்துறை மற்றும் நீதித்துறையின் மூலம் ஒரு வழக்கை பல வருடங்கள் இழுத்தடிப்பதும் நீதியை தாமதப்படுத்துவதும் வாடிக்கையே.

இந்தியாவில் உள்ள் பாராளுமன்ற மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் குற்றச்செயலில் ஈடுபட்டவர்கள் என இந்தியாவின் அசோசியசன் ஃபார் டெமாக்ரடிக் ரிஃபார்ம்ஸ் என்ற அமைப்பு கூறியுள்ளது.

குறைந்த பட்சம் மோடி இதுபோன்ற குற்றவாளிகளை அமைச்சரவையில் சேர்ப்பதை தவிர்த்திருக்கலாம். ஏனென்றால், இந்த நியமனங்கள் மக்கள் மத்தியில் ஆட்சியாளர்கள் குறித்து தவறான எண்ணங்களையும், குற்றவாளிகள் பதவிகளுக்கு வரும் பட்சத்தில் அவர்கள் சட்டத்திட்டங்களை மதித்து செயல்படுவார்களா? என்ற கேள்வியினையும் எழுப்பும்.

இந்திய மக்களில் பெரும்பான்மையினர் ஜனநாயக வடிவிலான அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன் " சிறிய அமைச்சரவை பெரிய செயல்பாடுகள் " என முழங்கினார். தற்போது 21 நபர்களை அமைச்சர வை யில் சேர்த்திருப்பதன் மூலம் அமைச்சரவையின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது. இது முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தின் அமைச்சரவை எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பெரிய மாற்றம் ஒன்றும் இல்லை.

மோடி இந்தியர்களிடம் தான் ஒரு வித்தியாசமான தலைவர் என கூறியுள்ளார். அது போல அவரது கட்சியின் சில மேல்மட்டத்தினர் அமைச்சரவையின் மொத்த அதிகாரமும் மோடி வசமே இருப்பதாகவும் அமைச்சரவை நியமனங்கள் எல்லாம் ஒரு பொருட்டு இல்லை எனவும் கூறியுள்ளனர்.

**(Carol Giacomo, Nov-10, Newyork Times)**

The New York Times

Taking Note

SUBSCRIBE LOG IN

# Narendra Modi’s Cabinet Is a Rogue’s Gallery

By CAROL GIACOMO

NOVEMBER 10, 2014

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று தன்னைப் பீற்றிக் கொள்ளும் இந்தியாவின் அமைச்சரவையை குற்றவாளிகளின் கூடாரம் என்றும் இந்திய மக்களில் பெரும்பான்மையினர் ஜனநாயகத்தின் மீதே நம்பிக்கையிழந்து விட்டனர் என்றும் செய்தி வெளியிட்டிருப்பது நிகழ்வுகளின் நிதர்சனமாகும்!

பல்லாயிரக்கணக்கான உயிர்களை குஜராத்தில் படுகொலை செய்த மோடியால் இந்தியாவை வழிநடத்த இயலாது என ஏற்கனவே தேர்தலுக்கு முன்பே இதே நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் கருத்து வெளியிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துணை கறைகளுடன் ஆட்சியில் இருக்கும் இந்துத்துவத்தை மாய்ப்பதும் போலி ஜனநாயகத்தை ஒழிப்பதும் பொருப்புள்ள ஒவ்வொரு குடிமக்களின் கடமையாகும்.

**- ஹாரிஸ் முஹம்மது**




## நாம் பிரிந்து விட வேண்டாம் .

**ஆசிரியர் : யுசுப் அல் கர்ளாவி**

**தமிழில் : கே.எம்.இல்யாஸ் ரியாஜி**

**விலை - 175/-**

# இந்திய இராணுவத்தின் பணி என்ன?



நம் நாட்டின் 2014 - 2015ம் வருடத்திய நிதி நிலையறிக்கையில், வட்டிகளுக்கான செலவீனங்களுக்கு (சுமார் 36%, அதாவது 4.27 லட்சம் கோடி ரூபாய்கள்), அடுத்த படியாக அதிக நிதி ஒதுக்கப்படுவது ராணுவத்திற்குத்தான் (சுமார் 20%, அதாவது 2.29 லட்சம் கோடி ரூபாய்கள்).இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கி, அவர்களுக்குப் பல சலுகைகளையும் வழங்கி, அந்தத் துறையினரை நம் நாட்டு அரசு ஊக்குவிக்கும் பொழுது, அந்தத் துறையினர், இந்நாட்டின் குடிமக்களுக்கு என்ன செய்ய வேண்டும்? அவர்கள் என்ன செய்கின்றனர்?

நாம் அன்றாடம் தினசரிகளில் படிக்கும், அதுவும் 56 **inch** மார்பளவு கொண்ட மனிதர் ஆட்சிப் பொறுப்பேற்று அமர்ந்த சில நாட்களில் மிக அதிகமாக நடக்கும், தொலைக்காட்சிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பும் ஒரு விஷயம், “சீனாவின் எல்லை மீறலும், பாகிஸ்தானின் குண்டு மழை பொழிதலும்”. இந்த எல்லை மீறல்களையும், குண்டு மழை பொழிதல்களையும் சகித்துக் கொள்ளும் நம் ராணுவத்தினர், மணிப்பூர் மற்றும் வட கிழக்கு மாநிலங்களிலும் குறிப்பாக காஷ்மீரத்திலுமுள்ள அப்பாவி இளைஞர்களும், பெண்களும் நிம்மதியாகவும், தன்மானத்தோடும், அமைதி யோடும் வாழ்வதை என்ன காரணத்திற்காகவோ சகித்துக் கொள்வதே இல்லை.

அவர்களைக் குதறுவதும், பெண்களைக் கற்பழிப்பதும், கொலை செய்வதும், நிரந்தர ஊனமாக்குவதும், எந்தக் குற்றமும் செய்யாத அந்த அப்பாவிகளுக்கு சிறை தண்டனை பெற்றுக் கொடுப்பதும் இந்த ராணுவத்திற்கு பொழுது போக்காகவே இருக்கிறது. கடந்த நவம்பர் மாதம் 3ம் தேதி, காஷ்மீரின் பட்காம் மாவட்டத்திலுள்ள சட்டர்காம் என்னுமிடத்தில் நான்கு சிறுவர்கள் ஒரு காரில் வந்து கொண்டிருந்த பொழுது, அவர்களை நோக்கி ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டதில், பைசல் யூசுப், மெஹ்ராஜுதீன் என்னும் இரண்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டினால் சிறுவர்கள் கொல்லப்பட்டதைக் குறித்து முதலில் கூறிய ராணுவ வீரர்கள் என்னும் போர்வையில் இருக்கும் அந்தக் கொலைகாரர்கள், அந்தக் கார், இரண்டு சிக்னல்களில் நிக்காமல் சென்றதால் நாங்கள் மூன்றாவது சிக்னலில் அந்தக் காரை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய ஒரு நிர்பந்த முன்டானதென்றனர்.

அவர்கள் சொன்ன பொய் சிறிது நேரத்தில் பல்லிலிக்கவே, அந்தக் காரில் இருந்தவர்கள் எங்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டதனால் தான், நாங்கள் அவர்களை தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் சுட்டு விட்டோமென்று, வழக்கமாக அப்பாவிகளைக் கொல்லும் பொழுது சொல்லும் அதே வார்த்தைப் பிரயோயகங்களைப் பயன்படுத்திச் சொன்னனர்.

அந்தச் சூத்திரமும் வெகு விரைவில் பல்லிலித்ததால், அந்தச் சிறுவர்கள் இருவரையும் நாங்கள் தவறுதலாக சுட்டுக் கொன்று விட்டோமென்று திட்டமிட்டு காஷ்மீரிகளைக் கொல்லும் இந்த ராணுவம் நவம்பர் 7ம் தேதி சொன்னது. அதோடல்லாமல் கொல்லப்பட்ட அந்த இருவரின் குடும்பத்திற்கும் 10 லட்சமும், காயமடைந்தவர்களின் குடும்பத்திற்கு 5 லட்சமும் இழப்பீடு வழங்கி ராணுவ அமைச்சகம் உத்தரவிட்டது. இது தொடர்பாக கொலை வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பத்காம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கூறியுள்ளார்.

கடந்த அக்டோபர் மாதம் 8ம் தேதி, ஹைதராபாத் மாநிலத்தின் மெஹ்திப்பட்டினம் என்னும் ராணுவத்திற்கு சொந்தமான இடத்தில் எரிந்த




நிலையில் கிடந்த சேக் முஸ்தபாத்தீன் என்னும் 11வயது சிறுவனை மருத்துவமனையில் அனுமதித்து, அந்தச் சிறுவன் இறப்பதற்கு முன் அவனிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தில் “நான் என் வீட்டினருகே விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கு வந்த இரண்டு ராணுவ வீரர்கள் தன்னை அழைத்து, தடுப்பு வேலிக்குள் அத்துமீறி நுழைந்து பதுங்குமாறு கேட்டுக் கொண்டனர். நான் அவர்கள் சொன்ன படி செய்த பொழுது, அவர்கள் என்னை அடிக்கத் தொடங்கினர், நான் அவர்களிடமிருந்து தப்ப முயலும் பொழுது என்னை அடித்து, என் மீது எண்ணெய் ஊற்றி தீ வைத்தனர்” என்று சொல்லியுள்ளான்.

அதனைத் தொடர்ந்து போலீசார் வழக்குப் பதிவு செய்து அப்பல் ராஜ் என்னும் ராணுவ வீரரை விசாரணை செய்து வந்த நிலையில், கடந்த நவம்பர் மாதம் 3ம் தேதி தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டார் அப்பல் ராஜ். அவரின் தற்கொலையைத் தொடர்ந்து கருத்துக் கூறிய அப்பல் ராஜுவின் மனைவி, என் கணவர் நிரபராதி. போலீசார் அவரிடம் கடுமையாக நடந்து கொண்டதனால் அவமானமடைந்த அவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறினார்.

காஷ்மீர் மாநிலத்தின் மாச்சில் என்னுமிடத்தில் 2010ம் வருடம் ஏப்ரல் மாதம் 30ம் நாள் பாரமுல்லா மாவட்டம் நதிகால் கிராமத்தைச் சேர்ந்த சஜாத் அஹமது கான், ரியாஸ் அஹமது லோன், முகம்மது ஷாஃபி லோன் என்ற மூன்று இளைஞர்கள் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களை சுட்டுக் கொலை செய்த ராணுவம், இவர்கள் மூன்று பேரும் “பாகிஸ்தான் தீவிரவாதிகள்”, நம் எல்லையில் அத்துமீறியதால் சுட்டுக் கொன்றோம் என்று கதை சொன்னனர்.

இந்தக் கொலைகாரர்களின் கதையை நம்பாத காஷ்மீர் மக்கள், பல உணர்வுப்பூர்வமான போராட்டங்களை நடத்தியதன் விளைவாக, அந்தக் கொலைகள் குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில், அந்த மூன்று பேருக்கும் வேலை வாங்கித் தருவதாக அழைத்துச் சென்ற ராணுவத்தினர், பின்னர் அவர்களை சுட்டுக் கொன்றது இப்பொழுது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இந்தக் கொலை வழக்கில், ஏழு பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கி ராணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்தக் கொலைகாரர்களில் கர்னல் பதானியா, கேப்டன் உபேந்தர் என்னும் இரு உயரதிகாரிகளும் அடங்குவர். இது போல பல வழக்குகளை போதிய ஆதாரங்கலில்லையேன்று கூறி இதே ராணுவ நீதிமன்றம் தள்ளுபடி செய்து காஷ்மீர் மக்களை வஞ்சித்துமுள்ளது.

எல்லையைக் காக்கிறேன் பேர்வழி என்று, ராணுவத்தினர் செய்யும் மற்றும் செய்த கற்பழிப்புகளும், கொலைகளும், நிரந்தர ஊனமாக்கலும், மக்களிடமிருந்து பணம் பிடுங்குவதும், அப்பாவிகளை சிறைலடைப்பதும், பொது மக்களை வதைப்பதுமேன்று பல நூறு பக்கங்கள் எழுதுமளவு அநியாயங்கள் காஷ்மீரிலும் மற்றும் வட கிழக்கு மாநிலங்களிலும் அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஒரு தெருப்பொறுக்கி, குண்டன், கூலிப்படை செய்யும் அனைத்து கீழ்த்தரமான வேலைகளையும் செய்யும் ராணுவம், தாங்கள் செய்யும் எந்த ஒன்றிற்கும் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கு அவர்களுக்கு உதவுவது, ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் தான் **(Armed Forces (Special Power) Act 1958, AFSPA) .**

மனித உரிமைகளையும், மனித மாண்புகளையும் சிதைக்கும் இந்தச் சட்டத்தை, வடகிழக்கு மாநிலங்களிலிருந்தும், மணிப்பூரிலும் மற்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கிலிருந்தும் நீக்க வேண்டுமென்று பல பேர் பல முறை குரல் கொடுத்தும், இந்த சட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படுவது முஸ்லிம்களும், பழங்குடியினரும், மலைவாழ் மக்களும் என்பதால் தான் இந்தச் சட்டம் அகற்றப்படாமல் இருக்கிறதோ என்ற சந்தேகம் உண்டாகிறது.

அது போல மணிப்பூர் மாநிலத்தைச் சார்ந்த தஞ்சம் மனோரமா என்னும் இளம் வயதுப் பெண்மணியை, ஒரு தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்தவர் என்று கூறி, 2004ம் வருடம் ஜூலை மாதம் 10ம் நாள்

நள்ளிரவு, அவருடைய வீட்டிலிருந்து அழைத்துச் சென்ற ராணுவத்தினர், அவரை அழைத்துச் செல்லும் பொழுதே, அதுவும் அவரின் பெற்றோர்களின் முன்னிலையிலேயே பாலியல் சேட்டைகளை செய்துள்ளனர்.



ராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட தஞ்சம் மனோரமா தேவி மறு நாள் எரிபோக் என்னுமிடத்தில் ஒரு சாலையோரத்தில், மறைவான இடம், தொடை, மார்பு போன்ற இடங்களில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த நிலையில் இறந்து கிடந்தார். இவரது இறப்புக் குறித்து ? றிய ராணுவம் என்னும் கொலை காரர்கள், அவர் சிறுநீர் கழிக்க என்று கூறிச் சென்று தப்பிக்க முயலும் பொழுது காலில் சுட்டதாகக் கூறினர்.

மணிப்பூர் மக்களின் பெரும் போராட்டத்திற்குப் பின்னர், அரசாங்கம் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டது. அந்த நீதி விசாரணைக் குழுவின் விசாரணை அறிக்கையில், அந்தப் பெண்மணிக்குக் காலுக்குக் கீழே எந்த குண்டுக்காயங்களும் இல்லை என்றும், அவருடைய மறைவானப் பகுதி, தொடை மற்றும் மார்பகங்களில் தான் குண்டுக்காயங்கள் இருந்தது என்றும், அவருடைய ஆடையில் விந்துத் துளிகள் இருந்தது என்றும், ஆதாரத்தை சிதைப்பதற்க்கே அவருடைய மறைவுப் பகுதியில் துப்பாக்கியால் சுட்டுள்ளனர் என்றும், அவர் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு, பல பாலியல் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்ட பின்னரே, மிகக் கொடூரமாக கொல்லப்பட்டுளதை அந்த விசாரணை அறிக்கை உறுதி செய்கிறது.

மணிப்பூரிலும் ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் **(Armed Forces (Special Power) Act 1958, AFSPA)** அமலி ல் உ ள்ளதால் தான் கொலைகாரர்கள் கொலை செய்து விட்டு அந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றனர். ஐரோம் சர்மிளா, மணிப்பூரின் இரும்புப் பெண். கடந்த 2000ம் வருடம் மணிப்பூர் மாநிலத்தின் இம்பாலில் 10 பேரைச் சுட்டுக் கொன்ற ராணுவத்தினர், மனிதனைக் கொலை செய்யத் தூண்டும் இந்தச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டார்கள். அதனைத் தொடர்ந்து அந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டு மென்று கடந்த 14 ஆண்டுகளாக வாயால் எந்த உணவையும் உண்ணாமல், உண்ணா விரதம் இருந்து வருகிறார் இந்தப் பெண்மணி. இவரை உணவருந்த வைப்பதற்காக சாம பேத தான தண்ட வழிமுறைகளை கையாண்ட, கையாலாகாத மத்திய மாநில அரசுகள், அந்த முயற்சியில் தோல்வியடைந்து அந்தப் பெண்மணியின் முன் மண்டியிட்டனர். கடைசி ஆயுதமாக. அவர் மீது பல வழக்குகளைப் புனைந்தும் அவர் தன் கொள்கையில் உறுதியாக இருப்பதால், இனி என்ன செய்வதென்று தெரியாமல் விழிபிதுங்கி கை பிசைந்து நிற்கின்றன முட்டாள் அரசுகள்.

சீனாவின் அத்துமீறலுக்கும், பாகிஸ்தானின் குண்டு வீச்சுக்கும் செவி கொடுக்காத அல்லது செவி கொடுப்பதில் மெத்தனமாக இருக்கும் நம் ராணுவம், மணிப்பூரிகளின் மற்றும் காஷ்மீரிகளின் வாழ்க்கையை சீரழிப்பதிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்குவதிலும் மிக வேகமாகவே செயல்படுகிறார்கள்.

இராணுவத்தின் இத்தனை கொலைபாதக செயல்களை கேட்ட, பார்த்த, படித்த, பின்பும் இந்த இந்திய இராணுவத்தினர் நாட்டைப் பாதுகாக்கும் பாதுகாப்புப் படையினரா? இல்லை! இல்லை!! அப்பாவி இளைஞர்களை கொல்லும் கொலைகார கும்பல்கலாகவும், அப்பாவி பெண்களை கற்பழிக்கும் வெறிபிடித்த மிருகங்கலாக்கவும் தான் இவர்கள் செயல்படுகின்றார்கள். இவர்களை தண்டனை யிலிருந்து மனித இனத்திற்கெதிரான () என்கின்ற ஆள்தூக்கி சட்டம் பாதுகாத்து வருகின்றது. ஆகவே இந்த ஆள்தூக்கி சட்டங்கள் அகற்றப்பட்டு இராணுவம் உருவாக்கப்பட்டதின் உண்மையான நோக்கம் நிலை நாட்டப்பட வேண்டும் அதுவே மாந்தநேயம் உள்ள ஒவ்வொருவரின் எதிர்ப்பார்ப்பாகும்.

**- M.R**

# சாமியார்களும் சாம்ராஜ்ஜியங்களும்.

இந்தியாவை பொருத்தமட்டில் முதலீடுகள் இல்லாமல் கோடி கணக்கில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்றால் சாமியார் என்கின்ற ஒற்றை அவதாரம் போது பல கோடிகள் வந்து தானாக குவியத் தொடங்கும். மக்களின் மதிகெட்ட தனத்தை பயன்படுத்திக் கொண்டு தங்களை கடவுளின் அவதாரம் என்றும் கடவுளின் தூதர் என்றும் கூறும் இவர்கள் பல்வேறு மோசடிகளிலும் குற்றச்சாட்டுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். கற்பழிப்பு, பணமோசடி குற்றச்சாட்டுகள் தொடங்கி கொலை குண்டுவெடிப்புகள் என பயங்கரவாத செயல்களில் தொடர்புவரை ஏன் பயங்கரவாத செயல்களையே முன்னின்று நடத்தியது என இந்தியாவில் நடைபெற்றுள்ளன. பல்வேறு குற்றச் செயல்களுக்கு காரணமானவர்கள் இந்த சாமியார்களே. சுவாமியார் என்கின்ற போர்வையில் நாட்டில் பல்வேறு குண்டுவெடிப்புகள் நிகழ்த்திய இந்துத்துவ பயங்கரவாதிகளான ஆசிமானந்தா, பிரக்கியசிங் வரிசையில் தனி ராஜ்ஜியமே நடத்தி வந்த பயங்கரவாத சாமியார் ராம்பால் ஒருவழியாக காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.



**பயங்கரவாதி ராம்பால்**

ஹரியானாவில் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சாமியார் ராம்பாலின் ஆசிரமத்தில் குவியல் குவியலான ஆயுதங்கள், பல்வேறு சொகுசு வசதிகளை உள்ளடக்கிய சொகுசு அறைகள், குண்டு துளைக்காத பூஜை அறைகள், பல்வேறு நகைப் பெட்டகங்கள் காவல்துறையின் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற கொலை சம்பவம் ஒன்றில் குற்றம் சுமத்தப்பட்டு சிறை சென்று பின்பு பிணையில் வெளிவந்த ராம்பாலை வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகாததால் மூன்று முறை பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்ட பின்னரும் முரண்டு பிடித்த சாமியாரை நவம்பர் 21 க்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டப்பின் கைது செய்ய காவல்துறை ஆசிரமத்திற்கு சென்றபோது சாமியார் ராம்பாலால் உருவாக்கப்பட்ட ராஸ்ட்ரிய சமாஜ் சேவ சமிதி (RSSS) படை காவல்துறையை உள்ளே நுழையவிடாமல் அவர்களுடன் போர் செய்துள்ளது. ஒரு வழியாக இரண்டு நாள் போராட்டத்திற்கு பின்னால் சாமியார் ராம்பால் என்கின்ற பயங்கரவாதியை நவம்பர் - 19 ஆம் தேதி காவதுறையினர் கைது செய்துள்ளனர்.

பயங்கரவாதி ராம்பாலின் படைகளுக்கும் காவல்துறையினருக்கும் நடைபெற்ற மோதலில் ஒரு குழந்தை ஐந்து பெண்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். நவம்பர் 20-ஆம் தேதி நீதிமன்றத்தில் பயங்கரவாதி ராம்பாலை ஆஜர்படுத்தும் போது கைது செய்வதற்கான செலவு அறிக்கையை ஹரியானா டி.ஜி.பி.வாஹிங்ட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். இதேபோல் பஞ்சாப் மற்றும் சண்டீகர் நிர்வாகமும் தனது செலவு அறிக்கையினை தாக்கல் செய்தது. இந்த மோதலில் ஈடுபட்டதாக இதுவரை 900 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்கல் செய்யப்பட்டுள்ள செலவு அறிக்கைகளில் ஹரியானா அரசு ரூபாய் 15.43 கோடியும், பஞ்சாப் அரசு 4.34 கோடியும் மற்றும் சண்டீகர் நிர்வாகம் 3.29 கோடி என மொத்தம் 26.61 கோடி ரூபாய் பயங்கரவாதி ராம்பாலை கைது செய்வதற்காக செலவிடப்பட்டுள்ளது. ஹரியான ா மாநிலம் சோனிபட் மாவட்டம் நானா கிராமத்தில் 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் 8 ஆம் தேதி பிறந்த ராம்பால் பொறியியல் பட்டப்படிப்பை முடித்து ஹரியானா மாநிலத்தின் நீர்பாசனத்துறையில் பணிபுரிந் துள்ளான். பின்பு சாமியாரான இவன் 1999 ஆம் ஆண்டு சட்லக்கில் தனது முதல் ஆசிரமத்தை தொடங்கியுள்ளான். பின்பு ரோட்டக் மற்றும் பர்வாலா பகுதிகளில் ஆசிரமங்களை அமைத்துள்ளான். இதில் சட்லக் ஆசிரமம் சண்டிகர் - ஹிசார் தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் 12 ஏக்கர் பரப்பளவில் ஐந்து மாடிகளுடன் அரண்மனை போன்று கட்டப்பட்டுள்ளது.

## ஆசிரமத்தின் சொகுசு வசதிகள்

ஆசிரம வளாகம் முழுவதும் கிராணைட் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதில் பயங்கரவாதி ராம்பாலுக்காக பல்வேறு தனி அறைகள் உள்ளன. அவற்றில் குளிர்சாதன வசதி, மசாஜ் படுக்கைகள், பிரம்மாண்ட டீவி போருத்தப்பட்டுள்ளது. ஆசிரமத்திற்கு உள்ளே நவீன கருவிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம், 25 மீட்டர் நீளம் கொண்ட நீச்சல் குளம், குளிர் சாதன வசதிகளுடன் 24 அரைகள் உள்ளன. ஆசிரமத்தில் 50,000 நபர்கள் வரை தங்கும் வசதி உள்ளது. ஒரு இலட்சம் பேருக்கு சமைக்கக்கூடிய வகையில் மிகப்பெரிய சமையலறை உள்ளது. இங்கு ஒரு மாதத்துக்கு தேவையான சமையல் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் 10 ஆயிரம் பேர் அமர்ந்து சாப்பிடும் உணவுக்கூடம் உள்ளது.

ராம்பாலுக்கென்றே பிரத்யோகமாக பூஜை அறை உள்ளது. இங்கு பெண் பக்தர்களுக்காக தனி வரிசை ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த பூஜை அறை அருகே நகை பெட்டகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆசிரம வளாகத்தில் பிரம்மாண்ட மைதானம் உள்ளது. மைதானத்தின் உயரமான மேடையில் குண்டு துளைக்காத கூண்டில் இருந்துதான் ராம்பால் சொற்பொழிவாற்றுவானாம். அவனது உரையைக் கேட்க வசதியாக ஆங்காங்கே பிரம்மாண்ட திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. பயணம் செய்வதற்காக குண்டு துளைக்காத புல்லட் பூ ருஃப் கார்களை ராம்பால் பயன்படுத்தியுள்ளான். அவனின் பாதுகாப்புக்காக 400 பேர் கொண்ட சிறப்பு கமாண்டோ படை இருந்துள்ளது. ஆசிரமம் முழுவதும் கண்கானிப்பு கேமாராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. வெளி நபர்கள் ஆசிரமத்துக்குள் நுழைய முடியாத வகையில் 20 அடி உயரத்துக்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளன. அதில் ஆங்காங்கே கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆசிரமத்தின் வாயிலில் 4 மெட்டல் டிடெக்டர் பொருத்திய கதவுகள் உள்ளன. அதன் வழியாகவே பக்தர்கள். உள்ளே நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## இரகசிய அறையில் கண்டெடுக்கப்பட்ட ஆயுதக்குவியல்கள்

ஆசிரமத்தின் இரண்டு இரகசிய அறைகளில் ஏராளமான துப்பாக்கிகள், பெ ட்ரோல் குண்டுகள், கையெறி குண்டுகள், ஆசிட் குப்பிகள், என ஒரு போரை நடத்துவதற்கு தேவையான ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. ஹெல்மட், கைத்தடிகள், கருப்பு நிற கமாண்டோ சீருடைகள் அலமாரிகளில் வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. அங்குள்ள இரண்டு டேங்குகளில் 800 லிட்டர் டீசல் நிரப்பி வைக்கப்பட்டிருந்தது. துப்பாக்கிகள் அனைத்திலும் தோட்டாக்கள் நிரப்பப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு ராம்பாலின் கமாண்டோ படை வீரர்கள் தங்குவதற்காக தனி அறைகளும் உள்ளன. சிறிய இராணுவத்துக்கு தேவையான வகையில் ஆயுதங்கள் குவித்து வைக்கப்பட்டிருப்பது பேரதிர்ச்சி அளிப்பதாக ஹரியான ா மாநில காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இது குறித்து காவல்துறையினர் மேலும் கூறியபோது கைது செய்யப்பட்டவர் களிடம் இரகசிய ஆயுதக்கிடங்கு குறித்து தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறோம். இதன் மூலம் மேலும் பல்வேறு தகவல்கள் வெளிவரும் என்று தெரிவித்தனர்.

## கர்ப்ப சோதனை கருவிகள்

சாமியார் ராம்பாலின் ஆசிரமத்துக்கு பெண்பக்தர்கள் ஏராளமாக வந்துள்ளனர். இந்நிலையில் ஆசிரமத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கர்ப்ப சோதனை கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் பெண்களின் குளியறையில் இரகசிய கேமாராக்கள் பொருத்தியிருந்ததும் கண்டறியப்பட்டுள்ளது.

## காஞ்சி சங்கரமடத்தில் ரூபாய் 3992 கோடி கருப்புப் பணம்

தமிழ்கத்தில் பரபரப்பு ஏற்படுத்திய சங்கரராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சட்டத்தின் ஓட்டைகளில் வெளியாகி குற்றமற்றவராக தன்னைத் தானே கூறிக்கொள்ளும் ஜெயேந்திரன் காஞ்சிபுரம் சங்கரமடத்திற்கு 3992 கோடி ரூபாய் வங்கிகளில் வைக்கப்பட்டுள்ளது. இந்த பணவரு வாய்க்கான விவரங்கள் ஏதும் இல்லை.



கணக்கில் வராத இந்த கருப்புப் பணம் குறித்து விசாராணை தொடங்கப்படுகிறது. 2011 - 2012 ஆம் ஆண்டில் சங்கரமடத்திற்கு ரூபாய் 3992 கோடி நன்கொடையாக வந்த விவரம் குறித்து மத்தியப் புலானாய்வுத்துறை விசாரணையைத் தொடங்கியுள்ளது. தென்னிந்தியாவில் காஞ்சிபுரத்தில் காஞ்சி சங்கராச்சாரியைத் தலைவராகக் கொண்டு காஞ்சிகாமகோடி மடம் செயல்பட்டு வருகிறது. இம்மடத்திற்கு சொந்தமான வங்கிக் கணக்கில் 2011 - 2012 ஆம் ஆண்டிற்கான வரவாக ரூபாய் 3992 கோடி வைப்பு நிதியாக செலுத்தப்பட்டது. இதை காஞ்சிமடத்தின் தலைமைக் கணக்காளர் எஸ்.ஸ்ரீதர் உறுதி செய்தார்.

இதுகுறித்து மத்திய வருமான ஆய்வுக் குழுத் தலைவர் அசோக் குமார் என்பவருக்கு காஞ்சி சங்கரமடம் எழுதிய கடிதத்தில் 2011 -2012 ஆம் ஆண்டு எங்களுக்கு நன்கொடை மூலம் ரூபாய் 3992 கோடி வருவாய் வந்துள்ளது. என்று குறிப்பிட்டுள்ளது. இந்த ரூபாயை காஞ்சி மடத்தின் மூன்று வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு சரியான வருவாய் ஆதாரமின்றி 3992 கோடி ரூபாய் வரவு



வைக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக மத்திய புலனாய்வுத்துறையின் புகார் கொடுக்கப்பட்டது. அதில் காஞ்சி சங்கரமடத்தின் நன்கொடையாளர்கள் பட்டியலில் 100 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரையில் நன்கொடை கொடுத்தவர்களின் பெயர்தான் உள்ளன. இதில் யாரும் இலட்சங்கள்வரை கொடுக்கவில்லை. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக மடத்தின் கணக்கில் 15 கோடி ரூபாய் மட்டுமே வருவாய் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் திடீரென 2011 - 2012 ஆம் ஆண்டில் சங்கரமடத்தின் சார்பில் ஆக்ஸிஸ் வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி மற்றும் சிட்டி யூனியன் வங்கிக்கணக்கில் 3992 கோடி செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தொகைக்கு மேல் நேரடியாக நன்கொடை பெற இயலாத நிலையில் சங்கரமடம் எப்படி நேரடிக்கணக்கில் அதுவும் ஓர் ஆண்டிற்குள் நன்கொடையாக பெற்றிருக்க முடியும்?இந்த நன்கொடையாகப் பெற்ற பணம் யாரிடமிருந்து வந்தது என்பதனையும் சரிவர கணக்கில் காட்டவில்லை என்று புகாரில் கூறப்பட்டுள்ளது. இப்புகாரைக் குறித்து விசாரணை செய்து வரும் மத்திய புலனாய்வுத்துறையின் இணை ஆணையர் (சட்டம் ஒழுங்கு) அபிசேக் கோயல் கூறும்போது; சங்கரமடத்தில் நடந்த இந்தப் பணமோசடி தொடர்பாக தனிப்பிரிவு அமைத்து விசாரணை செய்து வருகின்றோம்.

ஏப்ரல் மாதம் சென்னையில் உள்ள நீலகண்டாச்சாரியா சுவாமிகள் மற்றும் எட்டு நபர்கள் எங்களின் விசாரணை வளையத்திற்குள் வந்துள்ளனர். பெங்களூரு மற்றும் சென்னையில் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தியுள்ளோம். இது தொடர்பாக விஜயநகர் காவல் நிலையத்தில் 15 பேர் மீது பணமோசடி மற்றும் தவறான வழியில் பணம் சேர்த்தல் தொடர்பான குற்றப்பிரிவில் வழக்கு பதிவு செய்துள்ளோம். சங்கரமடத்தில் நடக்கும் இந்த பண மோசடி சில கருப்புப் பண முதலைகளுக்கு தங்களது பணத்தை வெள்ளையாக்க உதவி புரிந்துள்ளது. அத்துடன் சங்கரமடத்திற்கும் தரகுத்தொகைக் கிடைத்துள்ளது. இதுகுறித்து மேலும் விரிவான விசாரணை நடந்து வருகிறது என்று கூறினார்.

இப்படியாக பல சாமியார்களும், மடாதபதிகளும், தனி சாம்ராஜ்ஜியமே நடத்தி வரும் நிலையில் இந்த குற்றங்களுக்கு துணைபோகும் அதன் ஆட்சியாளார்களும், இந்துத்துவ தீவிரவாதிகளும், மதராஸக்கள் பயங்கரவாதத்தை போதிப்பதாக கூறி நாடு முழுவதும் பொய் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவது நகைப்பிற்குறியது. நாட்டில் எங்கோ நடந்த



குண்டுவெடிப்புகளுக்கு சம்பந்தமே இல்லாத அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்ட போது இவன்தான் முக்கிய சதிகாரன் அல் - காயிதா உடன் இவனுக்கு நெருங்கிய தொடர்பிருக்கின்றன என்றும் பாகிஸ்தானுடன் தொடர்புள்ளது என பாகிஸ்தான் பல்லவி பாடியும் பத்தி பத்தியாக பல பக்கங்களுக்கு கப்சா விடும் பத்திரிக்கைகளும் ஊடகங்களும் அதே அப்பாவி நிரபராதி என்று விடுதலையாகும் போது ஒரு துனுக்கு செய்தியைக் கூட போடுவதில்லை.

இஸ்லாமிய சமூகத்தின் மீது தனது வெறுப்பை சகட்டுமேனிக்கு காரி உமிழும் ஊடகங்களோ குவியல் குவியலாக ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட பின்னும் பயங்கரவாதி ராம்பாலை சாமியார் என்றும் காவல்துறையுடன் துப்பாக்கி, வெடிகுண்டு பயன்படுத்தி போர் செய்த பயங்கரவாதி ராம்பாலின் கூலி படையினரை சாமியாரின் ஆதரவாளர்கள் என்று கூறுகின்றன ஐ.பி.யிடம் தனது சொந்த பேனாவை விற்றுவிட்ட வேசி ஊடகங்கள்.

நாட்டின் அமைதியை நிலைநாட்ட இந்துத்துவத்தையும் அதன் ஆக்கமான சாமியார்களையும் வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்த்து தேசத்தை கந்தியடிகள் கூறிய உமர்(ரழி) அவர்களின் ஆட்சியை நிலைநாட்டினால் தான் சமத்துவம் தளைத்து அமைதி நிலவும். எனவே இந்நாட்டில் உமர்(ரழி) அவர்களின் ஆட்சியமைய ஒன்றுபடுவோம், பாடுபடுவோம். நாட்டங்களை நிறவேற்ற அந்த ஆற்றல் மிக்கோன் போதுமானவனாக.

**- அபு நுசைபா**

## அகில இந்திய மஜ்லிசே முஷாவரத் - செயற்குழு கூட்டம்




கடந்த 28.10.2014 அன்று அகில இந்திய மஜ்லிசே முஷாவரத் - இன் கிளை துவங்கபெற்றது. அதன் தற்காலிக தலைவராக டாக்டர் செய்யத் முஹம்மத் அமீன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செயலாளராக எஸ்.எம்.பாஷா அவர்கள் இயங்கி வந்தார்கள்.(பார்க்க வைகறை வெளிச்சம் நவம்பர் - 2014)

இந்நிலையில் அதன் பொதுக்குழு ஒன்று 28.11.2014 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டு அன்று மதியம் ஜும்மாவுக்குப்பின் கூடியது. அதில் சொற்குழுவும், அதனை தொடர்ந்து தலைவர், செயலாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

தலைவராக பதம ஸ்ரீ டாக்டர். கலீபத்துல்லாஹ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எஸ்.எம்.பாஷா அவர்கள் செயலாளராகவும், டாக்டர்.செய்யத் அமீன் அவர்கள், துணை செயலாளராகவும், செய்யித் மஹ்மூத் அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

<u>**நமது நிறுபர்**</u>

# 26/11 மும்பைத் தாக்குதல் மோடியின் பிதற்றல்.

மோடி வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் "தீவிரவாதம், தீவிரவாதம்" என்றே கத்துகின்றார். நவம்பர் திங்கள் நெருங்கியவுடன் மும்பை தாக்குதல் மும்பை தாக்குதல் எனக் கூப்பாடு போடுகின்றார். 26/11 - க்குப் பதில் என்கின்றார். இந்தக் கூப்பாடுகளின் வழி அவர் மும்பை தாக்குதலை ஏற்பாடு செய் த அபிநவ் பாரத் என்ற தீவிரவாத அமைப்பு, மத்திய உளவுத்துறை அப்போதைய அரசு ஆகியவற்றை காப்பாற்றிடவே முயற்சி செய்கின்றார்.

26/11 என அடையளப்படுத்தப்படும் மும்பை தாக்குதலை ஏற்பாடு செய்தவர்கள் அரசாங்கம் தான் என உள்துறையில் வேலை செய்த ஆர்.வி.எஸ். மணி அவர்களும் இன்னொரு உள்துறை அதிகாரி சத்தீஷ் ஷவ்லாவும் கூறியிருந்தார்கள். இதனை டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு 14.07.2013 இல் முதற்பக்கத்தில் செய்தியாக வெளியிட்டிருந்தது. அரசே முன்னின்று அந்தத் தாக்குதலை ஏன் செய்தது என்பதையும், அவர்கள் தெளிவுபடுத்தியிருக் கின்றார்கள்.

26/11 என்ற மும்பைத் தாக்குதலை நடத்தித்தான் அவர்கள் தடை செய்யப்பட்ட செயல்களின் தடை சட்டத்தைக் கடுமையாக்கினார்கள் (UAPA) இந்த சட்டத்தின் கீழ்தான், ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். சிறைகளில் தாங்கள் இளமையைப் பாழாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த பின்னணியில்தான் ஹேமந்த் கர்கரே என்ற நேர்மையான அதிகாரி படுகொலை செய்யப்பட்டார்.அப்போது கர்கரேயின் மனைவிக்கு மோடி 2 கோடி ரூபாயைக் கொடுத்தார். அதை அவர் முகத்திலேயே திருப்பி எறிந்தார் கர்கரேயின் மனைவி கவிதா கர்கரே.

மத்திய உள்துறை அதிகாரிகள் இத்தோடு நிற்கவில்லை. ஆர்.வி.எஸ்.மணி அவர்களும், சத்தீஷ் ஷர்மா அவர்களும் இன்னும் ஒருபடி மேலே போய், இன்னொரு உண்மையையும் திருவாய் மலர்ந்தருளினார்கள். அது மோடி வகையறாவின் மூத்தத்தலைவர், 'வாஜ்பேயி' இந்த நாட்டை ஆட்சி செய்கிறேன் என்ற பெயரில் அழித்துக் கொண்டிருந்தபோது நடந்தது. அதுதான் நாடளுமன்ற தாக்குதல். இதை அப்போதைய பரிவார அரசுதான் ஏற்பாடு செய்தது.

அந்த நாடாளுமன்ற தாக்குதலைக் காட்டித்தான் 'பாசிச பயங்கரச் சட்டம் பொடாவைக்' கொண்டுவந்தார்கள். இவையெல்லாம் இன்று இந்திய குடிமக்கள் அனைவரும் அறிந்த உண்மை.

ஆனால் இவற்றிலெல்லாம் அப்பாவி முஸ்லிம்களை தூக்கிலே தொங்கவிட்டு சிறையிலேயே புதைத்தார்கள். இன்னும் ஆயிரமாயிரம் முஸ்லிம்களை கொலை செய்து அந்த அப்பாவி முஸ்லிம்களைக் கைது செய்து அந்த அப்பாவி இளைஞர்களையும் அவர்களைச் சார்ந்து வாழ்ந்த குடும்பங்களையும் சின்னாப்பின்னப் படுத்தினார்கள்.

இத்தனையையும் செய்துவிட்டு, தீவிரவாதம், தீவிரவாதம் என ஒப்பாரி வைக்கின்றார் மோடி. இது பாசிச பயங்கரவாத பரிவாரின் சிறப்புக் குணங்களுள் ஒன்று. இந்த ஒப்பாரியை இந்தியாவில் வைத்தால் யாரும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதனால் தான் வெளிநாடுகளில் பிதற்றுகின்றார். உண்மையைச் சொன்னால் பாசிச பால்தக்கரேக்குப் பின் இந்திய பாசிசத்தின் உண்மை முகம். "மோடி" என்றால் அது மிகையில்லை.

ஆனால் இந்தியாவில் மோடியின் கூப்பாடுகளை செவிமடுப்பார் எவருமிருக்கமாட்டார்கள். ஏனெனில் கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற நூலும் கசாப் - ஐ இரகசியமாக தூக்கிலிட்டது ஏன்? என்ற நூலும் 26/11 நீதிதேவன் மயக்கம் ஏன்? என்ற நூலும் உண்மைகளை முழங்கிக் கொண்டே இருக்கின்றன.

**- M.G.M**

வாசகர்கள் மேலும் படிக்க வேண்டிய நூல்கள் நாடாளுமன்ற தாக்குதல்;வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள். விலை. ரூ.20/-

கர்கரேயை கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம். விலை. ரூ.150/-

கசாப்பை இரகசியமாக தூக்கிலிட்டது ஏன்? விலை. ரூ.25/-






# ஆர்.எஸ்.எஸ் இன் சூழ்சிகளைத் தகர்த்தெறிந்த தமிழக காவல் துறை

அமைதிப் பூங்கா என்று பெயர் பெற்றுள்ள தமிழகத்தில், சென்னை, திருவாரூர், தூத்துக்குடி, கரூர், தென்காசி, கன்னியாகுமாரி, கோவை ஆகிய ஏழு மாவட்டங்களில், கடந்த நவம்பர் மாதம் 9ம் தேதி, ராஜ ராஜ சோழனின் ஆயிரமாவது ஆண்டு விழா என்ற காரணத்தைக் காட்டி, தனது அமைப்பு சார்பாக தடிகளுடன் அணிவகுப்பு நடத்தி, அதன் மூலம் இனக் கலவரத்தை உண்டு பண்ணலாம் என்று **RSS** அமைப்பு சதித் திட்டம் தீட்டியது (அமைதியுடனும் மற்றும் ஆயுதங்களில்லாமலும் ஒன்று கூடுதல் என்னும் இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 19(1)(பீ)க்கு எதிரானது, இவர்களின் தடிகளுடன் கூடும் அணிவகுப்பு).

அந்த அணி வகுப்பிற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும், பல மாதங்களுக்கு முன்பே தொடங்கி விட்ட **RSS** அமைப்பினர், மேற் சொன்ன ஏழு மாவட்டங்களிலும் எந்த வித சட்டப் பிரச்சினைகளிலும் சிக்காமல் இருப்பதற்காக, அந்தந்த மாவட்ட நிர்வாகங்களை அணுகியது.

மேற்படி அமைப்பினரின் கோரிக்கைகளை முறையாகப் பரிசீலித்த ஏழு மாவட்ட நிர்வாகங்களும் மற்றும் காவல் துறையும், **RSS** அமைப்பினரின் பேரணி மற்றும் அணிவகுப்பிற்கு தடை விதித்து உத்தரவு பிறப்பித்தது.

மேற்படி ஏழு மாவட்ட நிர்வாகங்களும் மற்றும் காவல் துறையும் தடை விதித்து பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து, பேரணி மற்றும் அணிவகுப்பு நடத்த அனுமதி கோரி, **RSS** அமைப்பின் ஏழு மாவட்ட நிர்வாகிகளும் தனித் தனியாக ஏழு செயலுறுத்தும் நீதிப் பேராணையை (Writ of Mandamus) (W.P No: 28677 - 28683) சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகளின் விசாரணை, நீதிபதி எஸ். ராமசுப்ரமணியன் முன்பாக விசாரணைக்கு வந்தது. **RSS** நிர்வாகிகளின் சார்பாக மூத்த வழக்கரிஞர் ராமானுஜம் மற்றும் வழக்கரிஞர்கள் **S.**பிரபாகரன், B.பாபு மனோகர் வாதம் புரிந்தனர். அப்பொழுது இந்த நாட்டிற்கு இரண்டு பிரதமர்களை தந்த ஒரு அமைப்பின் பேரணி மற்றும் அணிவகுப்பிற்கு அனுமதி மறுப்பது வருந்தத்தக்கது என்று **RSS** அமைப்பின் சார்பாக வாதம் வைக்கப்பட்டது.

அதற்கு பதிலளித்து வாதிட்ட தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர் சோமையாஜி, **RSS** அமைப்பினர் நடத்த இருக்கும் அணிவகுப்பு மற்றும் பேரணியால், தமிழகத்தில் மிகப் பெரிய சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் உண்டாகும். எனவே தான் அந்த மாவட்ட நிர்வாகங்கள் **RSS** அமைப்பினர் மேற்கொள்ளும் அணிவகுப்பு மற்றும் பேரணிக்கு அனுமதி மறுத்துள்ளது என்று வாதம் புரிந்தார்.



எனினும், எல்லா அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் நடத்தும் பேரணி மற்றும் அணிவகுப்புகளுக்கு வழங்கப்பட்ட அனுமதிகளை மேற்கோள் காட்டி, **RSS** அமைப்பின் பேரணி மற்றும் அணி வகுப்புகளுக்கு அனுமதி வழங்கி, கடந்த மாதம் 7ம் தேதி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அதனை எதிர்த்து, இரண்டு நீதிபதிகளைக் கொண்ட அமர்வில், தமிழக அரசு மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது. ஆனால், இந்த மனுவை அவசர மனுவாக




விசாரிக்க முடியாது என்று அந்த அமர்வு கூறியதால், இடையில் ஒரு நாள் மட்டுமே உள்ள நிலையில், வேறு வழியில்லாமல் உயர் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவை செயல்படுத்தும் நிலை தமிழக அரசுக்கு உண்டானது.

உயர் நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, நவம்பர் 9ம் தேதியன்று பேரணி மற்றும் அணிவகுப்பிற்கான பணிகளை தீவிரப்படுத்திய அந்த அமைப்பினர், அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் பேரணி மற்றும் அணிவகுப்பிற்காக ஒன்று கூடிய பொழுது, **RSS** அமைப்பினர் சீருடையுடன் அணிவகுப்பு நடத்த, தமிழக காவல் துறை அனுமதி மறுத்தது. அதனைத் தொடர்ந்து காவல் துறையினருடன் வாக்குவாதங்களில் ஈடுபட்ட **RSS** அமைப்பினர் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர்.

**RSS** அமைப்பினர் கைது செய்யப்பட்டு அவர்களின் பேரணி மற்றும் அணிவகுப்பு தடைபட்டதால், தமிழகத்தைச் சூழ்ந்திருந்த கலவரச் சூழல் நீங்கி மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

இதனை பொறுக்க முடியாத **RSS** நிர்வாகியொருவர், இந்த அனுமதி மறுப்பு நீதிமன்ற அவமதிப்பாகும். இதை நாங்கள் நீதிமன்ற அவமதிப்பாக வழக்குத் தொடருவோமென்று ராமநாதபுரத்தில் நிருபர்கள் கூட்டத்தில் கூறினார். அதனைத் தொடர்ந்து, அவர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடர்ந்தனர்.

அந்த வழக்குகளும், நீதிபதி **V** ராமசுப்ரமணியன் முன்பு விசாரணைக்கு வந்தது. அதனை விசாரித்த நீதிபதி, பேரணிக்கு மட்டுமே அனுமதி தரப்பட்டது சீருடை அணிவகுப்பிற்கல்ல, ஆகையால் மாநில அரசின் நடவடிக்கை சரியானதே என்று கூறி மேற்படி நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தள்ளுபடி செய்து கடந்த 27ம் தேதி உத்தரவிட்டார்.

வல்லோன் அல்லாஹ்வின் உதவியுடனும், தமிழக காவல் துறையின் சீரான நடவடிக்கைகளாலும் தமிழகத்தைச் சூழ்ந்த இனக் கலவரச் சூழல் முறியடிக்கப்பட்டுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

**- வழக்குரைஞர் இம்ரான்.**





**மூன்று பதிப்புகளை கடந்து பரபரப்பான விற்பனையில்**
**நான்காம் பதிப்பில் பல அறிய தகவல்களுடன்**

**மு.குலாம் முஹம்மது அவர்களின்**
**எளிய நடையில்**

**பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள்**

**விலை : 90/-**

# வாரணாசி பா.ஜா.க வேட்பாளரின் வெற்றி இரகசியம்

மோடி வென்றதாக கூறப்படும் வாராணாசித் தொகுதியில் 6 இலட்சத்திற்கும் அதிகமான போலி வாக்காளர்கள் உள்ளனர் என்ற திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவல் நாடெங்கும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது. வாராணாசியில் தற்போது வாக்காளர்களை சரி செய்யும் பணி நடந்து கொண்டிருக்கின்றது. வாராணாசியில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் இதுவரை 8 தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சரிபாக்கும் பணி முடிந்துள்ளது. அதாவது இதுவரை சரியாக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் 3,11,573 வாக்காளர்கள் போலியென தெரியவந்துள்ளது. வாராணாசியில் இதுவரை சரியாக்கப்பட்ட ஐந்து இலட்சம் வாக்காளர்களில் முக்கால்வாசி பேர் போலி வாக்காளர்கள் என தெரியவந்துள்ளது. வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

மாவட்டத் தேர்தல் ஆணையை அதிகாரிகள் போலி வாக்காளர் பட்டியல் விவகாரம் தொடர்பாக கூறும் போது அதிக இடங்களில் முழுப்பட்டியலுமே போலிப்பட்டியலாக உள்ளது. பட்டியல் சரிபார்க்கும் பணியில் தொடர்ந்து போலி வாக்காளர் பட்டியல்தான் அதிகமாக உள்ளது. இன்னும் பல்வேறு இடங்களில் இந்த பணி நடந்து வருகிறது. பட்டியலில் பலர் ஒரே பெயரை நான்கு முதல் ஐந்து இடங்களில் பதிவு செய்து வைத்துள்ளனர்.

இது கடந்த பிப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் வரை நாடாளுமன்ற தேர்தலுக்கு சற்று முன்பாக நடந்துள்ளது. இதன்படி வாராணாசியின் மொத்த வாக்காளர்களில் 6 முதல் 8 இலட்சம் வாக்காளர்கள் போலியானவர்களாக இருக்கக் கூடும் என்று தெரிகிறது. சரியாக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது என்றார்.

### போலி வாக்காளர்கள் கண்டறியப்பட்டது எப்படி?

தற்போது நாடு முழுவதும் வாக்காளர் சேர்க்கும் பணி நடந்த கொண்டு இருக்கிறது. இதில் பழைய வாக்காளர் பட்டியலும் சரிபார்க்கும் பணியும் நடைபெறுகிறது. புதிதாக வாக்காளர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களும் முதலில் வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர், முகவரி ஒன்றாக இருக்க அவை மீண்டும் சரிபார்க்கப்படும்.

அவற்றில் ஒரே பெயர் முகவரி பல்வேறு இடங்களில் உள்ள தொகுதிகளில் இருப்பதால் அவை தனித்து எடுக்கப்படுகிறது. இவையனைத்தும் போலியானவை என்று உறுதி செய்யபட்டு போலியான வாக்காளர்கள் பட்டியல் கணக்கிடப்படுகிறது. இப்படி கணக்கிடப்பட்டதில் தான் இதுவரை மூன்று இலட்சத்திற்கு மேல் போலி வாக்காளர்கள் உள்ளனர் என்று தெரியவந்துள்ளது. தற்போது தொடர்ந்து மற்ற இடங்களிலும் வாக்காளர் சரிபார்க்கும் பணி நடந்து வருகிறது.

தேர்தல் அதிகாரி தயாசங்கர் உபாத்தியாயா கூறியதாவது :

வாரணாசி பிண்டரா சட்டமன்ற தொகுதியில் 35982 அஜ்கரா சட்ட மன்றத் தொகுதியில் 15825, சிவபூர் சட்டமன்ற தொகுதியில் 10981, ரோஷியா சட்டமன்ற தொகுதியில் 69397, சேவபுரி சட்டமன்ற தொகுதியில் 7500 என்ற எண்ணிக்கையில் போலி வாக்காளர்கள் உள்ளனர். கெண்ட் என்ற சட்டமன்றத் தொகுதியில்தான் அதிகபட்சமாக 81697 போலி வாக்காளர்கள் உள்ளனர் என்று கூறினார். உடனடியாக இவர்களுடைய பெயர்கள் அனைத்தும் நீக்கப்படுகிறது என்றும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப் படும் என்று தெரிவித்தார்.




Indian general election, 2009: Varanasi[5]

| Party | Candidate | Votes | % | ±% |
|---|---|---|---|---|
| BJP | Dr. Murli Manohar Joshi | 203,122 | 30.52 | |
| BSP | Mukhtar Ansari | 185,911 | 27.94 | |
| SP | Ajai Rai | 123,874 | 18.61 | |
| INC | Dr. Rajesh Kumar Mishra | 66,386 | 9.98 | |
| AD | Vijay Prakash Jaiswal | 65,912 | 9.90 | |
| | Majority | 17,211 | 2.58 | |
| | Turnout | 665,490 | 42.60 | |
| BJP gain from INC | | Swing | | |

General election 2014 [edit]

Indian general election, 2014: Varanasi[6][7]

| Party | Candidate | Votes | % | ±% |
|---|---|---|---|---|
| BJP | Narendra Modi | 5,81,022 | 56.37 | +25.85 |
| AAP | Arvind Kejriwal | 2,09,238 | 20.30 | N/A |
| INC | Ajay Rai | 75,614 | 7.34 | -2.64 |
| BSP | Vijay Prakash Jaiswal | 60,579 | 5.88 | -22.06 |
| SP | Kailash Chaurasia | 45,291 | 4.39 | -14.22 |




வாராணாசியில் போலி வாக்காளர்கள் என்ற தகவல் கிடைத்தவுடன் ஆம் அத்மி கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதுகுறித்து டில்லியில் வெளியிட்ட அந்த அறிக்கையில் நாங்கள் தேர்தலின் போது மத்திய தேர்தல் ஆணையத்திடமும் மாநில தேர்தல் ஆணையத்திடமும் பா.ஜா.க வினர் அதிக எண்ணிக்கையில் போலி வாக்காளர்களை சேர்த்துக் கொண்டு இருக்கின்றனர் என ஆதாரத்துடன் புகார் அளித்தோம். ஆனால் தேர்தல் ஆணையம் எங்கள் புகாரை கண்டுகொள்ளாமல் இருந்துவிட்டது. வாக்குச்சாவடியில் பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளது. ஒரே நபர் நான்கு வாக்குச்சாவடிகளில் வாக்களித்துள்ளார். இவையனைத்தும் பா.ஜ.க வின் ஆதரவுடன் நடந்து வந்தது. மோடி தேர்ந்தெடுத்துள்ள ஜ்யபூர் கிராமம் அடங்கியுள்ள கெண்ட் சட்டமன்ற தொகுதியில் அதிக அளவு போலி வாக்காளர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மோடி வாராணாசி தொகுதியில் *3,37,000* வாக்குகள் வித்தியாசத்தில் தான் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியாக பல மோசடிகளையும் செய்து வெற்றி பெற்ற மோடி. இன்று தனது அமைச்சரவையில் ஒரு வெளியுறவுத்துறை அமைச்சர் இருக்கின்றார் என்பதனை மறந்து நாடு நாடாக அலைந்து திரியும் அவர் இந்த விடயம் விஸ்வரூபம் எடுக்கும் போது இதை எப்படி எதிர்கொள்வார்? என்பதே நமது மில்லியன் டாலர் கேள்வி. குஜராத் படுகொலையில் மோடிக்கு தொடர்பில்லை என நானாவதி கமிஷன் கூறியது போல் இதற்கும் ஒரு கமிஷன் அமைத்து அதிலும் மோடிக்கும் போலி வாக்காளர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பது கூட பதிலாகலாம்.

போலி வாக்காளர்களின் வெளியீடு! இந்திய போலி ஜனநாயகத்தின் வெளிப்பாடு!

**- அபு நுசைபா**



# தப்ஸீருல் குர்ஆன்

## அத்தியாயம் : அல் பகரா

## வசனங்கள் : 104,105



மௌலவி இல்யாஸ் ரியாஜி

**ஈமான் கொண்டோரே! நீங்கள் (நம் ரஸூலைப் பார்த்து இரண்டு அர்த்தம் கொடுக்கும் சொல்லாகிய) ''ராயினா'' என்று சொல்லாதீர்கள். (இதற்குப் பதிலாக அன்புடன் நோக்குவீர்களாக என்னும் பொருளைத் தரும் சொல்லாகிய) ''உன்ளுர்னா'' என்று கூறுங்கள். இன்னும், அவர் சொல்வதைக் கேளுங்கள். மேலும் காஃபிர்களுக்குத் துன்பம் தரும் வேதனையும் உண்டு.**

**அஹ்லுல் கிதாப்(வேதத்தையுடையவர்களில்) நிராகரிப்போரோ, இன்னும் முஷ்ரிக்குகளோ உங்கள் இறைவனிடமிருந்து, உங்கள் மீது நன்மை இறக்கப்படுவதை விரும்பவில்லை; ஆனால் அல்லாஹ் தன் அருட்கொடைக்கு உரியவர்களாக யாரை நாடுகிறானோ அவரையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்; அல்லாஹ் மிகப் பெரும் கிருபையாளன்.**

**விரிவுரை:-**

இப்னுஅப்பாஸ்(ரழி) கூறினார்கள்; அண்ணல் நபி(ஸல்) அவர்களிடம் ஏதேனும் கூற விரும்பும் முஸ்லிம்கள் நபி(ஸல்)ன் கவனத்தை தம்மை நோக்கி திருப்புவதற்காக 'ராஇனா' எங்களை கவனியுங்கள் அல்லாஹ்வின் திருதூதரே என்று கூறுவார்கள்.

யூதர்கள் மொழியில் இதன் பொருள் "கேட்பீராக உங்கள் செவித்திறன் இல்லாமல் போகட்டும்" என்பதே.எனவே முஸ்லிம்கள் நபி(ஸல்) அவர்களிடம் 'ராஇனா' என்று கூறுவது யூதர்களுக்கு ஒரு பெரும் வாய்பாக அமைந்துவிட்டது நபி(ஸல்) அவர்களை திட்டுவதற்கு.

"இதுவரை நாம் இவரை மனதுக்குள் தான் திட்டிக் கொண்டிருந்தோம் இனி பகிரங்கமாகவே திட்டுவோம்" என யூதர்கள் தமக்கு இடையே பேசிக்கொண்டனர்.ராஇனா,ராஇனா என்று நபி(ஸல்)விடம் கூறிவிட்டு யூதர் (ஒருவர் மற்றொருவரை) பார்த்து கேலியாக சிரித்துகொல்வார்கள். யூதர்கள் மொழியை நன்கரிந்தவர்கலான நபித்தோழர் ஸஅத் பின் முஆத் (ரழி) இதை கேள்விப் பட்டு கொதித்து போனார்கள்." யூதர்களை சந்தித்து கோபத்தோடு யூதர்களே! உங்களுக்கு தான் சாபம் நிலவும் உங்களில் எவரேனும் "ராஇனா" என்று எங்கள் நபி(ஸல்) விடம் கூறினால் அவனை நான் நிச்சயமாக கொன்றுவிடுவேன்"அதற்க்கு யூதர்கள் "முஸ்லிம்களாகிய நீங்களும் 'ராஇனா' என்று தானே கூறுகிறீர்கள்?" என்றனர். அப்பொழுது தான் இந்த வசனம் இறங்கிற்று.

தவறான பொருளை நோக்கமாகக் கொண்டு சொல்லப்படும் 'ராஇனா' என்ற வார்த்தையை இனி முஸ்லிம்கள் கூறக்கூடாது என்று அல்லாஹ் தடை செய்தான். வார்த்தையில் கூட யூதர்களை முஸ்லிம்கள் பின்பற்றகூடாது என்பதற்காக. (நூல்: குர்த்துபீ)

இப்னுஜரீர்(ரஹ்) கூறுகிறார்:- தன்னுடைய நபியிடம் 'ராஇனா' என்று கூறுவதற்கு அல்லாஹ் தடைவிதித்தன். ஏனெனில் இது இறைவனுக்கு

வெறுப்பூட்டும் சொல். அச்சொல்லை தன்னுடைய தன்னுடைய நபியை பார்த்து முஸ்லிம்கள் சொல்வதை அல்லாஹ் வெறுக்கிறான் (நூல்: இப்னுகதீர்) அப்துல்லாஹ் பின் மஸ்வூத்(ரழி)இடம் ஒருவர் வந்து எனக்கு அறிவுரை கூறுங்கள் என்றார் அதற்கு அல்லாஹ் திருக்குர்ஆனில் "ஓரிறை நம்பிக்கையாளர்களே" என்று அழைத்து கூறும் விசயங்கள் மிகக் கவனமாகக் கேட்டு கடைபிடி! ஏனெனில் அது உனக்கு உத்தரவாகக் கூறப்பட்டிருக்கும் நன்மையாகவோ அல்லது தடைசெய்யப்பட்ட ஒருதமையாகவோ இருக்கும்" என்று கூறினார்கள்.

( நூல்: இப்னு அபி ஹாத்தீம், இப்னு கதீர்)

**படிப்பினைகள்:**

"ஓரிறை நம்பிக்கையாளர்களே" என்று கூப்பிட்டு 'ராஇனா' என்று சொல்வதால் தம் பாசத்துக்குரிய திருத்தூதரை மறைமுகமாக கூட ஏளனம் செய்வது அல்லாஹ்வுக்கு பிடிக்காது. அதுமாத்திரமல்ல இருபொருளில் ஒருபொருள் ஏளனம். மறுபொருள் நல்லது என்றிருந்தால் கூட நல்ல அர்த்தத்தை விரும்பக்கூட இரு பொருள் தரும் சொல்லை பயன்படுத்த கூடாது.

'ராஇனா' என்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று மட்டும் கூறாமல் அதற்கு மாற்றமாக வேறு ஒரு நல்ல சொல்லையும் அல்லாஹ் கூறியுள்ளான். "உள்ளுர்னா" (எங்களை பாருங்கள், கவனியுங்கள்) என்பதே அந்த மாற்றுச்சொல்.

மக்களின் வழமையிலுள்ள ஒன்றை தடை செய்தால் அதற்கு மாற்றமாக வேறொன்றைத் தருவதும் அனுமதிப்பதும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலாகும். நம் வாழ்க்கை மாத்திரமல்ல, நம்வார்த்தையும் கூட அல்லாஹ்வுக்கு பிடித்த மாதிரி இருக்கிறதா என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

பிற சமூகத்தாரைப் போல தம் சொல், செயல், ஆடை, நடவடிக்கைகளை அமைத்துக் கொள்கிறாரோ அவர் அந்த சமூகத்தைச் சார்ந்தவர் என்றே எண்ணப்படுவார். இது இயல்பானதே. நபி(ஸல்) கூறினார்கள்:- "யார் பிற சமூகத்துக்கு ஒப்பாகின்றரோ அவர் அந்த சமூகத்தை சேர்ந்தவர்" (நூல்: அபூதாவூத்)

எனவே யூதர்கள் பயன்படுத்தும் வார்த்தையை முஸ்லிம்களாகிய நாம் பயன்படுத்தகூடாது. இப்படி நிறைய படிப்பினைகள் இவ்வசனத்தில் உள்ளன. இஃதின்றி, வார்த்தையில் என்ன இருக்கிறது? அதுஎப்படி இருந்தாலென்ன? நம் எண்ணங்கள் சரியாக இருந்தால் போதுமே! அல்லாஹ் நம் எண்ணங்களைத் தானே பார்க்கின்றான்! என்ற கேள்வி எல்லா இடங்களுக்கும் பொருந்துவதில்லை என்பதும் இந்த வசனத்திலிருந்து நமக்கு புரிணீறது.

யூதர்கள் தவறான எண்ணத்தில் தவறான பொருள்களில் பயன்படுத்திய சரியான சொல்லை, நல்ல எண்ணத்தில் நல்ல பொருளில் கூட பயன்படுத்த வேண்டாம் என்று அல்லாஹ் தடுத்துள்ளான் என்பதை கவனிக்கத்தவறக் கூடாது.

நபி(ஸல்) கூறினார்கள்:- தவரல்லாதவை (சொல்,செயல்) கலைக் கூட ஒரு அடியான் விட வேண்டும். அப்படிவிட்டால் தான் அவர் இறையச்சமுள்ளவராக முடியும். தவறுகளில் விழுந்துவிடும் ஆபத்தை விட்டு இதன்மூலம் அவர் விலகிவிடமுடியும் (நூல்: திர்மிதி, ஹாகிம், இப்னுமாஜா)

**மற்றொரு விளக்கம்:**

அண்ணல் நபி(ஸல்) அவர்களை அவமரியாதை செய்திட வேண்டும் என்று யூதர்கள் நினைக்கும்போது இருபொருள்தரும் சொல்லைக் கூறுவர். வெளிபடையில் நல்ல பொருளையும் மறைமுகமாக அவமதிக்கும் பொருளையும் எண்ணிக் கொள்வார்கள்.

அல்லாஹ்வின் சாபங்கள் ஏராளமாகப் பெற்ற அவர்கள், "எங்களை கவனியுங்கள்" என்று நபி(ஸல்) அவர்களிடம் கூற விரும்பும் போது 'ராஇனா' என்று கூறுவர். இதற்கு "எங்களை கவனியுங்கள் " என்று பொருள் இருப்பினும் கூல "ருஊனத்" என்ற வேற்ச்சொல்மூலம் வந்த "அப்பாவி" எனும் பொருளைநாடி இவ்வாறு கூறினர்.

இவர்களைப்பற்றி வேறொரு வசனத்தில் அல்லாஹ் இப்படி கூறுகிறான் யூதர்களில் சிலர் வேத வாக்குகளின் (கருத்தை) அதற்குரிய இடத்திலிருந்து புரட்டுகின்றனர்; (இன்னும் உம்மை நோக்கி, "நபியே! நீர் சொன்னதை) நாம் கேட்டோம், அதற்கு மாறாகவே செய்வோம்; இன்னும் (நாம் கூறுவதை) நீர் கேளும்; (நீர் கூறுவது) செவியேறாது போகட்டும்!" என்று கூறி, "ராயினா" என்று தங்கள் நாவுகளைக் கோணிக்கொண்டு (பேசி) சன்மார்க்கத்தைப் பழிக்கின்றனர்; (ஆனால் இதற்குப்

பதிலாக) அவர்கள் "நாம் செவியேற்றோம், இன்னும் (உமக்கு) நாங்கள் வழிப்பட்டோம்;" (இன்னும் நாம் சொல்வதை) கேளுங்கள்; எங்களை அன்போடு கவனியுங்கள் (உன்ளுர்னா) என்று கூறியிருப்பார்களானால், அது அவர்களுக்கு நன்மையாகவும், மிக்க நேர்மையாகவும் இருந்திருக்கும்-ஆனால் அவர்களுடைய குஃப்ரின் (நிராகரிப்பின்) காரணமாக, அல்லாஹ் அவர்களைச் சபித்து விட்டான்; ஆகையால், குறைவாகவே தவிர அவர்கள் ஈமான்கொள்ள மாட்டார்கள். (4:46)

ன்விரைவாக மரணம் வரட்டும்) என்று கூறினர். எனவே அதற்கு பதில் கூறும்போது "வஅலைக்கும்" (உங்கள் மீதும்) என்றுமட்டுமே பதில் கூறவேண்டும் என்று மார்க்கம் நமக்குக் கட்டளையிடுகிறது. நாம் கூறுவதை இறைவன் ஏற்றுக் (அவர்களை தண்டிப்பான்) கொள்வான். அவர்கள் கூறுவதை இறைவன் ஏற்பதில்லை. (நூல்: இப்னுகதீர்)

**வசனம் 105ன் விளக்கம்:**

இவ்வசனம் வேதக்காரர்களிலுமுள்ள இறைமறுப்பாளர்கள் (அதாவது இறுதி நபியை மறுபவர்களையும்) இணை வைபவர்களையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப்பார்க்கிறது, அதாவது இருவருமே கொள்கையில் வேறுபட்டிருந்தாலும் ஒரு விசயத்தில் ஒற்றுமையாகவே இருக்கின்றனர்.

முஸ்லிம்களுக்கு அல்லாஹ்விடமிருந்து எந்தவொரு நன்மையும் கிடைத்துவிடக் கூடாது என்று விரும்புகின்றார். இதில் அவர்கள் ஒற்றுமையாக இருகின்றார்.

முஸ்லிம்களுக்கு நல்லவை எதுவும் கிடைத்துவிடக் கூடாது என்பதே இவ்விரு குழுக்களின் விருப்பம். முஸ்லிம்கள் மீது பொறாமையும் தீய எண்ணமும் கொண்டவர்கள் இவர்கள். இந்த சன்மார்க்கம் முஸ்லிம்களுக்கு கிடைத்திருப்பதே அவர்களுக்கு கடும் வெறுப்பைத் தருகின்றது.

ஆனால் மகத்தான பேரருளாளனாம் அல்லாஹ் தன் அருள்களை யாருக்கு எங்கே எப்போது வழங்க வேண்டும் என்பதை அவனே முடிவுசெய்கிறான். யாரோ பொறாமைப் படுவதால் தான் முடிவுகளை அவன் மாற்றிக் கொள்வதில்லை என்பதே இந்தவசனத்தின் கருத்து.

தொடரும்...

இறைவனின் அழகிய வழிகாட்டுதல் அனைவருக்கும்!

மனிதன் இந்த உலகில் எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன்.
இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பைப் பெற்றிட கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, 4வது மாடி,**
**அறை எண் 7, சென்னை - 600 001.**

இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு அல்ல.

# நாட்டில் நடப்பது மோடி ஆட்சியா? மோசடி ஆட்சியா?

கடந்த நாடளுமன்றத் தேர்தலில், பீ ஜே பீ பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டு, பிரச்சாரம் சென்ற இடங்களிலெல்லாம் மோடியும், பீ ஜே பீயும் அதன் தலைவர்களும் அதிகமதிகமாக சொன்ன விசயம் கறுப்புப் பண மீட்பும், விலைவாசியும் தான்.

அப்பொழுது கூப்பாடு போட்ட, இப்பொழுது மோசடி என்று எண்ணுமளவு செயல்படுகிற மோடியின் கோசம் “நாங்கள் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், 100 நாட்களில் கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வந்து, ஒவ்வொருவருக்கும் 15 லட்சம் கொடுப்போம் என்பதே. அதாவது கேதர்நாத்தில் வெள்ளம் ஏற்பட்டு மண் எது? தண்ணீர் எது? என்று தெரியாமல் எல்லோரும் பதைத்துக் கொண்டிருந்த பொழுது, அவ்வளவு பெரிய, (மனித கற்பனைக்கெல்லாம் எட்டாத) மிகப் பிரமாண்டமான இடிபாடுகளுக்கிடையில், மிக அதிகமாக 10 நபர்கள் மட்டுமே அமரக்கூடிய வெறும் 80 இன்னோவா கார்களில் சென்று சூப்பர் மேன் அல்லது ஸ்பைடர் மேன் அல்லது அதை விடப் பெரிய மேன் போல சாதனை (!) புரிந்து 15,000 ஆயிரம் குஜராத்திரியர்களை தனியாக இனம் கண்டு, கரை சேர்த்தார் என்று சொன்னதைப் போல, நூறு நாட்களில் கறுப்புப் பணத்தைக் கொண்டு வருவதாகச் சொன்னார். அதைச் சிந்தித்துப் பகுத்துணர்ந்த இந்தியத் திருநாட்டு மக்களும் அவரின் பேச்சையும், கேதர்நாத்தில் அவர் புரிந்ததாகச் சொல்லப்பட்ட சாதனைகளையும், குஜராத்தில் 2002ல் அவர் நடத்திய சமூக சேவைகளையும் நம்பி அவரை அரியணையேற்றி இன்று அழகு பார்கின்றனர்.

**எங்கே அந்தக் கறுப்புப் பணம்?. எங்கே என்னுடைய பங்கு 15 லட்சம் ரூபாய்?.**

பதவியேற்று 150 நாட்களுக்குப் பிறகு உச்சநீதிமன்றத்தில் பதிலளித்த மோசடி அரசு, இரு வரிக் கொள்கையுள்ளதால் கறுப்புப் பணத்தை பதுக்கியுள்ள அந்த நபர்களின் பட்டியலைக் கூட தரமுடியாது என்று கூறிவிட்டனர். மேலும் வருமான வரித் துறையும், அமலாக்கப் பிரிவும் அயலக வங்கிகளுக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் கூறினர். அதற்கு அடுத்த நாள் உச்ச நீதிமன்ற ஆணையைத் தொடர்ந்து, கருப்புப் பணத்தைப் பதுக்கியுள்ள 627 பேர் அடங்கிய பட்டியலைக் கொடுத்துள்ளனர்.

இப்பொழுது நம்முடைய சந்தேகம், இருவரிக் கொள்கையிருந்தால், கறுப்புப் பணம் பதுக்கியுள்ளவர்களின் பணத்தையல்ல பெயரைக் கூட வெளியிடமுடியாது என்று உங்களுக்கு தேர்தலுக்கு முன்பே தெரியாதா? நன்றாகத் தெரிந்திருந்தும், ஏன் இந்திய மக்களை முட்டாளாள்களாக்கிணீர்கள்? உங்கள் பேச்சை நம்ப வைத்து இப்பொழுது ஏன் துரோகம் செய்கிறீர்கள்?

**அடுத்து, பெட்ரோலியப் பொருட்களின் விலை.**

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணையின் விலை சுமார் 30% வரை குறைந்துள்ளது (25.11.2014 நிலவரப்படி). ஆனால் இந்தியாவிலோ 15% வரை கூட குறைய வில்லை. அப்படியிருக்கும் நிலையில், பெட்ரோலிய மூலப் பொருட்களின் உற்பத்தி விலையை உயர்த்தி மேலும் பெட்ரோலியப் பொருட்களின் விலை குறையாதவாறு பார்த்துக்கொண்டீர்கள். ஏற்கனவே நோய்க்கு கசப்பு மருந்து கொடுக்கிறேன் பேர்வழி என்று புகைவண்டிக் கட்டணத்தை எட்டாத அளவிற்கு உயர்த்தியுள்ளீர்கள். நீங்கள் பொது மக்களுக்காகவா? அல்லது பெ றும் நி று வனங்களுக்காவா? பிரதமராயுள்ளீர்கள்? என்று தெளிவுபடுத்தி விட்டால், யாவருக்கும் குழப்பமில்லாமல் இருக்கும்.

**அடுத்து, அரசுடைமையாக்கப்பட்டுள்ள வங்கிகளின் வராக் கடன்.**

நீங்கள் ஏழை விவசாயிகளுக்கோ அல்லது மேற்படிப்பு படிக்க விரும்பும் மாணவர்களுக்கோ கடன் கொடுத்து, அரசுடைமையாக்கப்பட்டுள்ள வங்கிகளின் வராக் கடன் லட்சம் கோடிகளை (லட்சம் அல்லது கோடி என்பதல்ல லட்சம் கோடி. லட்சம் கோடி என்பது, குறைந்தது 14 பூஜ்யங்கள் உடையது) எட்டவில்லை. மாறாக, அவையெல்லாம் உங்கள் நண்பர்கள் அதாவது பெரு முதலாளி களிடமே குவிந்துள்ளது. அதைத் திரும்பப் பெறுவதைப் பற்றிய எந்த அக்கறையையும் மேற் கொள்ளாத நீங்கள், ஒரு சுதேசியாக, மேக் இன் இந்தியாவாக, உடனே ஒரு கோசம் எழுப்புகிறீர்கள். அதாவது பொதுத் துறைப் பங்குகளை விற்க

வேண்டும் என்னும் கோசத்தை. அதாவது கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவின் வளங்கள் சுரண்டப்பட்டால் கால தாமதமுண்டாகு மென்பதால், பொதுத் துறை நிறுவனப் பங்குகளை அதானி போன்ற உங்கள் நண்பர்களுக்குக் கொடுத்து சேவை செய்ய உங்கள் மனம் நாடுகிறதோ என்ற ஐயம் உண்டாகிறது.

**அடுத்து உங்கள் தலை தீபாவளி.**

கடந்த செப்டம்பர் மாதம், சிறுவர்கள் பொம்மைத் துப்பாக்கியில் பட்டாசுக்களை வெடிப்பது போல, பாகிஸ்தான் ராணுவத்தினர் இரவு பகலாக பீரங்கிகளால் காஷ்மீரைத் துளைத்துக் கொண்டிருக்கும் பொழுது, அதுவும் அந்த மாநிலமே கிட்டத்தட்ட வெள்ளத்தால் பாதி அழிந்து விட்டுள்ள நிலையில் ஒரு நாட்டின் பிரதமர் என்ற முறையில், கிஞ்சிற்றும் லஜ்ஜையில்லாமல் மிகவும் கூதுகலத்துடன் அங்கு சென்று தலைத் தீபாவளியைக் கொண்டாடிணீர்கள். உங்கள் தீபாவளியை எண்ணினால், வழி மட்டுமே மிஞ்சும்.

**அடுத்து உங்கள் அமெரிக்க விஜயம்.**

அமெரிக்கா செல்லும் முன் சுமார் 8,000 மதிப்புள்ள மருந்தின் விலையை சுமார் 1.1 லட்சம் ரூபாய் வரை நீங்கள் உயர்த்தி விட்டு சென்றதாக மூன்றாம் வீட்டு ராமும், நான்காம் வீட்டு ஆண்டனியும் சொன்னார்கள். நான் நம்பவில்லை. கரணம் நீங்கள் பொருப்பானவரென்பதால். பதவியேற்று முதல் வேலையாக பொறுப்புடன் நீங்கள் செய்த காரியம், டிராய் விதியை உடைக்க வேண்டுமென்பதற்காக நீங்கள் கூட்டிய அவசர அமைச்சரவைக் கூட்டமென்பது எனக்கு நன்கு தெரியும்.

**அடுத்து உங்கள் புவி, வரலாறு மற்றும் அறிவியலறிவு.**

நேபாளத்திற்கு நீங்கள் அரசு முறை பயணமாகச் சென்றிருந்த பொழுது, அந்த நாட்டின் பெயரை பூடான் பூடான் என்று மூன்று முறை கூறி உங்கள் புவியியல் அறிவையும், தேர்தல் பிரச்சார சமயத்தில் திருச்சி மற்றும் வேறு பல சுற்றுப் பயணங்களிலும் வரலாற்றுப் உண்மைகளைத் திரித்துக் கூறி உங்கள் வரலாற்று அறிவைப் பறை சாற்றிய நீங்கள், ஒரு மருத்துவமனை திறப்பு விழாவில், மகாபாரத காலத்தில் மரபணு மருத்துவமுறை இருந்திருக்கிறதென்று கூறி உங்கள் அறிவியலறிவை பறை சாற்றியுள்ளீர்கள். இதனைப் பொறுக்க முடியாத கரன் தப்பார் போன்றவர்கள், உங்களை விமர்சிக்கிறார்கள். நீங்கள் குஜராத் முதல்வராக இருக்கும் பொழுது, கரன் தப்பார் உங்களிடம் பேட்டி எடுக்கும் பொழுது குஜராத் இனப் படுகொலை குறித்த அவருடைய கேள்வியின் பொழுது நீங்கள் மைக்கை விசிறி எறிந்து விட்டு சென்றதை, நீங்கள் குஜராத் இனப் படுகொலை குறித்த அவர் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் சென்று விட்டதாக நினைத்து அதற்குப் பகரமாக இந்த விமர்சனத்தை அவர் முன் வைக்கிறாரோ?. ஆனால் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல அவசியமில்லை என்று தான் தாங்கள் வந்தீர்களோ? என்று எனக்குத் தெரியாது. எது எப்படியோ. கரன் தப்பாரின் குஜராத் இனப் படுகொலை குறித்த கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் தாங்கள் வரவில்லை என்று நான் இன்று வரை நம்புகிறேன்.

**அடுத்து உங்கள் வீரம்.**

சீனா நம் அண்டை நாடு. அருணாச்சலம். நம் நாட்டின் ஒரு மாநிலம். ஆனால் சீனாவின் பார்வையில் அருணாச்சலம் அவர்களின் நாடு போல அவர்கள் இந்திய எல்லையில் தினமும் அத்துமீறுகிறார்கள், சாலை அமைக்கிறார்கள். உடனே வீரமகன் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எப்படிக் கர்ஜித்தார் தெரியுமா? அவர்கள் சாலை அமைப்பதைத் தடுத்து நிருத்துவோமென்று கர்ஜித்தார் என்று யாரும் கற்பனை செய்து விடாதீர்கள். நம் அமைச்சரின் கர்ஜனை "அவர்கள் சாலை அமைத்தால், நம் வீரர்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள். அந்த சாலைகளைத் துவம்சம் செய்வார்கள். அதாவது அவர்கள் சாலை அமைப்பது வரை வேடிக்கை பார்த்து விட்டு, சாலைகள் அமைத்தவுடன் தகர்த்தெறிவதென்பது, உண்மையில் அவர் வீரமகன் தான் அவர். அந்தச் சமயம் பொறுப்பான வராகிய நீங்களோ எல்லோர் கையிலும் விளக்குமாரைக் கொடுத்து சுத்தம் செய்வதற்கு, உலகில் முதல் முறையாக எல்லோருக்கும் புதியதாகப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**அடுத்து உங்களின் பொருளாதாரப் பார்வை**

உங்கள் பொருளாதாரப் பார்வையைக் குறித்து அதிகம் விமர்சனம் செய்ய வேண்டாம். ஏனெனில் சுமார் இரண்டாயிரத்து இரு நூறு கோடி ரூபாய் முதலீட்டு டாடா நானோ தொழிற்சாலை திட்டத்திற்கு, சுமார் பத்தாயிரம் கோடி ரூபாய் வரை வரிச் சலுகைகளை வழங்கி அழகு பார்த்த "வைப்ரன்ட் குஜராத்தின்" (துடிப்பான குஜராத்) முடி சூடா மான்னராக இருந்து தான் உங்கள் வளர்ச்சியின் படியே ஆரம்பமானது.

திரேதா யுகத்தில், அதாவது சுமார் முப்பது லட்சம் வருடங்களுக்கு முன்னால், சுருங்கச் சொன்னால் கல் தோன்றி மண் தோன்றுவதற்கு முன்னரே நடந்ததாக

நீங்கள் நம்பும் ஒரு விசயத்தில், இந்தப் பாலம் போடப்பட்டது என்று கூறி பல்லாயிரம் கோடி ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்டப்பட்டுள்ள ஒரு திட்டத்தையே முடக்கி விட்டு, பல்லாயிரம் கோடி ரூபாய் அந்நியச் செலவாணியை மிச்சப்படுத்தும் சேது சமுத்திரத் திட்டத்தை முடமாக்கி விட்டு, பொருதார வளர்ச்சி தான் எங்களின் தாரக மந்திரம் என்று கொஞ்சம் கூட பதட்டமேயில்லாமல் காஷ்மீரின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியுள்ளீர்கள்.

**இறுதியாக உங்கள் மீது நம்பிக்கை.**

பல தேர்தல்களில் நீங்கள் போட்டியிடும் பொழுது, உங்கள் திருமண விசயத்தையே மறைத்துள்ளீர்கள். அப்படிப்பட்ட ஆதர்ச புருசனான உங்கள் நேர்மையை சந்தேகிப்பது, உங்கள் மீது நல்லெண்ணம் கொள்ளாமலிருப்பது, உங்கள் மீது குற்றம் சுமத்துவதெல்லாம், தேச துரோகமாகி விடுமோ என்ற காரணத்தால், சில பிரபலங்கள் விளக்குமாரைக் கையில் பிடித்திருப்பது போல, நானும் விளக்குமாரைக் கையிலெடுத்துக் கொண்டு, என்னுடைய தலைவிதியையும் நொந்து கொண்டு, சுத்தம் செய்வதற்கு பேருந்து நிலையம் செல்லலாமா? அல்லது புகைவண்டி நிலையம் செல்லலாமா? என்று சிந்தித்துக் கொண்டு, வேரு எந்த உலக சிந்தனையுமில்லாமல், ஸ்வாச் பாரத் (Clean India) அப்யானை மட்டும் சிந்தித்தவனாக..

**நமது நிருபர் முகம்மது ரிஸ்வான்**

**காஷ்மீரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக் கரம் நீட்டுங்கள்.**

**தொடர்புக்கு**

Charity Alliance
D-84 Abul Fazl Enclave-I,
Jamia Nagar,
New Delhi 110 025 India
Tel.: (+91-11) 2694 7483,
2695 2825, 2694 2883

## காவல் நிலையத்தில் தலித் இளைஞர் மரணத்தின் மர்மம்!

கடந்த அக்டோபர் மாதம் 2ம் தேதி மாலை இளையான்குடி காவல் நிலையத்தில் விசாரணையில் இருந்த தலித் இளைஞர் சேட்டு என்னும் மலைராஜ் (23) விசமருந்தி விட்டார் என்று போலீசாரால் கூறப்பட்டு,அவர் இளையான்குடி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் சிவகங்கை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது அவர் இறந்து விட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது. இது தொடர்பாக சம்பவ தினத்தில் சிவகங்கை மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளராக பொறுப்பிலிருந்த இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உடனே ஒரு காவல் துணை ஆய்வாளர் மற்றும் இரண்டு காவலர்களை பணியிடை நீக்கம் செய்துள்ளார். அதனைத் தொடர்ந்து அவர் மாவட்ட ஆட்சியருக்கு இழப்பீடு வழங்கக்கோரி கடிதமும் எழுதியுள்ளார்.

இறந்த அந்த நபரின் மீது ஏற்கனவே மூன்று முதல் தகவல் அறிக்கைகள் பதிவாகி, அவர் இறந்த அன்று 4வது முதல் தகவல் அறிக்கையும் பதிவாகியுள்ளது. அவருடைய சாவு குறித்து அதே காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யப்பட்டு குற்றவியல் நடுவர் விசாரணை துவங்கியுள்ளது. கடந்த அக்டோபர் மாதம் 6ம் தேதி The Hindu மதுரை பதிப்பில் பதிவான செய்தியின் பிரகாரம், மதியம் சுமார் 4மணியளவில் காவல் நிலையத்தின் உள்ளே மலைராஜைப் பார்த்த அவருடைய உறவினர் குமாருக்கு, மலைராஜை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அந்நிலையில் அரை மணி நேரத்திற்குள் மயங்கிய நிலையில் காவலர்கள் அவரை சுமந்து கொண்டு அருகிலுள்ள இளையான்குடி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். மருத்துவமனையிலும் அவருடைய உறவினர்கள் அவரை சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளனர். அதன் பிறகு அவர் சிவகங்கை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சென்ற உடனே அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்று கூறியுள்ளனர். மலைராஜ் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்று போலீசார் கூறுகின்றனர். இது தொடர்பாக அவர்களின் உறவினர்களிடம் பேசிய பொழுது, மருந்து குடித்து சாகுமளவு அவன் கோழை இல்லை. அவனுடைய சாவில் மர்மமுள்ளது. நீதிமன்ற நடுவரின் முடிவுகளுக்காகக் காத்திருப்போமேன்று கூறினர்.

தொடர்ச்சி கடைசிப் பக்கம்.........

# நூல் அரங்கம்

02.11.2014இல் இராமநாதபுரத்தில், ஜாதி ஒழிந்தது, நூல் அறிமுக விழாவை நடத்தினோம். அது 82ஆவது நூல் அறிமுக நிகழ்ச்சி! அதில் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த கலையரசன் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். வழக்கமான கேள்விகளைக் கேட்டார்கள். நாமும் வழக்கமான ஆனால் விவரமான பதில்களைத் தந்தோம்.

நாம் பதில்களைக் கூறும்போது, கம்யூனிஸ்டுகள் என்ற பொதுவுடைமைத் தத்துவத்தைச் சார்ந்தவர்கள், செய்யும் சிலபல நல்ல காரியங்களையும் சுட்டிக்காட்டினோம். குறிப்பாக, வாச்சாத்தியில் அவர்கள் செய்த தொண்டை சுட்டிக்காட்டினோம்.

சில பிரச்சினைகளைத் தீர்த்தாலும் பொதுவுடைமை தீண்டாமையை ஒழிக்காது. அதற்கு இஸ்லாம்தான் மருந்து என்றோம். நிகழ்ச்சியில் நூலாசிரியர் டி. எம். உமர் ஃபாரூக் அவர்கள், எப்படியோ இந்த விவாதத்தைக் கேள்விப்பட்டு, நாம் இனிக் கம்யூனிஸ்டுகள் என்ற பொதுவுடைமை வாதிகளின்பால் கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதன் காரணம், புதிதாக ஓர் நூல் வந்துள்ளது. அதில் கம்யூனிஸ்ட்டுகள் என்ற பொதுவுடைமைவாதிகள் மேற்கு வங்கத்தில் தீண்டத்தகாத மக்களைப் பெருமளவில் கொலை செய்தது விரித்துரைக்கப்பட்டுள்ளது. நூலை அனுப்பித் தருகின்றேன் என்றார்கள். நூலும் வந்தது. படித்தேன். நம்மையே நம்ப முடியாத அளவில் படுகொலைகள்.

17,000 நாமசூத்திர தீண்டத்தகாத மக்களைக் கொன்று புதைத்த வரலாறு விரித்துரைக்கப் பட்டிருந்தது. கொலைசெய்தது ஜோதிபாசு தலைமையிலான சி.பி.எம். அரசு. இந்த மக்கள் வங்காளதேசப் பிரிவினைக்குப்பின், தங்கள் சொந்த நிலபுலன்களை இழந்து இந்தியா வந்தவர்கள். சொந்தமான நிலபுலன்களோடு விவசாயம் செய்து செழித்து வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் பிரிவினையால் அனைத்தையும் இழந்து அகதிகளாக இந்தியா வந்தனர்.

இந்தியா வந்த ஏனைய மக்களை - அகதிகளை - வளமான பகுதிகளில் குடியமர்த்திய இந்திய அரசு, இந்த மக்களைப் புறக்கணித்ததற்கு ஒரே காரணம், அவர்கள் தீண்டத்தகாத மக்கள் என்பதுதான் என்பதை நூல் ஆழமாகச் சொல்லுகின்றது. இவர்கள், தாங்களாகவே மதிஜாப்பி என்ற தீவில் குடியேறித் தங்கள் உழைப்பிலேயே தங்களை நிலை நாட்டிக்கொள்ள முயன்றபோது முதலில், பொருளாதாரத் தடைகளுக்கும் பின்னர் கொடிபிடிகளுக்கும், இறுதியாகக் கொலைகளுக்கும் ஆளானார்கள். 17,000 தீண்டப்படாத நாமசூத்திரர்கள் மேற்கு வங்கத்தின் மதிஜாப்பித் தீவில் கொலை செய்யப்பட்டதை உலகத்திற்கே தெரியாமல் மறைத்துவிட்டார்கள்..(செய்திகளுக்கு மேலான இரும்புத்திரை)

மதிஜாப்பித் தீவுக்குச் சுற்றுப்பயணம் சென்ற 'ராசி மாலிக்' என்பவர், இந்த உண்மைகளை அகழ்ந்தெடுத்து, அவனி அறியச் செய்துள்ளார்கள். அதனை நேர்த்தியாகத் தமிழில் நண்பர் இனியன் இளங்கோ மொழிபெயர்த்துத் தந்துள்ளார்கள். நெஞ்சை நெகிழச் செய்யும் இந்த நூல், பூரம், ஜோதிபாசு பொதுவுடைமைவாதிகள் இவர்கள்மீது கொண்டிருந்த மதிப்பை மண்ணிலே சாய்த்துவிட்டது. தீண்டப்படாத நாம சூத்திர மக்களில் பெரும்பகுதியின் தொடக்க நாள்களில் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிம்களாக மாறினார்கள் என்ற செய்தியும் நூலில் பரவிக் கிடக்கின்றது.

அத்தோடு இந்தப் பகுதியில் தலித்-முஸ்லிம் - ஒற்றுமை வலுவாக இருந்தது. இந்த ஒற்றுமைதான் 1936களில் அரசியல் அமைப்புச் சபைக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களை அனுப்பிற்று. ஏனெனில், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் தனது சொந்த மாநிலமான மராட்டிய மாநிலத்திலிருந்து, அரசியல் அமைப்புச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அதற்குக் காரணம், சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள். அம்பேத்கருக்கு எதிராக அங்குள்ள - அதாவது, மராட்டிய மாநிலத்திலுள்ள பி.ஜி.கேர் அரசை முடுக்கிவிட்டிருந்தார். நூலின் பக்கம் - 20.

முஸ்லீம் லீக்-இன் வேட்பாளராக அம்பேத்கர் நிறுத்தப்பட்டிருந்தார் என்ற செய்தி ஏனோ மறைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், முஸ்லிம்கள் அம்பேத்கர் அரசியல் அமைப்புச் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட உதவியாக இருந்தார்கள் என்பது ஆங்காங்கே துளிர் விடுகின்றது.

மறைக்கப்பட்ட ஒரு பெரும் படுகொலையைப் பற்றிப் பேசிப் பொதுவுடைமை இந்தியாவுக்கு வந்தபோது ஆதிக்க ஜாதியின் ஆயுதமாகப் பயன்பட்டது என்பதைத் தெளிவுபடுத்துகின்ற வரலாற்றுப் பெட்டகம். அனைவரும் அவசிய. படிக்க வேண்டிய நூல்.இந்நூல் 'வேர்கள்' வெளியீட்டகத்தில் கிடைக்கும். விலை ரூபாய் 90/-

- M.G.M

# தனியார் மயமாகும் இரயில்வே!




*16.04.1853*இல் தொடங்கப்பெற்ற நமது இந்திய இரயில்வேதான் இந்திய அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய நிறுவனம். அரசுக்குப் பெருவாரியாக இலாபத்தைப் பெற்றுத்தரும் நிறுவனம். அத்தோடு, அதிகமாகப் பாட்டாளி மக்கள் *13* இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனம். ஒரு தனி அமைச்சரவை தேவைப்படும் அளவுக்குப் பெரிய நிறுவனம். தனிப் பட்ஜெட் உள்ள நிறுவனம்.

மக்களுக்குச் சேவை யே இலட்சியம் 'SERVICE IS OUR MOTTO' என்ற பீடிகையோடு தொடங்கப் பெற்றது. *1951*ஆம் ஆண்டு, இந்திய அரசுக்குச் சொந்தமாக்கப்பட்ட இரயில்வே தொடக்கநாள் முதலே இலாபத்தில்தான் ஓடியது.

ஆனால் காங்கிரஸ் அரசு, அதனை நஷ்டத்தில் ஓடுவதாக நாட்டு மக்களை ஏமாற்றி வந்தது. இலாபம் என்ன ஆயிற்று எனக் கேட்டபோது, இரயில்வேயில் நாம் நிறைய பணத்தை முதலீடு செய்திருக்கின்றோம். அந்த முதலீட்டைத் திரும்ப எடுத்துக்கொண்டோம். அதனால் உபரி எதுவுமில்லை என்றார்கள்.

*1977*இல் காங்கிரஸ் கட்சியின் பாரம்பரிய அரசு வீழ்ந்தபோது, ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்தது. பேராசிரியர் மதுதண்டவதே இரயில்வே அமைச்சரானார். இரயில்வே இலாபத்தில் ஓடுகின்றது என்றார். தொழிலாளர்களுக்குப் போனஸ் என்ற ஊக்கத்தொகையையும் வழங்கினார். தொடர்ந்து இரயில்வேயை இலாபத்தில் ஓட்டிக்காட்டினார்.

காலப்போக்கில் இப்போது இரயில்வே தொழிலாளர்கள் இருக்கும் 'கவுண்டர்'களில், தனியார்.அதன்பின் நஷ்டக் கணக்குக் காட்டும் பழக்கம்தூர்ந்துபோனது. அதுவரை பயணிகள் இரயிலிலிருந்து இலாபமில்லை. சரக்குப் போக்குவரத்தில் இலாபம் என்றார்கள். அதன்பின் *2004*இல் லாலுபிரசாத் யாதவ் இரயில்வே அமைச்சரானார். பயணிகள் போக்குவரத்தில் *13000* கோடிகளை இலாபமாகக் காட்டினார். இன்று தினமும் *2* கோடி பேர் இரயிலில் பயணிக் கின்றார்கள். இப்போது பயணிகள் போக்குவரத்தில் *37,500*கோடி இலாபமாகக் கிடைக்கிறது. லாலு பிரசாத் யாதவின் நிறுவாகத் திறமையை உலகமே வியந்து பாராட்டியது.

உலகில் (Business Management) என்ற வியாபார நிருவாகத்தைப் படித்துக் கொண்டிருந்த மாணவர்களெல்லாம் இந்தியா வந்து அவரிடம் பாடம் கற்றார்கள். அன்றிலிருந்து இரயில்வே பெரிய அளவில் இலாபம் ஈட்டும் நிறுவனமாக தொடர்கின்றது.

## இரயில்வேக்கு ஆபத்து

இப்படி இலாபத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இரயில்வேயைத் தனியாருக்குத் தாரை வார்த்துத் தந்திடும் பயங்கரத் திட்டம் ஒன்றை மோசடி அரசு செயல்படுத்த சதி செய்துள்ளது.

## சதிகள்

இரயில் டிக்கெட்கள் தனியார் மயமாகின்றன. அன்றாடம் பயணிகள், டிக்கெட் - பயணச்சீட்டுகள் - வழங்குவது தனியார் மயமாகின்றது. இந்தத் தனியார் நிறுவனங்கள் பயணச் சீட்டுகளை விற்பனை

APCO International

Leaders in Public Safety Communications

செய்ய தனிக் கட்டடங்கள் கட்டவேண்டும். இரயில்வே கட்டடங்களிலேயே இதனைச் செய்யலாம். காலப்போக்கில் இப்போது இரயில்வே தொழிலாளர்கள் இருக்கும் 'கவுண்டர்'களில், தனியார் நிறுவனத்தின் தொழிலாளர்கள் இருப்பார்கள். முன்பதிவு டிக்கெட்களிலும் (Reservation) இந்தத் தனியார்கள் தாராளமாக வரவிருக்கின்றார்கள். இந்தத் தனியார் நிறுவனங்கள் டிக்கெட்டுகளை விற்பனை செய்ய இரயில்வே கட்டணங்கள் மட்டுமல்லாமல், அவர்கள் எங்கே வேண்டுமானாலும் இந்த டிக்கெட்டுகளை விற்பனை செய்யலாம். இதில் வரும் வருமானத்தில் கால் பங்கு இரயில்வேக்கு, முக்கால் பங்கு தனியாருக்கு. ஆயிரக்கணக்கான இரயில்வே ஊழியர்கள் 'சர்பிளஸ்' என்று உபரி ஆக்கப்படுகின்றனர். புதிய வேலை வாய்ப்புகள் பெருமளவில் குறையும்.

**மோடியின் குஜராத்**

குஜராத்தில் மோடி ஆட்சி செய்து கொண்டிருந்தபோது, இதுதான் நடந்தது. பெரிய அளவில் முன்னேற்றம், முன்னேற்றம் என்று ஆப்கோ வே ர்ல்டு ஒய்டு (Apco World Wide) என்ற யூத நிறுவனம் விளம்பரங்களைச் செய்து கொண்டிருந்தது. ஆனால், வேலை வாய்ப்புகள் எள்மூக்கின் முனையளவு கூட வளரவில்லை. விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருந்தார்கள். இதுதான் இனி மொத்த இந்தியாவிலும் நடக்கவிருக்கின்றது. இதுபோன்ற மோடியின் சதிகளை மக்கள் மன்றத்தில் வைத்துத் தனியார் மயமாகும். இந்தியவைக் காக்க ஒன்றாய் எழுவோம்! தொழிலாளர்கள் போராடத் தொடங்கிவிட்டார்கள்.

**- M.G.M**

53 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி........

நமக்குள்ள தீராத சந்தேகம் என்னவெனில்,

1. போலீசாரின் விசாரணையில் இருக்கும் பொழுது, அவருடைய உறவினர் அல்லது அந்த நபர் விரும்பும் ஒருவர் அவரை சந்திக்கலாமென்று உச்ச நீதிமன்ற வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தும், குமார் என்பவருக்கு அனுமதி மறுத்தது ஏன்?

2. போலீசாரின் விசாரணையில் இருக்கும் பொழுது அவருக்கு எங்கிருந்து விஷம் கிடைத்தது?

3. அப்படி கிடைத்த விஷத்தை அருந்தும் வரை போலீசார் வேடிக்கைப் பார்த்தார்களா?

4. ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பொழுது, அவருடைய உறவினர்களுக்கு ஏன் அனுமதி மறுக்க வேண்டும்?

5. காவல் நிலைய பொறுப்பாளர் என்னும் ரீதியில் நிலைய ஆய்வாளர் தண்டிக்கப்படாதது ஏன்?

போன்ற வினாக்களுக்கு குற்றவியல் நடுவர் விசாரணையின் முடிவில் தான் விடை கிடைக்கும்.

நமது நிருபர் முகம்மது நிலவான்

**Owned and published by M.Gulam Mohamed from 52/1, Mannady Street, Manndady, Chennai - 600 001. Editor : M.Gulam Mohamed, Printed by M.Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.**

# விரைவில்......




வெளியீடு

சிராதுல் முஸ்தகீம் பதிப்பகம்

அல் ஹுதா எலக்ட்ரானிக்ஸ் - மொபைல்ஸ்

ழிளி.51, பி.வி. ஐயர் தெரு, மாஸ்கான் சாவடி

சென்னை - 600 001.

செல் : 98949 07531 , 89733 92393

Vaigarai Velicham Tamil Monthly, RNI : TNTAM/2008/25045 Postal Registraion No TN/CNIGPO/031/2014 - 16 R.DIS. NO. 1477/07 Posted at Egmore RMS patrika channai. Date of Publication : 30th of every month.


அல்லாஹ்வின் அழகியத் திருப்பெயரால்

# தைபா ஹஜ் சர்வீஸ்

வாருங்கள் சென்று வருவோம்! சரித்திரச் சின்னங்களை கண்டு வருவோம்!

# ஜியாரத், உம்ரா அழைப்பு




அல்லாஹ் கூறுகிறான் :
அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து இவற்றைப் பார்க்கவில்லையா? அவ்வாறு பார்த்திருந்தால் அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும் நல்லவற்றைச் செவியேற்கும் காதுகளும்



இறைத்தூதர்கள் புனிதப் போராளிகள் நபித்தோழர்கள் ஆகியோர் வாழ்ந்த இடங்களையும் இஸ்லாமிய வரலாற்றில் தனித்துவம் பெற்றுத்திகழும் சரித்திரச் சின்னங்களையும் நேரில் காணும் வாய்ப்பை தைபா ஹஜ் சர்வீஸ்

கொடுங்கோலன் ஃபிர் அவ்னின் உடல், பிரமிடுகள், தூர் சினாய் மலை, பைத்துல் முகத்தஸ், திருக் குர் ஆன் கூறும் குகை வாசிகள் வாழ்ந்த குகை, ஈராக், ஃபலஸ்த்தீன், எகிப்து, ஜோர்டான் ஆகிய

**தரமான தங்குமிடம், சுவையான உணவு,**
**கனிவான உபசரிப்பு, இபாதத்திற்கு ஏற்ற சூழல்.**

எமது ஹஜ் வழிகாட்டி
மௌலானா மௌலவி
K.M.இலியாஸ் ரியாஜி.

Þ‰Fò ê¾F Üó²èO¡ ÜƒWè£ó‹ ªðŸø GÁõù‹.

மேலும் முழுமையான விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்வீர்

## TAIBA HAJ SERVICE

6/8, Second floor, Rutland Gate 2nd Street, Thousand Lights, Chennai 600 006.
TelePhone : 044 2833 2770 / 2833 0771 / 99419 30786, Fax : 2833 2769,
Cell 94448 54653, E Mail : taibahajservice@gmail.com